கல்கி

KALKI 13.6.99 ரூ. 4.50



காஷ்மீர் குளறுபடி
ஃபெர்னாண்டஸ் பேட்டி



EXCLUSIVE!





உஜாலா

உஜாலாவின் துரித செயல்திறன் தண்ணீரில் உடனடியாக கரைகிறது மற்றும் துணிகளின் மீது ஆழமாக செயல்பட்டு பளபளக்கும் வெண்மையை சீராக தருகிறது. துணிகளை மீண்டும் துவைக்கும் போது உடனடியாக அழுக்குடன் வெளியே தள்ளப்பட்டு விடப்படுகிறது. உஜாலாவை திரும்ப உபயோகிக்கும் போது புதுப்பித்த வெளிச்சம் பரவுகிறது. ஓரல்-டாக்ஸிஸிடி, சரும அரிப்பு ஆகிய டெஸ்டுகளில் தீங்கற்றது மற்றும் சருமத்திற்கு ஹானியற்றது என சர்ட்டிபிகேட் பெற்ற விஞ்ஞான ரீதியான தயாரிப்பு ஆகும் உஜாலா.

எல்லாவற்றிற்கும் மேல், ஜோதி லேபாரட்டரீஸின் தயாரிப்பு அல்லவா உஜாலா!

உஜாலா

கேட்டு வாங்கும் போது உஜாலாவைப் போல் தோற்றமளிக்கும் மற்றொன்றுமல்ல தருகிறார்கள் என்பதை உறுதிக் கொள்ளுங்கள்

A Product of JYOTHY LABORATORIES, Mumbai.



இவருக்கு டாக்டர், எஞ்ஜினியர் ஆக ஆசையில்லை!

"நல்ல மார்க் வரும்ன்னு எதிர்பார்த்தேன். ஆனா இப்படி நாலு சப்ஜெக்ட்ல ஸ்டேட் ஃபர்ஸ்ட் வருவேன்னு கொஞ்சங் கூட நினைச்சுப் பார்க்கவில்லை!" நிறைந்த மகிழ்ச்சி பொங்கினாலும் மிகுந்த அடக்கத்துடன்- தமிழில் தத்தித் தத்திப் பேசும் செல்வி அர்ச்சனா குமார், கோவை ஸ்டேன்ஸ் மேனிலைப் பள்ளி 'ப்ளஸ் டூ' மாணவி. இந்த வருட அரசு பொதுத் தேர்வில் அதிகபட்ச பாடங்களில் (கணிதம், கம்ப்யூட்டர் சயின்ஸ், காமர்ஸ், அக்கௌண்டன்ஸி) மாநிலத்திலேயே முதலாவதாக வந்துள்ளார். நான்கு பாடங்களிலும் சதம்!

அப்பா 'குமார்' கோவை எல்.ஜி. நிறுவனத்தில் சீஃப் எக்ஸிகியூட்டிவ். பட்டதாரி அம்மா குடும்பத் தலைவி. அனைவருக்கும் பூர்வீகம் திருவண்ணாமலை. இருப்பினும் 1957-92 வரை பெங்களூர் வாசம். பிறகுதான் தொழில் நிமித்தம் கடந்த ஆறு வருடங்களாக கோவையில் 'செட்டில்டு'. அர்ச்சனாவுக்கு ஒரே தங்கை. ஆர்த்தி. எஸ்.எஸ். எல்.சி. எழுதி ரிசல்ட்டுக்காகக் காத்திருக்கிறார். அவர் அக்காவை விஞ்சுவார் என்கிற நம்பிக்கையுடன் காத்திருக்கும் பெற்றோர்கள்.

அர்ச்சனா பத்தாம் வகுப்பில் மாநில அளவில் ஆங்கிலத்திலும், கணிதத்திலும் மூன்றாவது மதிப்பெண் பெற்றிருந்தாராம்.

"அப்போது போலவே இப்போதும் ஏதாவது இரண்டு பாடத்தில் ஸ்டேட் ஃபர்ஸ்ட் வருவாள் என்றுதான் நினைத்தோம். இவ்வளவு தூரம் சிறப்பாக வந்தது எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சி. இத்தனைக்கும் அவள் எந்த நேரமும் புத்தகமும் கையுமாக அலைபவளுமல்ல.

"பரீட்சை



• பெற்றோர், தங்கையுடன் அர்ச்சனா

காலங்கள் தவிர்த்து மற்ற நாட்களில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் படித்தாலே அதிகம். பாடத்தில் எங்களிடம் சந்தேகம் கேட்பதும் ரொம்ப அபூர்வம். பரீட்சை நேரங்களில் ரொம்ப முடியலைன்னா மட்டும் எங்ககிட்ட புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொல்லிக் கேட்பாள்."

நம்மிடம் பூரிப்பு பொங்க முதலில் பேசியது அவருடைய அம்மா ரமா. வீட்டில் மகள்களின் படிப்புக்கு இடையூறாக இருக்கிற எந்த ஒரு விஷயத்திற்கும் உடனடி தடைபோட்டு விடுவாராம் அப்பா. அதாவது குழந்தைகள் படிக்கும்போது வீட்டில் டீவி. ஓடக் கூடாது. விருந்தினர்கள் வருகையைக்கூட மிகக் கட்டுப்பாட்டில்தான் வைத்துள்ளார்களாம். நான்கு பாடங்களில் முதலாவதாக வந்தாலும் – மற்ற இரண்டு பாடங்களில் – மொத்த மதிப்பெண்களிலும் மாநிலத்தில் முதலாவதாக வரவில்லையே என்கிற ஏக்கம் ஏதாவது அவரிடம்?

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என்ன, ஃபிரஞ்சுல (191/200) இன்னும் மூன்று மார்க் கூடுதலா வரும்னு நினைச்சேன். அது மட்டும்தான் மிஸ்ஸிங். எப்படீன்னு தெரியல. மற்றபடி நிறைய சந்தோஷந்தான்."

அர்ச்சனா இதுவரை தமிழே படிக்கவில்லை. ஹிந்தி, ஃபிரஞ்ச், ஆங்கிலம் நன்கறிந்த இவர் தமிழை வீட்டிலேயே கற்று வருகிறார். அதில் தேர்ந்து விட்டதாகவும் கூறுகிறார். ஏன் அப்படி? இவ்வளவு நல்ல மதிப்பெண் பெற்றுச் சாதிக்கும் மாணவிக்குத் தமிழ் மட்டும் கிட்டாது போனதன் பின்னணி பற்றி அவர் தந்தையே பேசினார்.

"பெங்களூரில் ஆறாவது வரை படித்தபோது அங்கே தமிழ் இல்லை. கன்னடமும், ஹிந்தியும் மட்டும்தான். அதனால் அங்கே ஹிந்தி மட்டுமே எடுத்துப் படிக்க வேண்டியிருந்தது. இங்கே (கோவை) வந்ததும் செயின்ட் ஃபிரான்சிஸ் கான்வென்டில் ஏழாவதில் சேர்த்தபோது அங்கேயும் தமிழ் இல்லை. அதனால் ஹிந்தியே எடுக்க வேண்டிய சூழல். அங்கிருந்து பதினோராம் வகுப்புக்கு ஸ்டேன்ஸ் பள்ளியில் சேர்த்தபோது அங்கே ஹிந்தி இல்லை. தமிழ் ஆரம்பத்திலிருந்தே எடுத்துப் படிக்காதவர்கள் திடீரென தமிழ் எடுத்துப் படிப்பது சிரமம் என்கிற பள்ளியின் பரிந்துரை. வேறு வழியில்லாமல் அங்கே கடந்த இரண்டு வருடமாக ஃபிரஞ்ச் எடுத்துப் படிக்க வேண்டியதாயிற்று. எந்தப் பாடம் எடுத்தாலும் ஸ்டேன்ஸ் பள்ளியைப் பொறுத்தவரை சிறப்பாகவே வந்திருக்க முடியும். அங்கே 'கோச்சிங்' அப்படி!"

"சரி அர்ச்சனா. இப்படி படிப்பில் முதலாவதாக வர உங்கள் பள்ளி ஆசிரியர்களின் பங்கு என்ன?"


"நான் 'குவார்ட்டர்லி'யிலிருந்தே ஸ்கூல் ஃபர்ஸ்ட் வந்துட்டிருந்தேன். அப்பவே நான் மார்க் 'ஸ்கோர்' பண்றதைப் பார்த்து எல்லா டீச்சர்ஸும் சொல்லி வச்ச மாதிரி நான் கண்டிப்பா நல்லா வருவேன்னு நம்பிக்கையூட்டினாங்க. பொதுவாக எங்க ஸ்கூல் விடுமுறை நாட்கள், விடுமுறை நாளாகவே இருக்காது. 'ஸ்டடி ஹாலிடே'ஸ்லயும் கூட ஆசிரியர்கள் வந்து விடுவார்கள். அங்கேயே போய்ப் படிச்சு சந்தேகம் இருந்தா அப்பப்ப டீச்சர்ஸ்கிட்ட கேட்டு நிவர்த்தி செய்துக்குவோம். கொஞ்சம் கூட சோர்வில்லாம எங்க சந்தேகத்தை நிவர்த்தி செய்வாங்க. ஸ்டூடன்ட்ஸ் எல்லோரும் நல்லா வரணும்னு அவங்க காட்டின அக்கறை, கொடுத்த ஊக்கம், உற்சாகம் அப்பா அம்மாவையும் விஞ்சும்."

அர்ச்சனாவின் எதிர்காலப் படிப்பு, அதற்கான திட்டம் எப்படி?

"மெடிக்கல், இன்ஜினியரிங்ல ஆரம்பத்திலிருந்தே துளிகூட விருப்பம் இருந்ததில்லை அவளுக்கு. அப்பா போலவே பி.காம் பண்ணணும். சி.ஏ. பண்ணணும். அதற்கப்புறம் எம்.பி.ஏவும் முடிக்கணும். இன்னும் நிறைய படிச்சுட்டே இருக்கணும். இதுதான் அவள் அடிக்கடி சொல்வது. அவள் விருப்பப்படியே பாதை அமைத்துக் கொடுக்கவும் முயற்சி செய்து வருகிறோம். 'சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் லிமிடெட்' ஸ்காலர்ஷிப்புக்கு அப்ளை பண்ணி அங்கேயே மேற்படிப்புக்கு அனுப்பவும் உத்தேசித்துள்ளோம். எது நன்றாக அமைகிறதோ அதையே தீவிரமாக யோசித்துச் செயலாக்குவோம். அவள் சின்னப் பொண்ணு. சரியாக வழிகாட்ட வேண்டியது எங்கள் கடமையல்லவா?" பெற்றோர்கள் சொன்னார்கள்.

அர்ச்சனாவுக்கு வீணை வாசிக்கத் தெரியும்; பள்ளியில் ஃபாஷன் பரேட், நாடகம் என்று மேடை நிகழ்ச்சிகளிலும் உலா வந்திருக்கிறார்.

சந்திப்பு, படங்கள்: **கா. சு. வேலாயுதன்**



''படம் லோ பட்ஜெட்னா அதுக்காக இப்படியா?''

''என்னாச்சு?''

''படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க வந்தவங்ககிட்ட எல்லாம் உண்டியலை நீட்டறாங்க!''

– அம்பை தேவா



ஷங்கர் படத்தில் புதுமுக நடனம்!

கார்ட்டூனிஸ்ட் நடனம் என்கிற நடராஜனை தமிழ்ப் பத்திரிகை வாசகர்களுக்குத் தெரியும். ஆனால் இந்த அறுபது வயது மனிதரை, தமது 'முதல்வன்' படத்தில் அர்ஜுனுக்கு அப்பாவாகத் திரையில் அறிமுகப்படுத்துகிறார் டைரக்டர் ஷங்கர். படத்திலும் இவர் கார்ட்டூனிஸ்டாகவே வருகிறார் என்பதுதான் விசேஷம். கதாபாத்திரத்தின் பெயர் : கார்ட்டூனிஸ்ட் நாராயணன். நாட்டு நடப்புகளை அன்றாடம் கார்ட்டூன்களாய்ப் போட்டு, முதலமைச்சரையே காட்டமாய் விமர்சிக்கும் கேரக்டர். ("இதற்கு மேல் வேண்டாமே!" என்று கூறி ரகசியம் பாதுகாக்கிறார் நடனம்).

கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக ஓவியராக - கார்ட்டூனிஸ்டாக இருந்து வரும் நடனத்துக்கு பள்ளிக்கூட நாடகத்தில் நடித்த அனுபவம் கூடக் கிடையாது!

"திடீரென்று நடிக்கிற வாய்ப்பு வந்தது எப்படி?"

"நடிக்கும் வாய்ப்பு என் வீட்டுக் கதவைத் தட்டவில்லை; என் ஆபீஸ் டெலிபோனில் ஒலித்தது. ஆமாம்! முதலில் என் ஆபீசுக்கு போன் செய்து, டைரக்டர் ஷங்கர் ஆபீசிலிருந்து பேசுவதாகச் சொன்னபோது, எனக்கு எதற்கு அங்கிருந்து போன் வரப் போகிறது என்று நினைத்து, 'ராங் நெம்பர்' என்று சொல்லி போனை வைத்து விட்டேன். மறுபடியும் போன் செய்து நேரில் வந்து பேச வேண்டும் என்றபோது வரச் சொன்னேன்.

"நேரில் வந்த ஷங்கரின் உதவி டைரக்டரிடம், 'நீங்கள், உண்மையில் என்னைத்தான் பார்க்க விரும்பினீர்களா? இல்லை தவறாக என்னிடம் வந்து விட்டீர்களா?' என்றுதான் கேட்டேன். கடைசியில் அவர், டைரக்டர் ஷங்கரின் படத்தில் அர்ஜுனின் அப்பாவாக நான் நடிக்க வேண்டும் என்றார்.

"டைரக்டர் ஷங்கரை நேரில் சந்தித்து விட்டு, என் முடிவைச் சொல்லுவதாகத் தெரிவித்தேன். ஷங்கர், 'அர்ஜுனின் அப்பா கேரக்டர் ஒரு கார்ட்டூனிஸ்ட். எனவே உங்களை நடிக்க வைக்க நினைக்கிறேன்' என்றார். 'எனக்கு கார்ட்டூன் போடத் தெரியுமே தவிர, நடிக்கத் தெரியாதே' என்றேன். 'இப்போது பேசுவது போல, பேசினால் போதும்; நடிப்பு ஒன்றும் அத்தனை கஷ்டமில்லை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்றார். நடிக்க ஒப்புக் கொண்டேன்."

"ஷூட்டிங் அனுபவம் எப்படி?"

"மைலாப்பூரில்தான் ஷூட்டிங். பதினைந்து நாட்களில் என் சம்பந்தப்பட்ட காட்சிகளையெல்லாம் எடுத்து விட்டார்கள். அர்ஜுன், என்னை ரொம்ப உற்சாகப்படுத்தினார். முதல் நான் ஷூட்டிங்கின் போது, ஒத்திகை வரை ஒழுங்காகச் செய் வேன்; லைட்களைப் போட்டு, ஆக்ஷன் என்றதும், டயலாக் மறந்து விடும். எனக்குக் கொஞ்சம் தர்மசங்கடமாகி விட்டது. ஆனால் மறுநாளே சமாளித்துக் கொண்டு விட்டேன்.

"இதுவரை சினிமா என்பதை ஒரு பொழுது போக்காக நான் திரையில் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், திரைக்குப் பின்னால், அது உருவாக்கப்படுகிற போது, எத்தனை நூறுபேருடைய உழைப்பும், புத்திசாலித்தனமும் தேவைப்படுகிறது என்று நேரடியாகப் பார்த்தபோது பிரமித்துப் போனேன்."

நடனத்தை, அந்த கேரக்டரில் நடிக்க வைக்கலாம் என்று டைரக்டர் ஷங்கருக்கு ஐடியா கொடுத்தவர் யார் தெரியுமா? எழுத்தாளர் சுஜாதா!

— மௌலி

"என்னிடமிருந்து எப்ப வேணும்னாலும் உனக்கு போன் வரும்மா. அதனால வெளிய எங்கேயும் போக வேணாம்மா. கோயிலுக்கு மட்டும் போய்ட்டு உடனே வந்துடும்மா. வந்ததும் போனுக்கு பக்கத்துலயே இருங்கம்மா!"– இதுதான் சரவணன் தமது தாயாரிடம் கடைசியாகப் பேசிய வார்த்தைகள்.

அந்தப் பகுதி முழுவதும் சோகம் ஒரு கரிய இருளைப் போலக் கவிந்து கிடக்கிறது. திருச்சி, பீமநகர், ராஜா காலனியில் அந்த வீட்டிலிருந்து வெளிவரும் ஒரு தாயின் கதறல் எல்லோரது இதயத்தையும் வந்து தாக்குகிறது.

உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள், முக்கியப் பிரமுகர்கள் என எல்லோரும் துயரம் நிறைந்த நெஞ்சுடனும் கலங்கிய விழிகளுடனும் வந்து வந்து பார்த்துவிட்டுப் போகின்றனர்.



• தாயும் சகோதரியும் கதறியழுகிறார்கள்...

மேஜர் சரவணன். அண்மையில் கார்கில் பகுதியில் வீரமரணமடைந்த 27 வயது இளைஞர்.

இராமேசுவரத்தில் பிறந்த சரவணனின் பிள்ளைப் பிராயமும் பள்ளிப் படிப்பும் தந்தையின் இராணுவப் பணி காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நடந்திருக்கிறது. பெல்காம், கண்ணூர், குருதாஸ்பூர், கயா எனப் பல நகரங்களில் பறந்து திரிந்த இந்தப் பட்டாம்பூச்சி, பூங்கா நகரமாகிய பெங்களூரில் வந்து தங்கியது.

அப்பொழுதுதான் அந்த முதல் சோகம் நடந்து முடிந்தது. இலங்கைக்குச் சென்றிருந்த இந்திய அமைதிப் படையில், சரவணனின் தந்தை ஏ.மாரியப்பனும் ஒரு இராணுவ வீரர். இலங்கை சென்று திரும்பி வந்தவுடன் பெங்களூர் நகரில் நடந்த சாலை விபத்து ஒன்றில் சரவணனின் தந்தை பலி ஆகிப் போனார்.

தலைவனை இழந்த குடும்பம் வேர்களை நாடி, சொந்த ஊரான திருச்சிக்குக் குடிபெயர்ந்து வந்தது. தூய வளனார் கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் படிக்கச் சேர்ந்தார் சரவணன். கல்லூரி நாட்களில் என்.சி.சியில் தீவிர ஆர்வம் காட்டினார். 1992ல் கல்லூரியில் மாணவர் மன்றத் தலைவராகச் செயல்பட்டார்.

பட்டப்படிப்பு முடிந்து, 1992ல் வெளியே வந்தவர் தனியார் நிறுவனம் ஒன்றில் சில காலம் மார்க்கெட்டிங் துறையில் பணிபுரிந்தார்.

தந்தையின் செயல்பாடுகளினால் இராணுவப் பணியில் ஆர்வம் மேலிட, தந்தையின் மறைவுக்குப் பின்னால் வாரிசு அடிப்படையில் வேலை கொடுக்கப்படும் சலுகையைத் தவிர்த்துவிட்டு, இராணுவப் பணிக்கென பொதுவாக நடத்தப்படும் தேர்வு எழுதினார்.

தேர்விலே இரண்டு முறை தோல்வியைத் தழுவி, மூன்றாவது முறை வெற்றி பெற்றார்.

உயிர் மண்ணுக்கு!



• மேஜர் சரவணன்

தந்தை விட்டுச் சென்ற தடத்தில் தனயனும் நடந்து சென்று, இராணுவத்தில் இணைந்து கொண்டார்.

1995-ல் பீகார் ரெஜிமென்ட்டில் செகன்ட் லெப்டினன்டாகப் பணியில் சேர்ந்தவர், நான்காண்டுகளில் லெப்டினன்ட், கேப்டன் எனப் படிப்படியாக பதவி உயர்வு பெற்று மேஜர் பதவிக்கு வந்து விட்டார்.

எல்லையில் கார்கில் பகுதிக்குப் புறப்பட்டுச் செல்லும் முன்னர் தாயார் அமிர்தவல்லியுடன் (திருச்சிக்கு) தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பேசினார். ஆனால், தாம் கார்கில் பகுதிக்குச் செல்லப் போவதை தாயாரிடம் அப்போது சொல்லவில்லை சரவணன்.

''என்னிடமிருந்து எப்ப வேணும்னாலும் உனக்கு போன் வரும்மா. அதனால வெளிய எங்கேயும் போக வேணாம்மா. கோயிலுக்குப் மட்டும் போய்ட்டு உடனே வந்துடும்மா. வந்ததும் போனுக்கு பக்கத்துலயே இருங்கம்மா!''– இதுதான் சரவணன் தமது தாயாரிடம் கடைசியாகப் பேசிய வார்த்தைகள்.

கார்கில் பகுதியில் தீவிரவாதிகளுக்கும், மேஜர் சரவணன் உள்ளடங்கிய குழுவுக்கும் நடந்த வீரப் போரில் நான்கு தீவிரவாதிகளை நேர் நின்று சுட்டுத் தள்ளியிருக்கிறார் மேஜர் சரவணன். அந்தக் கணத்தில் பின்புறமிருந்து பாய்ந்து வந்த தீவிரவாதிகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகிப் போனார் மேஜர் சரவணன்.

தொலைக்காட்சி செய்தி வாசிப்பைக் கேட்ட நொடியில் உணர்ந்து கொள்கிறார் சரவணனின் பெரியப்பா ரத்தினம். பெங்களூர் வாசம். உடனே திருச்சியில் இருக்கும் தம்பி மனைவிக்குத் தகவல் தந்துவிட்டு பறந்து வந்தார் திருச்சிக்கு.

குடும்பமே தாய்நாட்டிற்காக இராணுவத்தில் சேவை செய்துள்ளது.

மேஜர் சரவணனின் அப்பா ஏ. மாரியப்பன் லெப்டினன்ட் கர்னல். பெரியப்பா ரத்தினம் இராணுவத்தில் மேஜராகப் பணி புரிந்தவர். இரண்டு தங்கைகளில் ஒரு தங்கையான டாக்டர் சித்ரா இராணுவத்தில் சேர விருப்பம் தெரிவிக்க, அதனை குடும்ப நண்பர்கள் தடுத்து விட்டார்கள்.

பீகார் அரசு, சரவணன் குடும்பத்துக்கு ரூபாய் பத்து லட்சம் நிதியுதவியும், ஒருவருக்கு வேலைவாய்ப்பும் தருவதாக உறுதி அளித்துள்ளது. இராணுவத்தின் உயர்ந்த விருதான "பரம் வீர் சக்ரா" வழங்க வேண்டுமென குடியரசுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது பீகார் அரசு.

தமிழக முதல்வர், வீர மரணமடைந்த மேஜர் சரவணனின் குடும்பத்தாருக்குத் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார். ரூபாய் இரண்டு லட்சம் வழங்க உத்தரவிட்டு உள்ளார். திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் வை. மூர்த்தி நேரடியாகச் சென்று மேஜர் சரவணனின் தாயாருக்கு ஆறுதல் கூறினார்.

குடும்பத்தின் தலைமகன். அதுவும் ஒரே மகன். இழப்பு ஈடு செய்திட முடியாதுதான். மகனை இழந்து கண்ணீருடன் கதறும் தாய்க்கும், அண்ணனை இழந்து தவிக்கும் தங்கைகளுக்கும் எவ்வகையில் ஆறுதல் சொல்ல முடியும்? மனக் காயத்திற்குக் காலம் தான் களிம்பாக மாற வேண்டும்!

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

"கலைஞரோடு இருந்தால் இளமையோடு இருக்கலாம்!"

கலைஞரின் பவளவிழா நிறைவினைக் குறிக்கும் விதமாக, ஜூன் இரண்டாம் தேதி மாலை, சென்னை பனகல் பூங்காவில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அரசியல் உட்பட, பல்துறைப் பிரமுகர்களும் கலைஞரை வாழ்த்திப் பேசினார்கள். வாழ்த்துரைகளிலிருந்து....

பேராயர் எஸ்றா சற்குணம் : கலைஞர் மதவாதி இல்லை; மிதவாதி. கடவுளை கலைஞருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் கடவுளுக்குக் கலைஞரைப் பிடித்திருக்கிறது.

சி. சுப்ரமணியம் : நானும் கலைஞரும், எதிர்க்கட்சிகளில் இருந்த போதும், ஒருவரையொருவர் எதிரிகளாகப் பார்த்துக் கொண்டதில்லை. இது நம் நாட்டுக்குப் பெரும் சோதனையான காலகட்டம். இன்று நிலவும் மதவாதம், லஞ்ச ஊழல் இரண்டுமே ஒழிக்கப்பட வேண் டியவை என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. கலைஞர் அமைத்துள்ள அரசியல் கூட்டு பற்றிப் பலரும் விமர்சனம் செய்கிறார்கள். மதவாதத்தை எதிர்த்தும் ஒடுக்கலாம்; கூடவே இருந்தும் அதைத் தலையெடுக்காமல் செய்யலாம். இரண்டாவதைத்தான் கலைஞர் செய்திருக்கிறார். லஞ்ச ஊழலை ஒழிக்க, இது ஒரு சரியான ஏற்பாடு; இதனைப் பாராட்ட வேண்டும்.

முன்னாள் துணைவேந்தர் வி.சி. குழந்தைசாமி : உலகப் புகழ் பெற்ற பெஞ்சமின் பிராங்கிளினை அடுத்து, தாமஸ் ஜெபர்சனை, அமெரிக்க அரசு பிரெஞ்சு தூதராக நியமித்தது. ஒரு மூதாட்டி அவரிடம், "நீங்கள்தான் பிராங்கிளினின் இடத்துக்கு வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டபோது, ஜெபர்சன் சொன்னார், "பிராங்கிளினின் இடத்துக்கு நான் வந்திருக்கிறேன். ஆனால், அவர் (விட்டுச் சென்ற) இடத்தை நிரப்ப என்னால் முடியாது. கலைஞருக்குப் பின் யாரும் அவர் இடத்துக்கு வரலாம். ஆனால், அந்த இடத்தை யாராலும் நிரப்ப முடியாது.

கவிஞர் வைரமுத்து : 'வாழ்த்த வயதில்லை; வணங்குகிறோம்' என்று பலரும் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை வாழ்த்த வயது வேண்டாம். மனசு போதும். வள்ளுவர், கடவுளை வாழ்த்தினாரே, அவர் என்ன கடவுளை விட வயதானவரா? அவர் செய்து கொண்டுள்ள அரசியல் ஒப்பந்தம் பற்றி விமர்சிக்கிறவர்களுக்கு நான் சொல்வது இதுதான். அவர் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம், சிங்கம் மானுடன் செய்து கொள்ளுவது போல அல்ல; தங்கம், செப்புடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் போன்றது. தங்கத்தை வேண்டியபடி உருவாக்க, மெருகூட்டி அணிய செப்பு எத்தனை அவசியம்? இத்தகைய சமரசம்தான் கலைஞரின் சமரசம். கலைஞரின் வெற்றிக்கெல்லாம் காரணம் என்று நான் நினைப்பது, அவர் நிர்வாகத்தில் மூளையைப் பயன்படுத்துகிறார்; முடிவுகளை எடுக்க இதயத்தைப் பயன்படுத்துகிறார்.

ஆற்காடு வீராசாமி : நான் கடந்த முப்பதாண்டு காலமாக, தி.மு.க.



விலும், ஆட்சியிலும் பலவித பொறுப்புகளில் இருந்து வந்தாலும், நான் கலைஞரின் வேலைக் காரன் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்குக் கட்டளையிட்டுக் கொண்டே இருங்கள். நான் அந்த வேலைகளைச் செய்து கொண்டே இருக்கிறேன்.

பத்திரிகையாளர் சாவி : 'அம்மா' கட்டினாங்க முப்பத்து எட்டு பங்களா! கலைஞர் கட்டியிருக்காரு இருபத்தி ஏழு – சமத்துவபுரம். கலைஞர் எளிமையானவர். ஆயிரம் ஜோடி செருப்பு அவரிடம் கிடையாது. அவர் அணிந்திருக்கும் மோதிரம் அண்ணா போட்டது. மஞ்சள் சால்வை கட்சிக்காரர்கள் போட்டது. கலைஞர் வீட்டில் பால்கனி தரிசனம் கிடையாது. மாடிக்குப் போகக் கூட அந்தக் காலத்தில் கட்டின குறுகின படிக்கட்டுதான்! அதைக் கூட அகலப்படுத்திக் கட்டாத அளவுக்கு எளிமையானவர், கலைஞர்!

அப்துல் ரகுமான் : இங்கே வந்திருக்கும் நீதிபதிகள் தீர்ப்புச் சொல்ல வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். நீதிபதியின் தீர்ப்புகளை எதிர் நோக்கியுள்ள தலைவர் வேறு இடத்தில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இத்தனை நாள் தாமரை, நட்சத்திரம் பார்த்து மலர்ந்து கொண்டிருந்ததால் எனக்குச் சந்தேகம் இருந்தது. இப்போதுதான் சூரியனைப் பார்த்து மலர்கிறது தாமரை. இனி சூரியன் சொன்னால் தான் அது வாய் திறக்கும். கலைஞர் இன்னும் எத்தனை நாள் தமிழ்நாடு என்ற குண்டு சட்டிக் குள்ளேயே குதிரையோட்டிக் கொண்டிருப்பது? உங்களை 'கிங் மேக்கர்' என்று சொன்னால், ஏமாந்து விடாதீர்கள். 'கிங்' ஆகவே நீங்கள் ஆக வேண்டும்.

பேராசிரியர் அன்பழகன் : நீங்கள் எப்படி எப்போதும் இளமையாக இருக்கிறீர்கள் என்று பலரும் என்னிடம் கேட்பதுண்டு. அதற்கு நான் எப்போதும் கலைஞர் கூடவே இருப்பதுதான் காரணம் என்பேன். கலைஞர் கூட இருந்தால் எப்படி இளமையாக இருக்க முடியும் என்று கேட்பார்கள். நான் சொல்வேன்: "சுமைகளையெல்லாம் கஷ்டப்பட்டு அவர் சுமந்து கொண்டிருப்பார். நான் நிம்மதியாக அவர் கூட இருப்பேன். அதுதான் இளமை ரகசியம்."



சபாநாயகர் பழனிவேல் ராஜன் : தலைவர் கலைஞர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ, நான் தினமும் வணங்கும் அன்னை மீனாட்சியைப் பிரார்த்திக்கிறேன்!



முதல்வர் கலைஞரின் ஏற்புரை : நான் (தமிழ்நாடு என்ற) குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் குறிப்பிடுவது என்னை வருத்தமடைய வைக்கிறது. தமிழ் நாடு குண்டுச் சட்டியில்லை; நான் உண்ட சட்டி; இந்த சட்டியிலேயே இருந்து கொண்டு இந்த மக்களுக்கு உழைப்பதுதான் என் விருப்பம்.

பெரும்பான்மை சமூகத்தினர் சிறுபான்மைச் சமூகத்தினரை அரவணைத்துக் கொண்டு போக வேண்டும். சிறுபான்மை சமூகத்தினர் பெரும்பான்மைச் சமூகத்தினரை மதித்து நடக்க வேண்டும்.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**
படம் : **சௌந்தர்ராஜன்**

Exclusive Exclusive



ஜம்மு – காஷ்மீர் மாநிலம் கார்கில் பகுதி ராணுவ நடவடிக்கைக்குப் பிறகு மிகவும் விமர்சனத்திற்குள்ளாகியிருக்கிறார் பாதுகாப்பமைச்சர் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ். நீரோ ஃபிடில் வாசித்துக் கொண்டிருந்ததைப் போல் ராணுவ ரகசியத் துறை தகவல்கள் அனுப்பியும், இங்கு அரசியல் பண்ணிக் கொண்டிருந்து விட்டாரென்று தாக்கப்படுகிறார். இப்போது பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும், அதன் ரகசியத்துறையின் ஐ.எஸ்.ஐ.க்கும் நற்சான்றிதழ் வழங்கி விட்டுக் காவிப்படையினரின் கோபத்திற்குள்ளாகியிருக்கிறார். அமைச்சரவைக் கூட்டம்; ராணுவத்

காஷ்மீர் குளறுபடி : ஃபெர்னாண்டஸ் பேட்டி

தலைவர்களுடன் ஆலோசனை, ஜனாதிபதியுடன் சந்திப்பு, கார்கிலுக்கு விஜயம் என்று பரபரப்பாகச் சுற்றிக் கொண்டிருப்பவர், கிடைத்த இடைவேளைகளிலெல்லாம் இந்நிருபரின் கேள்விகளுக்கும் விடையளித்தார். "துணைக் கேள்விகளுக்கு அனுமதி கிடையாது; எதற்கும் இப்போது நேரம் இல்லை" என்று கூறி விட்டார்...

"ஜார்ஜ்ஜி, நமது ராணுவ ரகசியத் துறை முன்னதாகவே குறிப்புகள் அனுப்பியும் நீங்கள் செயலில் இறங்காமல் அரசியல் பண்ணிக் கொண்டிருந்து விட்டீர்கள் என்று எழும் விமர்சனம் பற்றி...?"

"தகுந்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது. தகவல்கள் நமக்கு வந்து சேர்ந்த மே ஆறாம் தேதி நாமும் தயாராகி விட்டோம். ஆனால் முதிர்ச்சியில்லாமல் தாக்குதலில் ஈடுபட்டு, சர்வ தேசப் பகையைச் சம்பாதித்துக் கொள்வதைவிட, நமது இடத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகளைத் துவங்கி, நமது மேலாண்மையை உலகுக்கு உணர்த்த வேண்டும். நம்முடைய பாதுகாப்புக்கு அவசியமானதை மட்டும் நாம் செய்கிறோம்; செய்வோம் என்பதை உறுதியான செயல்பாட்டின் மூலம் உணர்த்துவதுதான் சிறந்தது. இதையே நாம் இப்போது செய்திருக்கிறோம். இதில் ரகசியத் துறையின் தோல்வி, நமது மெத்தனம் போன்ற கேள்விகள் எழுவதற்கு இடமே கிடையாது. பாகிஸ்தான் ராணுவம் விஷமம் செய்வதாக நமக்குச் செய்திகள் வந்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் நாமும் நடவடிக்கைகளைத் துவங்கி விட்டோம்."

"நீங்கள் (பாகிஸ்தான் உளவுத்துறையான) ஐ.எஸ்.ஐ மற்றும் நவாஸ் ஷெரீஃப் அரசுக்கும் அந்நாட்டு ராணுவத்திற்கும் சம்பந்தம் கிடையாதென்று அவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கி விட்டீர்களே...?"

"இது எப்படி நற்சான்றிதழாகும்...? நான் சொன்னது பாகிஸ்தான் போன்ற ஒரு தியாக்ரடிக் (மதம் சார்ந்த) அமைப்பில் ராணுவம் அத்தேசத்தின் அரசியல் தலைமையை அவமதிக்கும் என்கிற உண்மையைத்தான்! அத்தேசத்தின் ஜனநாயகத்திற்குச் சோதனை வந்த போதெல்லாம் ராணுவம் அங்கு ஆட்சியைப் பிடித்திருக்கிறது. இன்றும் அரசியல் தலைமை ஏதாவது சொன்னால் அதை எதிர்த்து அவமதிக்கும் திறன் உள்ளதுதான் பாகிஸ்தான் ராணுவம். பாகிஸ்தான் அரசுக்கும், ஐ.எஸ்.ஐக்கும் தெரியாமல் (பாக்) ராணுவம் லாஹூர் ஒப்பந்தத்தின்போது, பல இந்திய விரோத

வேலைகளைத் துவங்கியிருக்கிறது. இது குறித்து நமக்கு வந்த 'நம்பத் தகுந்த' செய்திகளின் அடிப்படையிலேயே எனது கருத்து அமைந்தது. அச்செய்திகள் பாகிஸ்தான் நமது எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிக்க ஊடுருவுகிறது என்று உறுதிப்படுத்தியவுடன் ராணுவ ரீதியில் அதைச் சந்திக்க முடிவு செய்துவிட்டோம்."

"அப்படி மே 6 வந்த செய்திகள் என்ன...?"

"ராணுவம் சம்பந்தப்பட்ட எல்லாச் செய்திகளையும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அதேபோல் செய்திகள் வந்து என்னென்ன கூட்டங்கள் நடத்தினோம்; முடிவுகள் எடுத்தோம் என்று கூட்டங்களின் 'மினிட்ஸை' உங்களுக்கு நிமிடா நிமிடம் ரிப்போர்ட் அளிக்க முடியாது. நாங்கள் கோழைகள் அல்ல என்ற செய்தியை தெளிவாகவும், உறுதியாகவும் நமது நடவடிக்கைகள் மூலம் பாகிஸ்தானுக்கு உணர்த்திவிட்டோம். ஆக இப்போது அவர்கள்தான் பயந்து சமாதானத்திற்கு வருகிறார்கள். பாக். அந்நிய விவகாரத்துறை அமைச்சர் இங்கு வர வேண்டுகோள் விடுக்கிறார்."

"நீக்கப்பட்ட கப்பற்படை தளபதி விஷ்ணுபகவத் விவகாரத்திலிருந்து உங்கள் மீது முப்படைகளும் மேலதிகாரத் துறையும் (பீரோக்ரஸி) வெறுப்படைந்து விட்டன என்று கூறப்படுவது பற்றியும்..."

(இடைமறித்து) "அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. வேண்டுமானால் அவை பத்திரிகைகளுக்கு ஹேஷ்யங்களை எழுத ஒரு வாய்ப்புக் கொடுக்கலாம்; அவ்வளவு தான். நமது ராணுவம் விஷ்ணுபகவத் என்கிற ஓர் அதிகாரி சம்பந்தப்பட்ட விஷயத்திற்காகத் தேசத்தையே காட்டிக் கொடுக்கும் அளவுக்கு, தேசத்தின் எல்லைப் பகுதி ஆக்கிரமிக்கப்படுவதைச் சொல்லாமல் போகுமளவுக்குத் தேச பக்தியை இழந்து விடவில்லை; இழந்து விடாது. ஆட்சிகள் போகலாம். மாறலாம். ஆனால் தேசத்தின் இறையாண்மை போன்றவை சாஸ்வதமானவை. இதை நீங்கள் கிளப்புவதுகூடப் பத்திரிகை தர்மமல்ல."

"இப்போது நீங்கள் மீண்டும் ஊடுருவலுக்கு பாக். அரசின் ஆதரவிருக்கிறது என்ற நிலையை ஒப்புக்கொண்டு ஒரு பல்ட்டி அடித்திருக்கிறீர்களே..."

"ஒரு பல்ட்டியும் கிடையாது. தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கு பாக். அரசின் ஆதரவு இருந்திருக்கிறது என்று நமது அந்நிய விவகாரத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் கூறுகிறார். அவரது தகவல்களின் அடிப்படையை நான் ஆமோதித்தேன்."

"இப்போது நீங்கள் பாக். ராணுவத்தினரும், அவர்கள் ஆதரவில் இங்கு வந்து நமது நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்துவிட்ட தீவிரவாதிகளும் 'பாதுகாப்பாகத்' திருப்பி அனுப்பப்படுவர் (safe passage) என்று சொல்லி ஒரு பிரச்னையைக் கிளப்பியிருக்கிறீர்கள். இது நம் வீரர் ஒருவரைக் கைது செய்தும் அவரை திருப்பி அனுப்பாமல் யுத்த விதிகளை மீறி அநாகரிகமாகக் கொன்று, மேலும் ஒரு வீரரை இன்னும் கைதில் வைத்திருக்கும் பாகிஸ்தானிடம் சரணடைந்தது போலிருக்கிறது..."

"டிப்ளமஸி, சர்வதேச இயல் போன்றவற்றை நான் பத்திரிகைக்காரர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. யுத்த நிறுத்தம் என்பது நமது எல்லையை விட்டு எதிரிகள் விரட்டி அடிக்கப்படும்வரை கிடையாதென்று உறுதியாகக் கூறி விட்டோம். இந்நிலையில் நாம் பிடித்திருக்கும் பாக். ராணுவத்தினரை வேண்டுமானால் யுத்த விதிப்படி

• போரிடும் நமது வீரர்கள்...



திருப்பி அனுப்பலாம். நமது நிலத்துக்குள் அனுப்பப்பட்டவர்கள், பாக். ராணுவத்தினர் உட்பட, திரும்பிப் போக வேண்டும். அதற்காக நான் கூறியது 'safe passage'. இதில் நாம் எங்கு சரணடைந்தோம்? பாகிஸ்தான் தனது வீரர்களைத் திருப்பிப் பெற விரும்புவதை சூசகமாகத் தெரிவிப்பதற்காகவே நம்மிடம் 'சுடுவதை நிறுத்துங்கள்' என்கிறது.

முதல்வர் மகள்



சீதா ரவி எழுதும்
காதல் + மோதல்
நிறைந்த மினிதொடர்
அடுத்த இதழில் ஆரம்பம்

பாகிஸ்தான் அரசு இந்தத் தீவிரவாதிகளின் ஊடுருவலில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்கிற சந்தேகமும் இருக்கிறது. நேற்றுவரை நல்லவர்கள் போல் நடித்துவிட்டு இன்று இந்திய எல்லைக்குள் அனுப்பப் பட்டவர்களுக்காகப் பரிந்து பேசுவது இந்தச் சந்தேகத்தைத் தூண்டியிருக்கிறது. இந்நிலையில் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை."

''ஆனால் நீங்கள் ஒரு குரலிலும், ஜஸ்வந்த் சிங் மறு குரலிலும் பேசுவது, நமது ராணுவத்தின் மனோநிலையைப் பாதிப்பது போல் உள்ளதே...?''

"ஐயா இது நமது பூமி. இதில் அந்நியர் ஆக்கிரமிப்பென்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தச் செய்தி நமது ராணுவத்தினருக்கு மிக வலுவாகப் போய்ச் சேர்ந்திருக்கிறது. இதில் நமது வீரர்களின் மனோநிலை பாதிக்கப் பட்டதென்பதற்கே இடமில்லை. மேலும் ஜஸ்வந்த்சிங் சொல்வதும் பாகிஸ்தான் அமைச்சர் இங்கு வந்தாலும், பேச்சு வார்த்தை நடந்தாலும் நமது ராணுவ நடவடிக்கை, நமது எல்லைக்குள் நடப்பது நமது உரிமை என்பதுதான். இதில் எங்கே இரு குரல்கள் ஒலிக்கின்றன?"

"எப்படி இத்தகைய ஒரு பெரிய யுத்த கால நிலை திடீரென்று மூண்டது?"

"எப்போதுமே கோடையில் காஷ்மீரில் பனி உருகும்போது தீவிரவாதிகள், பாகிஸ்தான் வசமிருக்கும் காஷ்மீரிலிருந்து இங்கு உள்ளே வருவார்கள். இம்முறை முட்டாள்தனமாக பாகிஸ்தான் ராணுவத்தினர் சிலரும் நுழைந்திருக்கின்றனர். ஆக இந்நிலைக்கு அந்நாட்டு ராணுவமே காரணம். இந்திய நடவடிக்கைகள் முழுதும் நியாயமானவை. இந்த தர்ம யுத்தத்தில் நாம் வெல்வோம்."

ஜார்ஜின் பேட்டி பல அவசரங்களுக்கிடையே நடந்த ஒன்று. ஆனால் இப்போதுகூட இவரும் ஜஸ்வந்த் சிங்கும் வெவ்வேறு குரல்களில் பேசுவதாக இருக்கும் அபிப்ராயம் வலுத்துக் கொண்டு போகிறது. எல்.கே. அத்வானி, ஐ.எஸ்.ஐயின் ஒத்துழைப்புடனேயே ஆக்கிரமிப்பு நடந்துவிட்டதாகத் தமக்குத் தகவல்கள் வருவதாகக் கூறுகிறார். பி.ஜே.பி பத்திரிகைத் தொடர்பாளர் வெங்கையா நாயுடுவோ ஜார்ஜின் கருத்தை நிராகரித்திருக்கிறார். "ஜார்ஜின் கருத்து அவரது தகவல்களின் அடிப்படையில் வந்ததாகவே வைத்துக் கொண்டாலும், அதைச் சொல்வதற்கு இது தருணமல்ல" என்றார் நாயுடு. ஆக, இதிலும் பி.ஜே.பி.யும் ஒரு தோழமைக் கட்சியும் வேறுபாடின்றி அணுக வேண்டிய ஒரு முக்கியப் பிரச்னையில் முரண்பட்டிருக்கின்றன!

— வெங்கட்

அட்டை - ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ்
வண்ணப்படம்: **ஜெகதீஷ் யாதவ்**
கார்கில் வண்ணப்படம் நன்றி: **தினமலர்**



மெட்ரோ குடிநீர்த் தொட்டியைச் சுற்றிக் குடிநீரும் கழிவு நீரும்...

ஆலந்தூர் நகராட்சி பற்றி எழுதியதுமே 'எங்கள் அம்பத்தூர் பற்றியும் எழுதக் கூடாதா?' என்று கடிதங்கள் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் நிறையப் பேர் கேட்கவே, அம்பத்தூர் நகராட்சிப் பகுதிகளை வலம் வந்தோம். பலரையும் பார்த்துப் பேசினோம். இறுதியாக அம்பத்தூர் நகராட்சித் தலைவர் எம்.எம்.



கொரட்டூர் 11-வது சாலை

கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.)யைச் சந்தித்துப் பேசினோம்...

“நகராட்சிகளிலேயே பெரிய நகராட்சி இது. 19 கோடி ரூபாய் வருமானம் உள்ளது. ஆயினும் சாலை வசதிகள் மிக மோசமாக இருக்கின்றனவே, ஏன்?”

‘‘போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் புனரமைப்புச் செய்து வருகிறோம். அதனால்



• தெருவை ஆக்கிரமிக்கும் கம்பங்கள்...



தான் தெருக்களில் கவனம் செலுத்த இயலவில்லை. நீங்கள் குறிப்பிடுவதெல்லாம் தெருக்கள். நிச்சயமாக அவற்றையும் சீர்படுத்துவோம். சமீபத்தில்தான் சுமார் ஆறரைக் கோடி செலவில் 20 கி.மீ. அளவுக்கான சாலைகளுக்கு நல்ல முறையில் தார் போட்டிருக்கிறோம்.”

“தார் போட்டதில் ஒரு குற்றச்சாட்டு. இதற்கான காண்ட்ராக்டை நீங்கள்

நெடுஞ்சாலைத் துறைக்குத் தர வேண்டிய அவசியம் என்ன? காரணம், அங்கே அமைச்சர் ஆற்காடு வீராசாமியின் அக்காள் மகன் பணி செய்வதாகவும் அவருக்கு உதவும் வகையில்தான் 20 கி.மீ. சாலைக்காக ஆறரைக் கோடி ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத் துறைக்கு டெண்டர் விடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறதே?"

"நீங்கள் அந்தச் சாலைகளைப் பார்த்தீர்களா?"

"பார்த்தோம்."

"அப்படிப்பட்ட தரமான முறையில் தார் போடுவதற்கு செலவு ஆகத்தானே செய்யும்? குறைந்த செலவில் டெண்டர் விட்டு, ஒரேயொரு மழையில் சாலைகள் பழையபடி பல்லிளித்துக் கொண்டிருந்தால், அது மக்களுக்குத் தானே நஷ்டம்? அதனால்தான் நெடுஞ்சாலைத் துறைக்குத் தந்தோம். அதில் ரகசியம் ஏதும் இல்லை. யாருக்கோ உதவி செய்வதற்காகவும் அதை நாங்கள் செய்யவில்லை."

"கொரட்டூரில் மெயின் சாலையிலிருந்து 11-வது சாலை பிரிகிற இடத்தில் மழை நீர்க் கால்வாய் உடைந்து- வாகனங்கள் சென்றால் அதில் சிக்கிக் கொள்கிற ஆபத்தான நிலைதான் இருக்கிறது. இது போன்ற விஷயங்களுக்கும் முன்னுரிமை தர வேண்டாமா?"

"நிச்சயமாகத் தர வேண்டும். உடனே அதைச் சரி செய்ய ஏற்பாடு செய்கிறேன்."



• நகராட்சித் தலைவர்

"இது போல்தான் சில மாதங்களுக்கு முன்பு மற்றொரு பத்திரிகைக்காரர்களின் 'ஆக்ஷன் டீம்' வந்து, கொரட்டூரிலுள்ள 'மெட்ரோ வாட்டர் டாங்க்' இருக்கும் இடத்தைச் சுற்றி குடி நீரும் கழிவு நீரும் கலந்து தேங்கியிருந்தது பற்றி உங்களையும் அழைத்து வந்து முறையிட்டது. உடனே சரி செய்யப்படும் என்று நீங்களும் சொல்லியிருந்தீர்கள். ஆனால் இன்னமும் நிலைமை அப்படியேதானே இருக்கிறது! சரி செய்ததாகத் தெரியவில்லையே?"

"முன்பு இருந்ததை விட இப்போது

"குறைகளை மட்டுமே பார்க்காதீர்கள்!"



• கான்கிரீட் போடுவதில் தரம் தெரிகிறது



• சுவரை இடிக்கும் அரசமரக் கன்றுகள்

எவ்வளவோ மேல்!"

"முன்பு மழைக்காலம். இப்போது வெயில் காலம். அதனாலும் தேங்கியிருந்த நீரின் அளவு குறைந்திருக்கலாம். நீங்கள் சரி செய்துதான் குறைந்ததா என்ன?"

"அப்படியல்ல. நாங்கள் சரி செய்த பிறகுதான் குறைந்தது. இன்னும் முழுமையாகச் சரி செய்யப்படவில்லை என்பது உண்மைதான். விரைவில் சரி செய்து விடுவோம்."

"கொரட்டூரிலுள்ள கஸ்தூரி நகர் 2-வது தெருவில் புதிதாக ஒரு ஃபிளாட் கட்டப்பட்டு வருகிறது. அதன் செப்டிக் டாங்கின் ஒரு பகுதி தெருவுக்குள்ளே இருக்

கிறது. அதே நபர், சிவசக்தி நகர் 2–வது 3–வது தெருக்கள் சந்திக்குமிடத்திலும் ஒரு ஃபிளாட் கட்டி வருகிறார். அதன் காம்பவுண்ட் சுவர் தெருவை ஆக்ரமித்துக் கட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற ஆக்ரமிப்புகளை நகராட்சி கண்டு கொள்வதில்லையா?''

''நீங்கள் குறிப்பிடும் ஆக்ரமிப்புகள், இதுவரை என் கவனத்துக்கு வரவில்லை. உடனே நடவடிக்கை எடுக்கிறோம்.''

''கொரட்டூர் பகுதியிலுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்குத் தான் சென்னைக் குடிநீர் வருகிறது. அருகிலுள்ளவர்களெல்லாம் நகராட்சியின் அனுமதியின்றியே குறுக்கு வழியில் லஞ்சம் கொடுத்து இணைப்புப் பெற்றிருக்கிறார்கள். அப்படி கொடுக்கப்பட்ட 900 இணைப்புகளை இப்போது முறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை நீங்கள் நகராட்சியில் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது குறுக்கு வழியில் செல்பவர்களை ஊக்குவிப்பது போல் ஆகாதா?''

''இல்லை. அதற்கு அபராதமாக ஒரு தொகையை வசூலித்த பிறகுதான் முறைப்படுத்துவோம்.''

''அந்த அபராதம் மிகவும் அதிகமாக இருந்தாலல்லவா இது போன்ற தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்கும்?''

''உண்மைதான். ஆனாலும் குடிநீர் இணைப்புத் தர வேண்டிய பொறுப்பும் நகராட்சிக்கு இருப்பதால், ஓரளவுக்குத்தான் அபராதத் தொகை விதிக்க முடியும்!''

''உங்கள் வீட்டுக்குக் கூட இப்படி குறுக்கு வழியில்தான் குடிநீர் இணைப்பு கொடுத்துக் கொண்டதாகச் சொல்கிறார்களே?''

''இல்லை. முறைப்படிதான் கொடுத்திருக்கிறேன். இப்படி முறைப்படி குடி நீர் இணைப்புக் கொடுத்துக் கொள்வது கூடவா தவறு? என் வீடு இருக்கும் தெருவை வந்து பாருங்கள். அதுவும் குண்டும் குழியுமாகத் தான் இருக்கிறது. நான் முறைதவறி நடப்பவனாக இருந்தால், என் தெருவை நான் அப்படி வைத்திருப்பேனா?''

''உங்கள் செயல்பாடுகளை விமர்சித்த காரணத்தாலேயே தமது வீட்டுக்கான குடிநீர் இணைப்பை வேண்டுமென்றே நீங்கள் துண்டித்து விட்டதாக திருமதி விஜயா என்பவர் புகார் சொல்கிறாரே?''

''அவர் வீட்டு குடிநீர் இணைப்பை நாங்கள் துண்டிக்கவேயில்லை. அவர் கணவர் ஒரு காண்ட்ராக்டர். அவர்கள் கேட்கிற காண்ட்ராக்டுகளை நாங்கள் தராத கோபத்தில்தான் என்மீதும் பிறர் மீதும் அவர் பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்.''

''அம்பத்தூரிலுள்ள 'கருக்கு சுடுகாடு' என்கிற நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை பிளாட் போட்டு விற்க இருப்பதாகச் சொல்கிறார்களே?''

''இது ஆதாரமில்லாத குற்றச் சாட்டு.''

''கொரட்டூர் பகுதியில் மட்டும்தான் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு தரப்பட்டிருக்கிறது. நகராட்சியிலுள்ள மற்ற இடங்களில் இல்லையே ஏன்?''

''மற்ற இடங்களில் குடிநீரை லாரிகளில் எடுத்துச் சென்று வழங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது கிருஷ்ணா நதி நீர் வருவதற்கான வேலைகள் தொடங்கி விட்டன. அது வந்து விட்டால், பிற பகுதிகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க ஆரம்பித்து விடுவோம்.''

''உங்கள் நகராட்சிக் கட்டடம் அமைந்துள்ள காம்பவுண்டுக்குள்ளேயே பொதுக் கூட்டம் போடுவதற்கு வசதியான மேடையொன்று போடப்பட்டுள்ளது. ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடுவதற்காகக் கட்டப்பட்டுள்ள மேடையின் பின் பக்கச் சுவரில் அரச மரக்கன்றுகள் முளைத்துள்ளன. அதன் வேர்கள் அச்சுவரையே விரிசலடையச் செய்துள்ளன. இதைக் கூடவா அகற்ற முடியாது? இதற்கு என்ன செலவாகி விடப் போகிறது? நகராட்சியின் மந்தமான செயல்பாட்டுக்கு உதாரணம் போல் அல்லவா அது இருக்கிறது?''

''அதை நாங்கள் யாருமே கவனிக்கவில்லை. எப்படியாவது குறைகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நீங்கள் இருப்பதால்தான் உங்கள் கண்களுக்கு அது பட்டிருக்கிறது!''

''அப்படியல்ல. அதனருகில் உள்ள கூக்



'படம் ரொம்ப போர் அடிக்குதா, எப்படி சொல்றே?''

''ஹீரோ தூங்கறதையெல்லாம் கூட ஸ்லோ மோஷன்ல காட்டறாங்கின்னா பாரேன்!''

– வெ. ராஜாராமன்

கடைகளில்தான் உங்கள் நகராட்சி ஊழியர்கள் அனைவரும் சென்று டீ குடிக்கிறார்கள். நாங்களும் டீ குடிக்கச் சென்றபோதுதான் எங்கள் கண்களில் பட்டது."

"அதை உடனடியாக அகற்ற ஏற்பாடு செய்கிறேன். அப்புறம் ஒரு வேண்டுகோள். குறைகள் உள்ள பகுதிகளை மட்டுமே நீங்கள் சென்று பார்த்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். நிறைகள் உள்ள பகுதிகளையும்- நகராட்சி வேலை செய்து கொண்டிருக்கிற பகுதிகளையும் நான் உங்களுக்குக் காட்டுகிறேன். என்னோடு வாருங்கள்!" என்று எங்களை 27வது 30வது வார்டுகளுக்கு அழைத்துச் சென்று காட்டினார் நகராட்சித் தலைவர் கிருஷ்ணமூர்த்தி.

அந்தப் பன்னிரண்டு மணி உச்சி வெயிலில் நகராட்சித் தலைவரும் நாங்களும் பல தெருக்களையும் நடந்தே சுற்றிப் பார்த்தோம். சமீபத்தில்தான் அந்த வார்டுகளின் தெருக்களுக்கு கான்கிரீட் போட்டிருந்தார்கள். நிச்சயமாக அந்த கான்கிரீட் தெருக்களின் தரம், ஆலந்தூர் நகராட்சி போட்ட கான்கிரீட் தெருக்களின் தரத்தைவிட அதிகமாக இருந்ததை நம்மால் உணர முடிந்தது.

"இந்த கான்கிரீட்டின் தரத்தைப் பரிசோதித்த பிறகுதான் நாங்கள் காண்ட்ராக்டருக்கான பணத்தை வழங்குவோம்!" என்றார் எங்களோடு நடந்த நகராட்சி எஞ்ஜினியர்களில் ஒருவர்.

"எப்படி?"

"கான்கிரீட் போட்டுக் கொண்டிருக்கும் போது ஏதாவதொரு இடத்திலிருந்து சாம்பிள் எடுத்து அதை கிண்டியிலுள்ள இன்ஸ்டிடியூட்டுக்கு அனுப்புவோம். அவர்கள் தரச் சான்றிதழ் தந்த பிறகே காண்ட்ராக்டருக்கான முழு தொகையும் வழங்கப்படும்!" என்றார்.

"குடிநீரெல்லாம் ஒழுங்கா வருதாம்மா?"- நாம் பெண்களிடம் கேட்டோம்.

"வருதுங்க!" என்ற பெண்கள் நகராட்சித் தலைவரைப் பார்த்து, "தெரு லைட்டுங்கதான் சரியா எரியறதில்லீங்க!" என்றனர்.

"சீக்கிரம் சரி பண்ணிடுவோம்மா. கவலைப் படாதீங்க!" என்றவர் நம்மிடம், "மின்சார வாரியத்துக்குப் பணமெல்லாம் கட்டிட்டோம். அரசாங்க விஷயம்னா பல படிகளைத் தாண்டி வரணுமே. அதான் லேட். சீக்கிரம் விளக்குகளைப் போட்டுடுவாங்க!" என்றார் சேர்மன்.

கான்கிரீட் போடப்பட்டுள்ள எல்லாத் தெருக்களிலும் மழைநீர் வடிகால் கால்வாயைக் கட்டிய பிறகே கான்கிரீட் போடப்பட்டுள்ளதால் தெருக்கள் சுத்தமாக இருந்தன. தெருக்களிலிருந்து பிரியும் சின்னச் சின்ன சந்துகளுக்குக் கூட கான்கிரீட் போடப்பட்டிருந்தது ஆச்சரியமாக இருந்தது.

"ஓரிடத்தில் வேலையை ஆரம்பித்தால், அது முழுமையாக முடிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்கிறோம்!" என்றார் சேர்மன்.

இன்னோர் இடத்தில் "எங்களுடைய 'கொரட்டூர் சேவா சங்க' கட்டடத்தை நகராட்சிக்கு நாங்கள் இனாமாகக் கொடுக்க முன் வந்தும் அதைப் பொது நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ள நகராட்சி தாமதப்படுத்துகிறது!" என்று சிலர் முறையிட்டனர்.



"பேய்க்கதை மன்னன் பொன்னுசாமி குளிர் ஜுரத்தால் நடுங்குறாராமே!"

"பின்னே... இருட்டில் போய்க் கொண்டிருக்கும்போது, பேய்கள் அவருடைய கைகளைப் பிடித்து, 'எங்களைப் பற்றிய கதைகளை இவ்வளவு மோசமா எழுதறீங்களே'ன்னு கேட்டா, பயமா இருக்காதா?"

— ராஜிராதா

"நான் முன்பே சொன்ன மாதிரி, பொது விஷயம்-கவர்மெண்ட் விஷயம் என்பதால் எல்லாம் முறைப்படிதான் நடக்கணும். அதில் கொஞ்சம் காலதாமதம் ஆகத்தான் செய்யும். அதுதான் காரணம்!" என்றார் சேர்மன்.

கால்கள் ஓயும்வரை இரண்டு வார்டுகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு, முடிவாக ஆறரைக்கோடி செலவில் போடப்பட்ட தார்ச் சாலைகளையும் நமக்குக் காட்டினார் சேர்மன்.

சுமார் 20 கி.மீ. தூரத்துக்குத் தார் போட ஆறரைக் கோடி ரூபாய் செலவு பிடிக்குமா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அந்தச் சாலைகள் நமக்குத் தரமானதாகத் தோன்றின என்பது உண்மையே!

— இளங்கோவன்



ஆனந்தப் பூங்காற்றே...

கோவில் கோபுரம், சுப்ரபாத இசை, மணிச்சத்தம் ஆகியவற்றுடன் துவங்கி, ரயில்வே ஸ்டேஷன் க்ளைமாக்ஸுடன் முடிகிற வழக்கமான காதல் கதை.

பாட்டு வாத்தியார் கார்த்திக்கிடம், மீனா கல்மிஷமில்லாமல் பாட்டு கற்றுக் கொண்டு வருகிறார். கார்த்திக்கும் மீனாவுக்கு பாட்டு மட்டும்தான் சொல்லித் தருகிறார். வில்லனின் சூழ்ச்சியால், கார்த்திக் தம் பெண்ணுடன் (மீனா) ஊரைவிட்டு ஓடப் போகிறார் எனத் தவறாக நினைத்த விஜயகுமார், தமது ஆட்களை ஏவிவிட, அவர்கள் அநியாயமாய் கார்த்திக்கை கொலை செய்து விடுகிறார்கள். அப்பா விஜயகுமார் செய்த தவறுக்கு பிராயசித்தம் தேட, கார்த்திக்கின் (ஏற்கெனவே கல்யாண மானவர்) குழந்தையுடன் விதவைக் கோலம் பூண்டு, வைராக்யமாய் தனியே வாழ்கிறார் மீனா. இந்த ஃப்ளாஷ்பேக்கை அறிந்த அஜீத், மீனாவைத் தீவிரமாய்க் காதலிக்கிறார். அஜீத்தை விடாப் பிடியாய்க் காதலிக்கிறார் மாளவிகா. கடைசியில் அஜீத்துடன் மீனா சேர, மங்களம். இந்த சின்னக் கதையை, அழகாய் டெவலப் செய்து, சலிப்பேற்படுத்தாமல் சுவாரஸ்யமான திரைக்கதையாக்கித் தந்திருக்கும் இயக்குனர் ராஜ்கபூருக்கு ஒரு 'ஷொட்டு' கொடுக்கலாம்.

இளையராஜாவின் பழைய மெட்டுகளை நினைவூட்டினாலும், தேவாவின் இசையில் பாடல்கள் எல்லாம் சுகம். இன்னும் கொஞ்ச நாளில் ஹிட்டாகப் போகிற 'கானா' ஒன்றை தேவா பாடியிருக்கிறார். அது :

'உதயம் தியேட்டருல என்
இதயத்தைத் தொலைச்சேன்!'

'பாட்டுக்குப் பாலைவனம் பூ பூக்கும்', 'சோலைக் குயில் பாடும்' ஆகிய பாடல்களில் வைரமுத்து தமது அடையாளத்தைப் பதித்திருக்கிறார்.

கொஞ்ச நேரம் வந்து போனாலும், மனத்தில் நிற்கிற மாதிரியான பாத்திரத்தை கனகச்சிதமாய் செய்திருக்கிறார் கார்த்திக்.


அஜீத்குமார் அமைதி, அழுகை, ஆவேசம் என்று நடிப்பில் நாளுக்கு நாள் மெருகேறி வருகிறார்.

மீனாவும், மாளவிகாவும் வந்து போகிறார்கள்; அவ்வளவே!

வடிவேலு நம்மைச் சிரிக்க வைக்கிறார். என்றாலும், நடிகர் திலகம் ரேஞ்சுக்கு இவர் பண்ணும் ஓவர் ஆக்டிங், நெளிய வைக்கிறது.

கொஞ்சமும் மாறாத வழக்கமான கதையம்சம், செண்டிமெண்ட்ஸுடன் வந்திருப்பதால் ஆனந்தப் பூங்காற்றில் ஆனந்தத்தை அனுபவிக்க முடியவில்லை.

— கே.பி.எஸ்.





1999 ஜூன் 13
பிரமாதி வைகாசி 30
மலர் : 57
இதழ் : 46

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

உளவுத் துறையின் குளறல்; பெர்னாண்டஸின் உளறல்!


'**சீ**னாதான் நமது நம்பர் ஒன் எதிரி!' என்று சில மாதங்களுக்கு முன் ஜார்ஜ் பெர்னாண்டஸ் திருவாய் மலர்ந்தபோது பாகிஸ்தான் அரசாங்கமும் ராணுவமும் நம்மைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. கார்கில் பகுதியில் ஊடுருவலுக்கான திட்டம் அந்தக் கட்டத்திலேயே நிச்சயமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

பிரதமரின் லாஹோர் பஸ் பயணத்தை வரவேற்று, ஆடிப் பாடி, பாகிஸ்தானியர் கொண்டாடிய நேரத்தில் கார்கில் ஊடுருவல் சுறுசுறுப்பாக நிகழ்ந்து கொண்டிருந்திருந்திருக்கும்.

பாகிஸ்தான் இந்தியாவை முதுகில் குத்திவிட்டது. ஆனால் இந்திய அரசும் சட்டையை அவிழ்த்து, குத்துவதற்கு வசதியாக வெற்று முதுகைக் காண்பித்திருக்கிறது!

கார்கில் பகுதி ஆக்கிரமிப்பு இன்று நேற்று நிகழ்ந்திருக்கக் கூடியது அல்ல; திட்டமிட்டுப் பல மாத காலமாக மெள்ள மெள்ள ஊடுருவி ஆக்கிரமித்திருக்கிறது பாகிஸ்தான். துளித் துளியாக நடந்த ஊடுருவலைக் கண்டுபிடிக்கத் தவறிவிட்டது நமது உளவுத் துறை. அதிலும் எல்லைப்புறத்தைக் கண்காணிக்க இப்போதெல்லாம் எவ்வளவோ நவீன சாதனங்கள், உபகரணங்கள் உள்ள நிலையில், குறட்டை விட்டுத் தூங்கியதை மன்னிக்கவே முடியாது.

உளவுத் துறையின் தோல்வியை ராணுவ உயர் அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருக்கும்



போது, நமது பாதுகாப்பு அமைச்சர் மட்டும் முற்றிலும் எரிச்சலூட்டும் விதமாகப் பேசியிருக்கிறார்:

கார்கில் ஆக்கிரமிப்புக்கும் பாகிஸ்தான் அரசுக்கும் சம்பந்தமில்லை என்றும் பாகிஸ்தான் ராணுவம் தன்னிச்சையாகச் செயல்பட்டு இந்த ஆக்கிரமிப்பை நிகழ்த்தியிருக்கிறது என்றும் ஆதாரம் ஏதும் காட்டாமலே அதிமேதாவித்தனமாகக் கூறியிருக்கிறார். பாக் அதிபர் நவாஸ் ஷரீஃப் கூட தமது அரசாங்கத்துக்கு இவ்வளவு அவசர அவசரமாக வக்காலத்து வாங்கக் காணோம்!

மாறாக, கார்க்கில் ஊடுருவலை எதிர்த்துப் போரிடச் சென்றுள்ள நமது ராணுவத்தினர் பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தாக்குதலில் பலர் உயிர் இழந்திருக்கிறார்கள். விமானப் படை விமானி பாராசூட்டில் கீழே இறங்கிய பிறகு துப்பாக்கியால் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.


கார்கில் கைகலப்புக்கு பாகிஸ்தான் எல்லா வகையிலும் தயாராக இருந்திருக்கிறது!

இவ்வாறு இருக்கையில், பாதுகாப்பு அமைச்சரின் உளறலுக்கு ஒரே காரணம்தான் கூற முடியும்.

உண்மையைத் தமது வாயால் ஒப்புக் கொண்டால் அவர் ராஜினாமா செய்ய வேண்டியிருக்கும். அப்படிச் செய்வதற்கு விரும்பாத காரணத்தினாலேயே பெர்னாண்டஸ் மிகவும் சிரமப்பட்டு புனைந்துரைகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்.

உண்மையை விவரிக்கும் ராணுவ உயர் அதிகாரிகளின் விளக்கமோ பெர்னாண்டஸ் ராஜினாமா செய்ய வேண்டியவர் என்பதையே உணர்த்துகிறது:

இந்தோ-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இருக்கும் முக்கியமான நுழைவாயில் கார்கில். இப்பகுதி பதினேழாயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. கடுமையான குளிர் நிலவும் பகுதி. உயிருக்கே உலை வைக்கும் அளவுக்குக் குளிர் என்பதால் டிசம்பர் முதல் மே வரை இப் பகுதியிலிருந்து நமது ராணுவ வீரர்கள் விலக்கப்படுகிறார்கள். இதுநாள்வரை இப் பகுதியில் வால்தனம் செய்ய பாகிஸ்தான் முயன்றதில்லை. ஆனால் இப்போது சமயோசிதமாக



நுழைந்து விட்டது என்கிறார்கள் நமது அதிகாரிகள்.

அதே டிசம்பர் முதல் மே மாதம் வரையிலான காலகட்டத்தில்தான் கடுங்குளிரைப் பொருட்படுத்தாது பாகிஸ்தான் ஊடுருவல் நிகழ்ந்திருக்கிறது.

நமது ராணுவம் கடுங்குளிரில் உயிரைப் பணயம் வைத்து இப் பகுதியைக் கண் காணித்திருக்குமேயானால், இன்று தாக்குதலில் நிகழும் உயிர்ச்சேதங்களைத் தவிர்த் திருக்கலாம்.

புலனாய்வு, திட்டமிடல், செயல்படுத்துதல் என மூன்று நிலைகளிலும் பாதுகாப்பு அமைச் சகம் பயங்கரமாக சறுக்கியிருக்கிறது.

இதை ஒப்புக் கொண்டு ராஜினாமா செய்தால் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மக்களின் மதிப் பைப் பெறலாம். வருகிற தேர்தலில் மீண்டும் எம்.பி. ஆகலாம்.

ஆனால் வாஜ்பாய் காபந்து அரசை தர்மசங்கடத்துக்குள்ளாக்கவே பெர்னாண்டஸ் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறார்!

சுதந்தரமாக இயங்கி, ஊடுருவியவர்களை விரட்ட ராணுவத்துக்கு முழு அதிகாரம் தரப்பட்டுள்ளது என பிரதமர் அறிவித்திருக்கிறார். இரு தினங்கள் சென்று பாதுகாப்பு அமைச்சர், 'கார்கில் ஆக்கிரமிப்பாளர்கள் பின்வாங்க பாதுகாப்புத் தருகிறோம்...' என்று தன்னிச்சையாக அறிவிக்கிறார்.

பாகிஸ்தானுக்குத்தான் இதனால் ஆதாயம் என்பது ஒருபுறமிருக்க, ஏற்கெனவே பி.ஜே.பி. அரசைச் சாடிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகளுக்கு இந்த முரண்பட்ட நிலை மிகவும் சாதகமாகப் போய் விட்டது.

'ஆபரேஷன் விஜய்' நமது ராணுவ வீரர்களின் வீர தீரத்தால் வெற்றி அடையப் போகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பாதுகாப்பு அமைச்சகம் அந்த வெற்றியில் பெருமிதம் கொள்ள முடியாதபடி செய்து விட்டது பெர்னாண்டஸின் முதிர்ச்சியற்ற, பொறுப்பற்ற பேச்சு!

கம்ப்யூட்டரை நம்பும் சோனியா!



தமிழக வியூகங்களை வகுக்க இங்கு எல்லாக் கட்சியினருமே முனைந்து விட்டனர். குறிப்பாக சோனியா - ஜெ உறவு உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழக காங்கிரஸ் தலைவரான திண்டிவனம் ராமமூர்த்தி, மூப்பனார் அளவுக்குக்கூட சோனியாவுடன் தெளிவாகப் பேச (?) முடியாமல் திணறுவதாகத் தகவல்.

முதலில் ஷரத்பவாருக்கே போயஸ் தோட்டத்திலிருந்து பச்சை ஸிக்னல் காட்டப்பட்டதாம். தொடர்ந்து திராட்சைப் பழங்களுக்காகக் குதிக்க ஆரம்பித்தது மராட்டிய நரி. இப்போது மன்மோஹன் சிங் - ஏ.கே. ஆண்டனி சோனியாவின் புதிய தூதுவர்களாகச் சென்னை வனத்திற்கு அனுப்பப்பட, பதைத்துக் கொண்டிருக்கின்றனர், "தேசியவாத காங்கிரஸ்" அணியினர்.

ஆனால் சென்னை அம்மாவிடமிருந்து "டெல்லி அம்மாவின் தூதுவர்களைச் சந்திப்பது சும்மா ஒரு இதுக்குத்தான்" என்ற ரீதியில் ஃபீலர்கள் வர, இப்போது வீர மராட்டாவின் ஆலோசகர்கள் பயப்படுவது, சோனியாவுடன் பேரம் பேச ஜெயலலிதா தங்களை உபயோகப்படுத்திக் கொண்டு விடக் கூடாதே என்றுதான்! இதே பயம் தான் சோனியா அணியினரையும் கவ்விக் கொண்டிருக்கிறது. "பார், பார் பவார் பார்" என்று எங்கே தங்களுக்குத் தொகுதிகள் குறைக்கப்பட்டு விடுமோ என்று சோனியா அணி, மன்மோஹன் - ஆண்டனி தூதுக் குழுவுக்குப் பேரம் பேச கொத்தவால்சாவடி லெவலில் பயிற்சி கொடுத்து அனுப்புகிறது என்றார் ஒரு கதர்ச்சட்டைக்காரர்.

பவார் கட்சி ஆந்திராவில் அண்ணா தெலுங்கு தேசத்துடன் அணி சேர முயற்சிகளைத் துவங்கியிருக்கிறது. ராமா ராவின் மகனுக்கு நல்ல கூட்டம் சேர்வதாக இங்கு வரும் தகவல்கள், 'அமர்-அக்பர்-ஆண்டனி'களை (பவார், அன்வர், சங்மா) உற்சாகப்படுத்தியிருக்கிறது. ஆக தமிழ் "அண்ணா" கட்சி நாமம் சாத்தி விட்டால், தெலுங்கு அண்ணாவாவது கை கொடுப்பாரென்று ஒரு நம்பிக்கை இந்த மும்மூர்த்திகளுக்கு.

இங்கு ஜெ-பவார் கூட்டு வந்து தொலைத்து விடாதா என்று மூப்பனார் ஏங்குவதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. அப்போது தாங்கள் தலைமை தாங்கும் த.மா.கா. - சோ. காங்கிரஸ் (அதாவது சோனியா காங்கிரஸ்) - இடதுசாரி முன்னணி ஜாம் ஜாமென்று களத்தில் இறங்கும் என்று ஒரு கணக்கு. எனவேதான் மூப்பனார், சோனியா கட்சியினர் இப்போது ஒரு தீர்மானமான அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜெ.யைத் தாக்குப் பிடிக்க முடியுமா போன்ற சோனியாவின் கேள்விகளுக்குத் திண்டிவனத்தாரிடம் சரியான அரசியல் அலசல்கள் இல்லை. சோனியா விரும்புவதோ ராஜீவைப் போல் கணிப்பொறி அலசல்கள், பல்வேறு அரசியல் சூழல்கள் பற்றிய கம்ப்யூட்டர் விளக்கங்கள்; ஒரு கேள்விக்கு ஒரு பதிலென்றில்லாமல் வெவ்வேறு விதமான அலசல் பதில்கள். இதற்கெல்லாம் தமிழக காங்கிரஸ் கட்சி தயாரா என்று தெரியவில்லை.

சொல்லப் போனால் சோனியா இப்போது நம்புவது பலரைப் பற்றி ராஜீவ் வைத்து விட்டுப் போயிருக்கும், கணிப்பொறி ஞாபகச் சில்லுகளில் உறங்கும், குறிப்புகள். அதாவது இன்னார் வருகிறார் என்றால் அவர் அழுத்துவது ராஜீவின் பிரத்தியேகக் கணிப்பொறியின் விசைகளை. வினாடிகளில் அன்னாரைப் பற்றிய சகல விவரங்களும் பூர்வோத்திரத்துடன் கணினித் திரையில் விரியும். இந்தக் குறிப்புகளை வைத்தே வருபவருடன் டீலிங் வைத்துக் கொள்கிறார் சோனியா. ராஜீவின் கணிப்பொறிக் குறிப்புகளில் பவாரைப் பற்றி சந்தேகாஸ்பதமான விவரங்கள் இருந்ததனாலேயே அவரை அதிகமாக அண்ட விடவில்லை சோனியா என்று தகவல்கள்!

— வெங்கட்

தலைநகர் தபால்

சமீபத்தில் கோவையில் போலீஸ் குடியிருப்பில் வெடிகுண்டு வைத்த நான்கு தீவிரவாதிகளைப் போலீஸ் பிடித்திருக்கிறது. தலைமறைவாக இருக்கும் ஜாகிர் உசேன் என்ற தீவிரவாதியிடமிருந்து, பாக்ஸ் வெடிகுண்டுகளைப் பெற்று மதுரையிலிருந்து கோவைக்கு பஸ்ஸில் வந்து வெடிகுண்டுகளை வைத்துள்ளனர் இந்தத் தீவிரவாதிகள். இது நமக்கு அதிர்ச்சியளிக்கிறது.

“இது ஒரு 'தனியான' சம்பவம்தான். தமிழகத்தில், அல்-உம்மாவின் தீவிர உறுப்பினர்கள் என்று பார்த்தால் ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் கூட இருக்க முடியாது. எங்களது தீவிர நடவடிக்கையால், கோயம்புத்தூர் குண்டு வெடிப்பில் தொடர்புடைய பெரும்பாலோரைக் கைது செய்து விட்டோம். அது போலவே பல்லாண்டுகளாகவே தேடப்பட்டு வரும் 24 முஸ்லீம் தீவிரவாதிகளில் 17 பேரைப் பிடித்து உள்ளே வைத்திருக்கிறோம். இந்த வெடிகுண்டு விவகாரம் தீவிரவாதிகளின் தொடர் நடவடிக்கைகளின் பிரதிபலிப்பு இல்லை. அவர்கள் விரக்தியடைந்து செய்யும் வெத்துவேட்டு நடவடிக்கைகள். இந்தச் சம்பவங்களில் ஈடுபட்ட எல்லோரையும் மிக விரைவில் கைது செய்து விடுவோம்!” என்கிறார் ஓர் உயர் போலீஸ் அதிகாரி.



மறுபுறம், முஸ்லீம் தீவிரவாதிகளை வேட்டையாடுவதில் போலீஸ் பின்புறமாக கைகளைக் கட்டிக் கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது என்கிறார்கள் அதிகாரிகள். களத்தில் தீவிரமாகக் குதித்து, சோதனை, தடுப்புக் காவல் என்றால் 'அப்பாவி முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்' என்று எதிர்க்கட்சிகள் அறிக்கை விடுகின்றன. உடனே ஆளும் கட்சியும் 'கொஞ்சம் மெதுவாப் போங்க' என்று போலீஸுக்கு சொல்ல வேண்டியிருக்கிறது. “எல்லாம் பாழாய்ப் போன வோட்டுக்காகத்தான்” என்றார் ஓர் அதிகாரி.

அல்உம்மா முஸ்லீம் முன்னேற்றக் கழகம் மற்றும் அப்பாவி முஸ்லீம்கள் ஆகியோரை இனங் கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்கிறார்கள், போலீஸ் அதிகாரிகள். அல்-உம்மாவிலிருந்து நிதி விவகாரத்தில் தகராறு ஏற்பட்டு ஜனநாயகப் பாதைக்கு வந்து விட்டதாக முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தினர் சொல்லி வந்தாலும், அவர்கள் இருவரும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்தான் என்று மத்திய புலனாய்வுத் துறை சொல்லுகிறது. த.மு.மு.க.வில் 10000 பேர் இருக்கிறார்களாம்.

சமீபத்திய சம்பவங்களில் தொடர்ச்சியாக பல நகரங்களில் போலீஸ் நூற்றுக் கணக்கானவர்களைக் கைது செய்தது. தமிழகத்தின் தெற்கத்திய நகரைச் சேர்ந்த அரபுக் கல்லூரி முதல்வர் ஒருவரை போலீஸ் கைது செய்தது. உடனே அவர் மிகவும் கண்ணியமானவர்; அவரைக் கைது செய்தது கொஞ்சமும் சரியல்ல' என்று அரசுக்கு உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தந்திகள் வந்தன. ஆனால் உள்ளூர் இன்ஸ்பெக்டரோ, 'அவருக்கு வெளிநாட்டிலிருந்து ஏகமாய்ப் பணம் வருகிறது. தீவிரவாதச் செயல்களுக்கு நிதி உதவி செய்வதற்கான வாய்ப்பு உண்டு' என்று அடித்துச் சொல்கிறார்.

ஆயினும் “சென்னை கோட்டையிலிருந்து டி.ஜி.பி. அலுவலகம் வழியாக down the line போகும் முன்னெச்சரிக்கைகள், ஆலோசனைகள் உள்ளூர் போலீஸாரால் காற்றில் பறக்க விடப்படுகின்றன” என்கிறார் கோட்டை அதிகாரி ஒருவர்.

இந்த வெடிகுண்டு சம்பவங்கள் தொடர்பாக இருநூறுக்கும் மேற்பட்ட இந்துக்களைத் தமிழகமெங்கும் போலீஸார் கைது செய்திருப்பதும் சென்னையில் உள்ள உயர் அதிகாரிகளை ஆச்சர்யப்பட வைத்திருக்கிறது. ஆனால் அல்உம்மா, த.மு.மு.க. வன்முறையாளர்கள் ஆகியோரைத் தவிர மற்ற எல்லோரையும் விடுதலைச் செய்யச் சொல்லி விட்டது அரசு.

சிறையில் உள்ள அல்உம்மா தீவிரவாதி

கள் கொடுமைப்படுத்தப்படுவதால் தான் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டன என்று அந்தந்த இடங்களில் போடப்பட்ட பிட் நோட்டீஸ்களில் சொல்லப்பட்டிருந்தாலும், இந்த விவகாரத்தில் கொஞ்சம் அரசியல் பொடியும் கலந்திருக்கலாம் என்கிறார்கள் அதிகாரிகள்.

'பா.ஜ.க. அணியில் தி.மு.க. இணைந்திருப்பது குறித்து உண்டான ஆத்திரத்தின் வெளிப்பாடுதான் இந்த வெடிகுண்டு விவகாரம் என்பது மேம்போக்கான காரணமாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் இது போன்ற செயல்கள் மைனாரிட்டி சமூகத்தினரைத் தனிமைப்படுத்தி, மெஜாரிட்டி சமூகத்தினரை ஒன்று படுத்தி விடும் என்று தீவிரவாதிகளுக்குத் தெரியும். அப்படிப்பட்ட நிலையில் தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற வாய்ப்புக் கூடுமே! ஆகவே தீவிரவாதிகள் தேர்தல் சமயத்தில் இது போன்ற செயல்களில் இறங்கியிருப்பது கொஞ்சம் ஆச்சர்யமாகக் கூட இருக்கிறது'' என்கிறார்கள் அதிகாரிகள்.

அல்உம்மா தவிர வேறு சிறு சிறு முஸ்லீம் அமைப்புகள் தமிழகத்தில் உருவாகிச் செயல்படுகிறதா என்று பார்க்க வேண்டிய பொறுப்பும் போலீஸுக்கு இருக்கிறது. ஐதராபாத்தில் செயல்படும் சில தீவிரவாத குழுக்களின் உறுப்பினர்கள் தமிழகத்திற்கு வந்து தூண்டி விடுகிறார்களோ என்ற சந்தேகமும் இருக்கிறது.

திட்டப்பட்ட சதித் திட்டத்தின் பின்னால் பாக். உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ நிச்சயமாக இருக்கிறது என்பதை மத்திய அரசின் பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகள் ஒப்புக்கொள்வதாக டெல்லி வட்டாரங்கள் கூறுகின்றன. வடக்கே ஆக்கிரமிப்பு, தெற்கே தீவிரவாதம் என்று இரு முனைகளிலும் அச்சுறுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்றும் இத்தரப்பினர் சொல்கின்றனர்.

முஸ்லீம் இளைஞர்களைத் தீவிரவாதத்துக்குச் செல்ல விடாமல் தடுப்பதில் மிதவாதிகளுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. ''வன்முறைக்குத் துணியவும் கூடாது. பணியவும் கூடாது. எங்கள் இளைஞர்களுக்கு மிகத் தெளிவாகவே 'வன்முறை மூலம் எதற்கும் தீர்வு காண முடியாது. அது இன்னமும் பிரச்னைகளை வளர்க்கும்' என்று சொல்லி வருகிறோம்'' என்கிறார் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தமிழ் மாநிலத் தலைவர் காதர் மொய்தின். ஏற்கெனவே தீவிரவாதத்தில் இறங்கி விட்ட முஸ்லீம் இளைஞர்களைத் திருத்துவது தவிர, புதியதாக யாரும் தீவிரவாதிகளாக மாறாதிருக்க இரண்டு கட்ட நடவடிக்கைகள் தேவை என்கிறார்கள் அதிகாரிகள்.

''ஒரு காலத்தில் விவசாயிகளின் பிரச்னை பெரிய பிரச்னையாக இருந்தது. ஆனால் இன்று கிடையாது. காரணம் பல பிரச்னைகள் தீர்த்து வைக்கப்பட்டதுதான்.

மீண்டும் வெடிகுண்டா?

இந்த வெடி குண்டுகள், வெடிப்பதற்கு முன்னரே கண்டு பிடிக்கப்பட்டது கூட போலீஸார் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டதால்தான் என்கிறார்கள். எல்லைப்புற மோதல்களைத் தொடர்ந்து, மாநிலங்களிலும் ஐ.எஸ்.ஐ. தூண்டுதலின் பேரில் நாசகாரச் செயல்கள் நடக்கலாம் என்று மத்திய அரசு விட்ட சுற்றறிக்கைப்படி கடந்த சில நாட்களாகவே போலீஸ் உஷாராக இருந்திருக்கிறது. கடந்த முப்பதாம் தேதியன்று நான்கைந்து இடங்களில் குண்டுகள் வைக்கப்படலாம் என்ற தகவல் முதல் நாளிரவே பொது மக்கள் மூலம் போலீஸுக்கு கிடைத்து விட்டதாம். ஆனால் போலீஸ் எதிர்பார்க்காதது என்ன வென்றால் போலீஸ் தொடர்புடைய இடங்களில் தான் குண்டு வைக்கப் போகிறார்கள் என்பது!

அதுபோல ஜனநாயக ரீதியில் தீவிரவாதிகள் எடுத்து வைக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டும். முஸ்லீம்களை ஆத்திரப்படுத்தும் இந்து தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் வன்முறையில் ஈடுபடுபவர்களைப் பிடித்து தயவு தாட்சண்யம் காட்டாமல் தண்டிக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரை வெடிகுண்டு வன்முறையை ஒடுக்க எங்களுக்கு முழு அரசியல் ஆதரவு இருக்கிறது'' என்றார் உயர் போலீஸ் அதிகாரி ஒருவர்.

அந்த அரசியல் ஆதரவைப் பயன்படுத்தி வெடிகுண்டு கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பெரிய பொறுப்பு தமிழக போலீஸுக்கு இருக்கிறது.

— நமது நிருபர்கள்

படம்: **சௌந்தர்ராஜன்**

கோயில் கொள்ளைக்காரர்கள்!



யுவான்சுவாங் மாதிரி திடீர் திடீர்னு இப்பல்லாம் புது உலகம் தரிசிக்கற ஆசை வந்துடறதால, ரயில்வேஸுக்கு என்னால நிறைய லாபம்.

லாஸ்ட் வீக் மறுபடியும் தென்னக டூர் அடிச்சேன். இந்தவாட்டி கன்யாகுமரி ஏரியா மட்டும்.

ஒரு ராட்சஸ பச்சை பெயின்ட் டப்பாவை வானத்துலேருந்து யாரோ கவிழ்த்துக் கொட்டினாப்பல அந்த டிஸ்ட்ரிக்டே அப்படியொரு பசுமை போர்த்திட்டு இருக்கு. திரும்பினா புழை. நின்னா குளம், ரிவர்ஸ், வாட்டர் ஃபால்ஸ். ஜிலுஜிலுன்னு சும்மா சொர்க்கலோகம்தான். சுந்தரராமசாமி, ஜெயமோகன் கதைகள்ல வர்ற இடவருணனைகளெல்லாம் ரொம்ப ஸ்ட்ரேஞ்ஜா, அதே சமயம் புத்தம் புதுசா இருக்கறதுக்கான காரணம் புரிஞ்சுது.

புகழ்பெற்ற சுசீந்திரம் தாணுமாலயன் கோயில்ல எனக்கொரு ஸ்ட்ரேஞ்ஜ் எக்ஸ்பீரியன்ஸ். பட்டப் பகல்ல சுமார் இருவது, இருவத்தஞ்சு வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள்கிட்ட மாட்டிக்கிட்டேன். ஐ மீன், கோயிலை வெச்சி, பிழைப்பு நடத்தறவங்க.

கோயில் வாசல்ல தேங்காய் பழக்கடைக்காரங்கள்ளேருந்து, நாம கேக்காமலே கூட வர்ற (வேணாம், வேணாம்னு சொன்னாலும் விடாம ஒட்டிக்கிட்டு, நம்ம பர்ஸைக் காதலிக்கற) கோயில் கைட்ஸ்லேருந்து, கோயிலுக்குள்ளே மாலை, வெண்ணெய், எண்ணெய், ஆமணக்கு, புண்ணாக்குன்னு எதையாவது தலைல கட்டியே தீர்றதுன்னு வீர சபதத்தோட காத்திருக்கற கோஷ்டிலேருந்து, விபூதி குடுத்துட்டு, கம்பல்ஸரியா ரெண்டு ரூபா வெச்சாகணும்னு பேரம் பேசற அர்ச்சகர் வரைக்கும் – ஒட்டுமொத்த கோஷ்டியே சிவா–விஷ்ணு – பிரும்மாவை ஏலம் போட்டு வித்துட்டிருக்காங்க. இவங்களுக்கு இலவச இணைப்பு அந்த பிரும்மாண்ட ஆஞ்சநேயர்.

பக்தியோட கோயிலுக்குள்ள நுழையறவங்க ஒரு செகண்ட் கூட கண்ணை மூடி சந்நிதில நிக்க முடியாது! அரிச்சிப் பிடுங்கிடறாங்க. பை த வே, சும்மா சாமி கும்பிடப் போன எனக்கு ஆன செலவு தொண்ணூத்தி மூணு ரூபா எழுவத்தஞ்சு பைசா.

* * *

சில வாரங்கள் முன்னால 'நீங்கள் கேட்டவை' தராசு சார் படிச்சிட்டிருக்கறதா சொன்ன 'பாண்டவபுரத்தை' நான் வெற்றிகரமா ரெண்டே மணி நேரத்துல, ஒரே மூச்சுல படிச்சி முடிக்க முடிஞ்சதுங்கறதைத் தன்னடக்கத்தோட தெரிவிச்சுக்கறேன்.

நவீன மலையாள இலக்கியச் சிற்பிகள்னு சொல்லப்படற முதல் மூணு பேருக்கு (பஷீர், கேசவதேவ், தகழி) அப்புறம் வந்த ஜெனரேஷன்ல சேது, தன்னோட

ஷார்ட் ஸ்டோரிஸாலயே ரொம்பப் புகழடைஞ்சவர். தனக்குப் பிடிச்ச, சரியான எழுத்து வடிவம் சிறுகதைதான்னு சொல்ற இவர், மிகச் சில நாவல்கள்தான் எழுதியிருக்கார். பாண்டவபுரம் அதுல ஒண்ணு.

எனக்கென்னவோ, இதுவே கொஞ்சம் பெரிய சைஸ் சிறுகதைதான்னு தோணுது. அந்த இறுக்கமும் எடுத்துட்டிருக்கற சப்ஜெக்டும், நேரேஷனும் ஒரு ஷார்ட் ஸ்டோரிக்குரிய நுணுக்கங்களை அப்படியே வெச்சிருக்கு.

நாவல் ஆரம்பத்திலேயே, பாண்டவபுரம் நிஜமான ஒரு ஊர் இல்லை; கதாநாயகி மனசுக்குள்ள, தனக்காகவே உருவாக்கிட்டிருக்கற ஒரு கனவு நகரம்னு அவரே சூசகமா உணர்த்திடறார். அப்படியும் அந்த நகரைப் பத்தின பிரமிப்பும் நகர மக்கள் பத்தின வியப்பும் திராம, கதை முழுக்கக் கூட வருது.

ஒரு பெண்ணைப் பற்றிய, அவளோட அந்தரங்க உணர்வுக் கொந்தளிப்பைப் பற்றிய திறமையான நாவல் இது.

ஸர்-ரியலிஸம், மேஜிக்கல் ரியலிஸம் னெல்லாம் சில இலக்கிய உத்திகளோட பெயர்கள் காதுல விழுந்திருக்கும். இது மாந்திரிக - ரியலிஸம் வகையைச் சேர்ந்ததுன்னு சொல்லலாம்னு நினைக்கறேன்!

தமிழ்ல இந்த வகைக்கு உதாரணம் எதுவும் இல்லை - ஒரே ஒரு தமிழவன் நாவல் தவிர. (ஏற்கெனவே சொல்லப்பட்ட மனிதர்கள்)

* * *

ஜோக்கடிக்கும் நேரம் :

அமெரிக்க நாஸா விஞ்ஞானிகள், விண்வெளி ஆராய்ச்சி பண்ணிட்டிருந்தப்ப, செவ்வாய்க்குப் பக்கத்துல புதுசா, சின்னதா ஒரு கிரகம் இருக்கறதைக் கண்டுபிடிச்சாங்க. ரொம்ப ஆச்சர்யமான விஷயம், அவங்க ரிஸர்ச்சுல, அங்க காற்றும் தண்ணியும் இருக்கறதா தெரிஞ்சது. அடடே, மனுஷன் வாழலாம் போலிருக்குன்னு சந்தோஷப்பட்டு ஆராய்ச்சியைக் கண்டின்யூ பண்ணி, அந்த கிரகத்துக்கு ஆள் அனுப்பிப் பார்க்க டிஸைட் பண்ணாங்க.

ஒரு அமெரிக்க அரசியல்வாதி, ஒரு ரஷ்ய அரசியல்வாதி, ஒரு தமிழ்நாட்டு அரசியல்வாதி மூணு பேரும் அந்த கிரகத்துக்கு முதல் பயணியா போய்வர வாலன்டியரா வந்தாங்க.

அமெரிக்கர் கிளம்பிப் போனார். ரெண்டு நாள் ஆச்சு, நாலு நாள் ஆச்சு, ஒரு மாசம் ஆச்சு. அவர் போன ராக்கெட் என்ன ஆச்சு, எங்கே போச்சுன்னே தெரியாம காணாமப் போச்சு.

ரஷ்யர் கிளம்பினார். இந்தத் தடவை ரொம்ப ஜாக்கிரதையா பிளான் பண்ணி ரூட்டெல்லாம் தெளிவா கவனிச்சி அனுப்பினாங்க. அப்படியும் செவ்வாய் தாண்டினதும் அவர் போன ராக்கெட்டும் காணாமப் போயிடுச்சி.

இங்க மானிட்டர்ல பார்த்துட்டிருந்த விஞ்ஞானிகள் சின்டைப் பிச்சிக்கிட்டாங்க.

மூணாவதா நம்மாள் கிளம்பிப் போனார்.

இந்தத் தடவை கலத்தைத் தவற விடக்கூடாதுன்னு கவனமா வாட்ச் பண்ணிட்டே வந்த விஞ்ஞானிகள், விண்கலம் வெற்றிகரமா அந்தக் கிரகத்துல இறங்கறதைப் பார்த்ததும் சந்தோஷமா எழுந்து குதிச்சி, கொண்டாடிட்டு மறுபடியும் மானிட்டரைப் பார்த்து, அதிர்ந்துட்டாங்க.

பிகாஸ் - அந்த கிரகம் அப்ப காணாமப் போயிருந்தது!

இண்டியன்ஸ இப்படிக் கிண்டல் பண்ணி ஜோக் வர்றது வழக்கமாயிடுச்சு. ஆனா நம்ம பசங்க அப்ராட் போயி என்ன பெரிய பெரிய சாதனைங்க செய்றாங்க தெரியுமா!

என் கஸின் ஷிவ் சமீபத்துல யு.எஸ்ல படிச்சு பி.எச்.டி. வாங்கிருக்கான்.

ரத்தக்குழாய்ல அடைப்பு இருந்தா அதை பலூன் சர்ஜரி மூலமா நீக்கறாங்க. ஆனா கொஞ்ச நாள் கழிச்சு திரும்பவும் பிளாக் ஆயிடுது. ஆனா இப்படித் திரும்பியும் ஆகாம இருக்க உதவறதுக்கு ஒரு சின்னக் கருவியை உள்ள வைக்கலாம்னு கண்டுபிடிச்சிருக்காங்க... ஹியூமன் பாடி எவ்வளவு சென்சிடிவ் பாருங்க... இந்தக் கருவியை எதிர்த்து ரத்த அணுக்கள் ஸ்டிரைக் பண்ணுமாம்! இந்த ரியாக்ஷனுக்கான காரணம் என்னன்னு ஆராய்ச்சி பண்ணி கண்டுபிடிச்சிருக்கான் என் கஸின். நீ பெரியாளுதான்னு பாராட்டினா, 'வுடு சுமி, நான் செஞ்சிருக்கறது ஒரு பிரும் மாண்டசுவர்ல ஒரு சின்ன செங்கல் அளவு காரியம்' அப்படிங்றான். என்னை மாதிரி அவனுக்கும் அடக்கம் ஜாஸ்தி!

— சுமி

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1999

வாசகர்களையும் எழுத்தாளராக்கும் போட்டி!

ரொக்கப் பரிசோடு புத்தகப் பரிசு!



படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு — ரூ. 5000

இரண்டாம் பரிசு — ரூ. 3000

மூன்றாம் பரிசு — ரூ. 2000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் எனில், வழக்கம் போல் போனஸ் உண்டு!

இவற்றோடு, பரிசு பெறுபவர்களுக்கு மட்டுமல்ல; பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளை எழுதிய கதாசிரியர்களுக்கும் **சுந்தா** எழுதிய **பொன்னியின் புதல்வர்** (அமரர் கல்கியின் வாழ்க்கை வரலாறு) நூலும் பரிசாக அளிக்கப்படும்.

விதிமுறைகள் :


- சரித்திரம், சமூகம், மர்மம், நகைச்சுவை என எப்படிப்பட்ட கதையாகவும் இருக்கலாம். கதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான்!
- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர்குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- '**அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 1999**' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

— **ஆசிரியர்**



இராம மந்திரம்



‘ராமா’ என்ற மந்திரத்தின் பொருள் மகிழ்விப்பவன் என்பதாகும். ராம மந்திரத்தை உச்சரிக்கும் பொழுது உள்ளிருக்கும் ஆனந்தத்தை மறைத்துக் கொண்டிருக்கும் திரை விலகுகிறது. உள்ளிருக்கும் ஆனந்தம் அப்பொழுது தங்குதடையின்றி வெளிப்படுகின்றது. சதா மகிழ்வுற்றிருப்பது யோகத்தின் பாங்கு ஆகும். ராம மந்திரத்தை உச்சரித்தால் ஒருவன் **யோகி** ஆகலாம். அப்படி ராம மந்திரத்தை உச்சரித்து வால்மீகி என்னும் மஹரிஷி யோகியானார்.

தாரக மந்திரம் என்று சொல்லப்படும் ராம மந்திரத்தைச் சிவனார் இடைவிடாது உச்சரித்து வருகிறார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் காசிக்கு சென்றிருந்தார். அங்கு அவர் ஞானக் காட்சியில் இவ்வுண்மையைக் கண்டார். காசியில் உடலை உகுக்கின்றவர்களுக்கு முக்திக்கு இடைஞ்சலாக இருக்கும் கர்மத்தை மாதா அன்னபூரணி ஒதுக்கி வைக்கின்றனர். காசியில் உடலை உகுக்கும் ஜீவனுடைய காதில் சிவனார் ராம மந்திரத்தை ஜீவன் வாங்கிக் கொண்டு கிரம முக்திக்கு போகின்றான்.

கந்த புராணத்தில் காசி காண்டத்தில் சொல்லப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஞானக் காட்சியாக தென்பட்டது.

சிவனார் ஓதும் மந்திரம் ராம என்னும் தாரகப் பிரம்மமாகும். அது எத்தகையது. அது சிவனாருடைய சொரூபமேயாகும். சிவனாருடைய சொரூபத்திற்கு அது புறம்பானதன்று. ஹரா என்பது சிவன் அம்சம். உமா என்பது அம்பிகையின் அம்சம். சிவ சக்தியாகப் பிரிக்க முடியா அர்த்த நாரீசுவரராகச் சிவன் இருக்கின்றார். மராமரா என்று சொன்னது எப்படி ராம என்று ஆனதோ அப்படி **ஹரா உமா, ஹரா உமா, ஹரா உமா** என்று சதா சொல்லிக் கொண்டே இருந்தால் அது ராம என்னும் மந்திரம் அமைந்திருக்கின்றது.

எனவே, ராம என்னும் மந்திரம் தசரதனுடைய காலத்தில் வந்ததன்று. அது அனாதி. சதா இயற்கையில் பிரணவத்தினுடைய அம்சமாக பிரம்மமாக இந்த ஒசை இருந்து கொண்டிருக்கிறது.

ஆதாரம் : **தர்மச்சக்கரம்**

அத்துடன் கிராண்ட் ஸ்வீட்டுகளை வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020.
போன் : 4915662, 4914213

“அண்ணா





1965 - மாணவர்களால் ஒருமுகப்படுத்தப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக இருந்த கால கட்டம். ஆங்காங்கே ஊர்வலம், மறியல், ரயில் நிறுத்தப் போராட்டம் என்று தமிழகமே கொந்தளித்துக் கொண்டிருந்தது. அனைத்து மாவட்டங்களிலுமுள்ள மாணவர்களையும் ஒருங்கிணைத்து, களத்தில் இறக்கிய அந்த இளைஞரை போலீஸ் வலை விசி தேடிக் கொண்டிருந்தது. தலைமறைவாகவே இருந்து போராட்டத்திற்குத் தலைமை ஏற்றிருந்தார் அந்த இளைஞர்.

அந்தச் சமயத்தில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேரு பூங்காவில் மாணவர் தலைவர்களின் ரகசியக் கூட்டம் ஒன்று நடந்தது. அந்த இளைஞர் கூட்டத்திற்குத் தலைமை ஏற்று நடத்திக்கொண்டிருந்தார். அப்போது என்.வி.என். சோமு அங்கு வந்து அந்த இளைஞரிடம் 'அண்ணா உங்களைக் கூப்பிடுகிறார்' என்றழைத்தார். 'அண்ணாவை சந்திக்கலாமா, வேண்டாமா' என்று இரண்டுவிதமான கருத்துக்கள் கூட்டத்தில் பேசப்பட்டன. மாணவர்களின் பயம் என்னவென்றால் அண்ணா தமது வாதங்களால் இளைஞரின் தீவிரத்தைக் குறைத்து போராட்டத்தின் தீவிரத்தைக் குறைத்து விடுவாரோ' என்பதுதான். கடைசியில் அந்த இளைஞர் அண்ணாவை சென்று பார்ப்பது என்று முடிவானது.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் அண்ணா அந்த இளைஞரிடம் பேசினார். மாணவர்களின் போராட்டம் சமூக விரோதிகளின் கைக்குச் சென்று, வன்முறைகளுக்கு வித்திடும் என்பதையும் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துரைத்து மாணவர்களுக்குப் பொறுமை தேவை என்றும் எடுத்துச் சொன்னார். ஆனால் இளைஞரால் அண்ணாவின் வாதங்களை அப்போது ஏற்றுக் கொள்ள முடியவில்லை. 'போராட்டத்தில் சுணக்கம் ஏற்படுமேயானால், இந்தியை திணிக்க நினைப்பவர்களின் வேலை சுலபமாகி விடுமே' என்று எண்ணத்தில் இருந்தார் அவர்.

“நீங்கள் லால்பகதூர் சாஸ்திரியாக இருந்தால்கூட, கொஞ்சமும் கவலைப்படாமல் உங்களை ஏசியிருப்பேன்; ஆனால் துரதிர்ஷ்டவசமாக நீங்கள் என் தலைவராக இருக்கிறீர்கள். உங்கள் வாதங்கள் எனக்குத் திருப்தியளிக்கவில்லை என்றாலும் உங்கள் ஆலோசனைகளை ஏற்று நடக்க முயற்சி செய்கிறேன்” என்று சொல்லிவிட்டு விறு விறுவென வெளியேறினார் அந்த இளைஞர்.

“இன்று 34 வருடங்களுக்குப் பிறகு நினைத்துப் பார்க்கிறேன். அண்ணா அவர்கள் பயந்தது போன்றே போராட்டம் வன்முறையாளர்கள் கைக்குப் போனது. அதனால் பல விரும்பத்தகாத விளைவுகள்” என்று நினைவு கூர்கிறார் அந்த இளைஞர். அவர்தான் தமிழக அரசியலில்



என் தலைவர் மட்டுமல்ல; "தெய்வம்!"

''எல்.ஜி'' என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஒரத்தநாடு எல். கணேசன். 'மொழிப்போர் தளபதி' என்று கழகத்தவர்களால் பாராட்டப்படுபவர்.

''அப்போது இளைஞனாக இருந்ததால் ஒரு வேகத்துடன் அண்ணாவிடம் பேசி விட்டேன். ஆனால் அண்ணா அவர்கள் நான் பின்பற்றுகிற தலைவர் மட்டுமல்ல; வழிபடுகிற தெய்வமும்கூட'' என்கிறார் எல்.ஜி. இப்போது ம.தி.மு.க.வின் அவைத் தலைவர்.

ஒரத்த நாட்டிலிருந்து மூன்று கி.மீ தூரத்திலுள்ள கண்ணன்-தன்-குடி என்ற கிராமம்தான் எல்.ஜி.யின் கிராமம். விவசாயக் குடும்பம்தான். பட்டுக்கோட்டை பக்கத்தில் உள்ள ராஜாமடத்தில் இலவச ஹாஸ்டலில் தங்கிப் படித்தவர். பின்னர் ஜமால் முகமது கல்லூரி. அதன்பின் சென்னை சட்டக் கல்லூரி. "அப்போது சட்டக் கல்லூரி ஒரு சிறு உலகமாக இயங்கிக் கொண்டிருந்தது. வெளியில் ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தாலும் சட்டக் கல்லூரியில் அது பிரதிபலிக்கும். பல்கலைக் கழக பேச்சாளராக நான் இருந்தேன். தமிழ் இலக்கியப் பேரவைத் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஒரே மேடையில் அண்ணாவையும் ராஜாஜியையும் அழைத்து ஆட்சி மொழி கருத்தரங்கையும் நடத்தினேன்! பேச்சுப் போட்டியின்போது பல கல்லூரிகளுக்குச் சென்று வந்ததால், மாணவர் தலைவர்களை நன்கு அறிந்து வைத்திருந்தேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது எல்லோரையும் தொடர்பு கொள்ள எனக்கு அது சுலபமாக இருந்தது."

தஞ்சை மாவட்டக்காரர்களில் பெரும்பாலோர் வெற்றிலையை உடன்பிறவாச் சகோதரனாகக் கருதுவார்கள். எல்.ஜி.யும் அப்படித்தான். வெற்றிலை - சீவல் - புகையிலை கூட்டணி அவருக்கு மிகவும் பிடித்தது. சதா அவரது வாய் அசை போட்டுக் கொண்டே இருக்கிறது."

"நான் செயின் ஸ்மோக்கராக இருந்தேன். 1967ல் மிகச் சிறிய வயதிலேயே தி.மு.க. எம்.எல்.ஏ.வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது எங்கள் ஏரியாவில் காவிரிப் பாசனக் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டது. அது தொடர்பாகச் சென்னையிலிருந்து தலைமைப் பொறியாளர் வந்திருந்தார். இளைஞனான நான் அவருக்கெதிரில் சிகரெட் பிடித்தவாறு பேசிக் கொண்டிருந்தேன். அதைப் பார்த்த என் தொகுதி மக்கள் 'எவ்வளவு பெரிய அதிகாரி அவர்! எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் இவன் சின்னப் பையன்தானே! மரியாதையில்லாமல் சிகரெட் பிடிக்கலாமா?' என்று என் காது படவே பேசினார்கள். 'இந்த சனியனால் நமக்கு எதற்குக் கெட்ட பெயர்' என்று அன்று சிகரெட்டை விட்டுவிட்டு, வெற்றிலைக்கு மாறினேன்" என்கிறார் எல்.ஜி.

சட்டமன்ற உறுப்பினர், சட்டமேலவை உறுப்பினர், தில்லி மாநிலங்களவை உறுப்பினர், முதல்வரின் பேரவைச் செயலாளர் என்று பலவிதமான பொறுப்புகளை வகித்தவர் எல்.ஜி. ஆனாலும் அவரது கிராமமான கண்ணன்-தன்-குடியின் பஞ்சாயத்துத் தலைவரும் இவர்தான். அவரது கிராமத்தில் பஞ்சாயத்துத் தேர்தலே கிடையாது. தலைவரான இவர் பார்த்து நியமிக்கப் படுபவர்கள்தான் உறுப்பினர்கள். அந்த அளவுக்கு கிராமத்துக்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்.

"கலைஞரால் என்னைக் "கொள்ளவும்" முடியவில்லை. "தள்ளவும்" முடியவில்லை. மனதில் பட்டதை அவரிடம் தைரியமாகச் சொல்லும் ஒரு சிலரில் நானும் ஒருவன். 1973ல் திண்டுக்கல் தேர்தலில் கழகம்

தோல்வியுற்ற போதும், பின்னர் 1980ல் சட்ட மன்றத் தேர்தலில் தோற்றபோதும், கலைஞருக்குப் பிடிக்காது என்று தெரிந்தும் என் மனதில் பட்டவற்றைச் சொன்னேன். 1977ல் தஞ்சை தொகுதியில் பாராளுமன்ற வேட்பாளராக நிறுத்தப்பட்டேன்; தோற்றேன். அதன்பின் 1978ல் அதே தொகுதியில் இடைத்தேர்தல் வந்தது. தோற்ற எனக்கு சீட் தரவில்லை. மாவட்டக் கழகமே எனக்குப் பின்னால் நின்றது. வேறு வழியின்றி ஆட்சி மன்றக் குழுவைக் கூட்டி 1980ல் வரப் போகும் மாநிலங்களவைத் தேர்தலில் எனக்கு சீட் கொடுப்பதாகத் தீர்மானம் போட்டார்கள். தி.மு.க. வரலாற்றிலேயே இது போல தீர்மானம் போட்டு யாருக்கும் ஸீட் கொடுத்தது கிடையாது!"

எமர்ஜென்ஸியின்போது கலைஞருக்கு துணையாகச் செயல்பட்டவர் எல்.ஜி. 'மிசா'வில் உள்ளே இருந்திருக்கிறார். தலைமைக் கழகத்தில் மாணவரணிச் செயலாளராகவும், சட்டத் திட்டச் செயலாளராகவும் பணியாற்றி இருக்கிறார்!

"சசிகலா - நடராஜன் எனது உறவினர்கள்தான். குறிப்பாக கலைஞர் தலைமையில் அவர்களது கல்யாணத்தை நடத்தி வைத்தவன் நான்தான். என்மீது நடராஜனுக்கு மிகுந்த பாசம் உண்டு. இன்று தி.மு.க.வில் இருந்தாலும் துரைமுருகன் போன்றோர் என்னை மூத்த உடன்பிறப்பாகக் கருதுபவர்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, போராட்டத்தில் மட்டுமல்ல, தனிப்பட்ட வாழ்க்கையிலும் பல இளைஞர்களுக்கு வழி காட்டியிருக்கிறேன்" என்று சொல்லும் எல்.ஜி.க்கு இன்னமும் ஒரு வருத்தம் உண்டு.

"இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கும்" என்ற நேருவின் உறுதிமொழி இதுவரை சட்டபூர்வமான அங்கீகாரம் பெறவில்லையே என்பதுதான் அது.

— ப்ரியன்

படம்: ஸ்ரீஹரி

பிரம்மாவை திணறடித்த கேள்வி!

ஜெர்மன் ஆசாமி ஒருவர் பிரம்மாவிடம் சென்று, 'சாமி... எங்க நாடு முன்னேற்றம் அடைய இன்னும் எத்தனை வருடம் ஆகும்?' என்றான்.

அதற்கு பிரம்மா, 'இன்னும் இருபத்தைந்து வருடங்கள் ஆகும்' என்றார். உடனே அந்த ஜெர்மானியன் 'ஐயோ! எனக்கு இப்பவே வயது ஐம்பது. எழுபத்தைந்து வயதில் நான் உயிரோடு இருப்பேனா? வளர்ச்சியடைந்த என் நாட்டைப் பார்ப்பேனா?' என்று 'ஓ'வென்று அழத் துவங்கி விட்டான்.




அடுத்து சீனாக்காரன் ஒருவன் வந்து பிரம்மாவிடம் அதே கேள்வியைக் கேட்டான். 'உங்கள் நாடு முன்னேற ஐம்பது வருடங்கள் ஆகலாம்!' என்றாராம் பிரம்மா. 'அவ்வளவு காலம் ஆகுமா? எங்கள் தேசத்தில் எல்லோரும் அதிக காலம் உயிர் வாழ்கிறோம் என்பது உண்மைதான். ஆனால் இப்போதே அறுபது வயதாகும் நான் நூறு வயதைக் கடந்து உயிரோடு இருந்து, முன்னேறிய சீனாவைப் பார்ப்பேனா?' என்று கேவிக் கேவி அழத் துவங்கி விட்டான்.

அந்த இரண்டு நாட்டவர்களும் அழத் துவங்கி விட்டதை பிரமித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்த பிரம்மா, 'சாமி' என்ற குரல் கேட்டுத் திரும்பினார். அங்கு இந்தியன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். 'அவர்கள் நாட்டைப் பற்றியெல்லாம் சொன்னீர்கள். இந்தியா முன்னேற எத்தனை ஆண்டுகள் ஆகும்? சொல்லுங்கள் சாமி!' என்றான்.

பிரம்மா பதிலேதும் சொல்லவில்லை. சில விநாடிகளுக்குப் பிறகு கேவிக் கேவி அழும் சத்தம். ஆம்! அழுது கொண்டிருந்தார் பிரம்மா!

– வேப்பேரியில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் மு.க. ஸ்டாலின் பேசக் கேட்டவர்: பொடியன்




ASHIRBAD

சண்டைக்கோழி பவார்!

சரத்பவார் – சுருக்கமாக பவார் என்றழைக்கப்படும் அவருடைய முழுப் பெயர் சரச் சந்திர கோவிந்த ராவ் பவார். பத்திரிகைகள் இவருக்குச் சூட்டியுள்ள செல்லப் பெயர். 'மராத்தா ஸ்டிராங் மேன்.'

தேசிய அளவில் பழம் தின்று கொட்டை போட்ட மகாராஷ்டிர காங்கிரஸ்காரரான ஒய்.பி. சவானின் சிஷ்யர்தான் பவார். நெருக்கடி நிலைக்குப் பின் நடந்த பொதுத்தேர்தலில் இந்திரா காந்தி தோல்வியடைந்ததையடுத்து, காங்கிரஸ் கட்சி, பிரம்மானந்த ரெட்டி தலைமையில் உடைந்தது. அந்த உடைசலிலிருந்து புறப்பட்ட இன்னொரு உடைசலுக்குக் கர்த்தா சரத்பவார். இவரது கட்சிக்கு காங்கிரஸ் (எஸ்) அதாவது சரத் பவார் என்று பெயர்.

நேரு குடும்பத்துக்கும், சரத்பவாருக்கும் என்றைக்குமே ஏழாம் பொருத்தம்தான். ஆனால் அது அடங்கிய பனிப்போராக இருந்த சமயங்கள்தான் அநேகம். இந்திரா காந்தியின் தலைமையை எதிர்த்தவர்களுள் இவரும் ஒருவர். ராஜீவ் காலத்திலும் அதே நிலைதான். காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா சமயம், மும்பையில் பேசிய ராஜீவ், 'காங்கிரஸ் கட்சியில் ஊடுருவி, ஆதிக்கம் செலுத்தும் அரசியல் புரோக்கர்களை ஒழித்துக் கட்டுவதுதான் எனது முதல் வேலை' என்று குறிப்பிட்டார். அவர் மறைமுகமாகக் குறிப்பிட்ட பவர் புரோக்கர், பவார்தான் என்பது நாடறிந்த ரகசியம்.

சோனியா, கட்சித் தலைமையை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில், பிரதமர் நாற்காலியில் உட்காரும் வாய்ப்பு தமக்குக் கிடைக்கும் என்ற ஆசை இவருக்கு வெகு நாட்களாகவே உண்டு. கடந்த பொதுத் தேர்தலில், நாடெங்கும் காங்கிரஸ் கட்சி திணறிக் கொண்டிருந்தபோது, தனி மனிதராக வியூகம் அமைத்து, மகாராஷ்டிராவில் உள்ள 42 இடங்களில் 33 இடங்களில் காங்கிரஸை வெற்றி பெறச் செய்து, தாம் யார் என்று நாட்டுக்குக் காட்டிய காங்கிரஸ் தளபதி பவார்.

அதற்கடுத்து மகாராஷ்டிராவிலிருந்து, ராஜ்யசபைக்கு உறுப்பினர் தேர்ந்தெடுப்பின் போது பவார் விளையாடி விட்டார் என்பது சோனியாவின் கோபம். சோனியாவின் பிரத்யேக சிபாரிசின் பேரில் நிறுத்தப்பட்ட ஆறாவது வேட்பாளரை, பவார் நினைத்திருந்தால், வெற்றி பெற வைத்திருக்கலாம். ஆனால் பவார் சதி செய்து விட்டார் என்று உறுதியாக நம்பியது காங்கிரஸ் மேலிடம். சோனியா, காங்கிரஸ் தலைவரானது முதலே, மகாராஷ்டிராவில் பவாரின் அரசியல் எதிரிகளைத் தேர்ந்தெடுத்து, மாநில அளவிலான பொறுப்புகளில் அமர்த்தி, பவாரின் பலத்தைக் குறைக்க முயன்றார்.



ஆனால் இதற்கெல்லாம் அசந்து போகிறவர் அல்ல பவார். காரணம், மகாராஷ்டிராவைப் பொறுத்த வரை மக்களின் நாடியை நன்கு

அறிந்தவர் அவர். மொத்தம் உள்ள அத்தனை சட்டசபைத் தொகுதிகளிலும் உள்ள வாக்காளர்களின் ஜாதி உள்பட, எங்கெங்கே எந்த எந்தக் கட்சியில் யார் யாருக்கு செல்வாக்கு என்று எல்லா விவரங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பவர்.

இத்தனை பவர்ஃபுல்லாக விஸ்வரூபம் எடுத்து நிற்கும் அளவுக்கு பவாரால் வளர முடிந்தது எப்படி?

பவார், மகாராஷ்டிர முதலமைச்சராக மூன்று தடவை இருந்திருக்கிறார். அப்போது மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில், ஏராளமான சர்க்கரை ஆலைகள் வர வழி செய்தவர் பவார்தான். இதனால் தான், சுகர் லாபியின் பேராதரவு அவருக்கு உண்டு.

மும்பை, ரியல் எஸ்டேட்காரர்களின் சொர்க்கம். எனவே, பணத்தில் புரளும் ரியல் எஸ்டேட்காரர்களின் நெருக்கமும் பவாருக்கு எப்போதும் உண்டு. அடுத்த படியாகக் கூறப்படும் காரணம்: பவார் - அண்டர் கிரவுண்டு டான்கள் நெருக்கம். இவைகளால் பவார், பவர்ஃபுல்லாக மட்டுமின்றி, செழிப்பான அரசியல்வாதியாகவும் இருக்க முடிகிறது என்று சொல்லப்படுகிறது.

பவார் தமது ஆட்சியின்போது, ஏகப்பட்ட பணம் வாங்கிக் கொண்டு, என்ரான் நிறுவனத்துக்கு மின் உற்பத்தி நிலையம் அமைக்க அனுமதி கொடுத்து விட்டார் என்பது சிவசேனை - பா.ஜ.க.வின் குற்றச்சாட்டு. ஆனால், இதே கூட்டணி ஆட்சியைப் பிடித்தவுடன், பவார் மீது கூறிய குற்றச்சாட்டுகளை நிரூபிக்க எந்தவித ஆதாரமும் தரமுடியவில்லை என்பது மட்டுமில்லை. அதே ஒப்பந்தம் (சிற்சில மாற்றங்களுடன்) தொடர வழி செய்தது!

மகாராஷ்டிராவில் மட்டுமின்றி அகில இந்திய அரசியலிலும்கூட, பவார் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாகி விட்டார். வரும் தேர்தலில் ஒரு முலாயம், ஒரு லல்லு அளவுக்கு, இருபது எம்.பி.களாவது பவார் வசம் இருப்பார்கள். ஆட்சி அமைக்க முயலும் கட்சிக்கு பவாரின் ஆதரவு அவசியம் என்கிற நிலை உருவானால் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

— கௌதம்

கூட்டத்தில் பார்க்கும் யாரோ ஒருவரா அவர் ?



இல்லை. அவர் உங்கள் குடும்பத்தின் எதிர்காலம்.

உங்கள் எல் ஐ சி முகவர். நண்பர், நிதி ஆலோசகர் குடும்ப உறுப்பினர். உங்கள் எல் ஐ சி முகவர் உங்கள் குடும்பத்தினரின் பணத் தேவைகளை நன்கு அறிந்து வைத்திருக்கும் நபர். அவர் உங்களுக்குரிய சரியான ஆயுள் காப்பீட்டுத் திட்டம், அது வழங்கும் வரிச்சலுகைகள் மற்றும் நன்முறையில் சேமிப்பதற்கான பல திட்டங்களைப் பற்றி உங்களுக்கு ஆலோசனை வழங்க வல்லவர். உங்கள் எல் ஐ சி முகவரை இன்றே அழைப்பீர். எல்லாவற்றுக்கும் மேல், அவர் உங்கள் குடும்பத்தாருக்கு மகிழ்வையும் பாதுகாப்பையும் கொண்டு வருகிறார்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா

மக்களின் மகத்தான சேவையில்

O&M Financial/Agent/Tm

மூன்று மாதம் ஓடி விட்டது. நாட்களின் எந்திர கதியை நினைத்து எனக்கே பெரிய மலைப்புதான்.

கண்ணாடி முன் நின்று பார்க்கும் போது மீசையில் நரைகள். ஒரு முடிக்கு மறு முடி என்று யூனிஃபார்மாய் நரை. எனக்குத் தெரியாமல் இரவில் நிகழ்ந்து விட்ட புதிய மாற்றம். என் முடி கூட என் வசத்தில் இல்லை என்று அதன் நிமித்தம் ஒரு கவலை.

கண் பார்வையிலும் கொஞ்சம் சிக்கல்.

வயது நாற்பதில் சாளேஸ்வரம் வருமாமே?

அதன் ஆரம்பங்கள் தெரிந்து மிரட்டுகின்றன.

என்ன வாழ்க்கை இது... புரிபடவோ பிடிபடவோ மறுக்கிறதே?

இன்னும் அரைமணி கூட இல்லை. குளித்து டிபன் என்று ஒன்றைக் கொரித்து விட்டு டூட்டிக்கு கிளம்பியாக வேண்டும். போகவும் பிடிக்கவில்லை - போகாமல் இருக்கவும் பிடிக்கவில்லை.

எல்லாம் எஸ்.எஸ்.எல்.சியில் செய்த தப்பு.

கட் அடித்து விட்டு காலைக் காட்சிக்குப் போனதன் கோளாறு. எல்லாவற்றிலும் பார்டரில்தான் பாஸ் செய்ய முடிந்தது. சொச்சத்தை சிவாஜியும் எம்ஜியாரும் அன்று பிடுங்கிக் கொண்டார்கள். இன்று அந்த இடத்தில் ரஜினி கமலோ?

அன்று கடிவாளக் குதிரையாக இருந்த என் பல நண்பர்கள் இன்று டாக்டர், எஞ்ஜினீயர்கள்.

அவ்வளவாய் வியர்க்காத உத்யோகஸ்தர்கள்.

இன்கம்டாக்ஸ் அசசிகள்.


நான் ஆகி விட்டேன் தொழிற்சாலை அகதியாய்...

சில உத்யோகங்கள், இந்த பார்டர் கேஸ்களுக்கு என்றே இருக்கிறதே? ஞானம் இடிக்கிறது. பெற்ற பிள்ளையையாவது ஒழுங்காகப் படிக்க வைத்து விட வேண்டும். ஹிந்தி வேண்டாம் தமிழ் போதும் என்கிற வட்டார வந்தே மாதரத்துக்கு டாட்டா சொல்லியாக வேண்டும். இரண்டும்தான் வேண்டும்.

"டேய் படிடா... நல்லா படி. டி.வி. பார்க்காதே" - இந்த கேபிள் டீவி எழவ முதல்ல கட் செய்யணும். அன்று நான் தேடிப் போய் அழிந்தேன். இன்று அதுவே வீடு தேடி வந்து அழிக்கிறது. ரூவாய்க்கு மூன்று பொருள் மாதிரி வேளைக்கு மூன்று சினிமா!

எடிசா... குரங்குகள் கைகளில் பூமாலையைத் தந்து விட்டவனே...

நிதமும் இப்படித்தான் குமுறல். சிந்



இந்திரா சௌந்தர்ராஜன்

தனைச் சிதறல். பின்பு உத்யோகப் புறப்பாடு.

நடுநடுவே அலுப்பு சலிப்பு நிமித்தம் வரக் கூடாத நினைப்பெல்லாம் வரும்.

இன்று யூனிஃபார்ம் சகிதம் கிளம்பும் போதும் டீ.வி.யில் ஐம்பது கிராம் தங்கத்தோடு லாட்டரிப் பரிசு பற்றிப் பிரபல நடிகர் ஒருவர் பீற்றினார்.

சட்டென்று பொறிதட்டி மறந்து போன டால் தமிழ்மணி ஞாபகத்தில் வந்தான்.

'லட்சத்தை கோடியாக்குவேன் – மாருதி வாங்கி பி.எம். காரை ஓவர்டேக் செய்வேன். எம்.எல்.ஏ. ஆகி கோடீஸ்வரனாவேன் என்று அன்று கண்ட கனவெல்லாம் ஞாபகத்தில் வந்தது.'

நமக்குத்தான் பிழைக்கத் தெரியவில்லையோ?

போய்த் தொலைகிறது என்று ஒரு நூறு ரூபாய்க்கு மாதா மாதம் வாங்குவோமா?

பத்திரிகைக்குப் பத்திரிகைதான் தாயத்து எந்திரம் என்று தந்து நமக்கு உதவி வருகிறார்களே. அதில் ஒரு எந்திரம் நம்மை குபேரனாக்காதா என்ன?

புத்தி லாட்டரி நிமித்தம் எங்கெங்கோ போகிறது.

அது எங்கே போனால் என்ன... இன்றைக்கு வேலைக்குப் போயாக வேண்டும். ஸ்பேனர் செட்டும் மைக்ரோ மீட்டர்களும் காத்திருக்கின்றனவே? ச்சை...

வேலைக்கு நடுவே வசந்த மண்டபம் வரை போய் வரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. போன போது வழக்கம் போல புகை மூட்டம் நடுவில் தேவசஞ்சாரம். படையப்பா விமர்சனம் காதில் விழுந்தது.

''விசைத் தத்துவத்தையே



4

மாத்தறார்டா உங்க ரஜினி. வேலை எடுத்து உட்றாரு. அது ரிவர்ஸ்ல திரும்பி நட்டுக் கிட்டு நிக்குது. சூப்பர் பங்காளி...''

"அது சரி போ... வளந்த மரத்தையே புடுங்கிக்கிட்டுப் போய் நட்டு உங்க மருத நாயகம் புரட்சி பண்ணலாம். நாங்க பண்ணக் கூடாதோ? அடுத்த சிஎம்டி எங்காளு... பாத்து பேசு.''

"அப்ப நீதான் தலைமைச் செயலாளர்னு சொல்லு.''

அரசியல் சினிமா எல்லாவற்றிலும் ஏளனம். அதைப் பொழுதுபோக்கு அம்சமாகக் கருதும் மடைமை. அப்படித்தானே அவையும் ஆகிவிட்டன.

சரியான செக்குமாட்டு வாழ்க்கை என்று சலிப்புமூண்டு எழுந்த போது டாவ் தமிழ்மணி பற்றி காதில் விழுந்தது.

"நம்ம டாவ் விஷயம் கேள்விப் பட்டியா?''

"என்னாடா... குபேரசாமி ஃபைனான்ஸ் ஆரம்பிச்சுட்டானாக்கும்.''

"இளிச்சான். லாட்டரி பணம், கம்பெனி பணம் இரண்டையும் சேத்து ஒரு டுபாக்கூர் பார்ட்டிகிட்ட வட்டிக்கு ஆசைப்பட்டு கொடுத்துருக்கான். அவன் கடத்தல் சரக்கு விக்கறவனாம். இவன்கிட்ட பணத்தை வாங்கிட்டுப் போய் சரக்கு வாங்கிக்கிட்டு வந்து இவனையும் கூட்டு சேர்த்துக்கிட்டு வித்துருக்கான். இதை எவனோ ஒருத்தன் போலீஸுக்கு போட்டு விட வகை தொகையில்லாம மாட்டி ஒரு மாசம் சேலம் ஜெயில்ல ஐயா கம்பி எண்ணியிருக்கார்.''

எனக்கு அடுத்த நொடி நெஞ்சை யடைத்தது.

"ஏய் நிஜமாவா?''

"உம் போய்ப் பாரு...''

"இப்ப வெளிய வந்துட்டானா?''

"வந்தது மட்டுமா... மானேஜரை வீட்ல பார்த்து கால்ல விழுந்துருக்கான். திரும்ப வேலைக்கு எடுத்துக்கச் சொல்லி. அவர் ஜெயிலுக்குப் போன கேசுக்கு வேலை தர சட்டத்துல இடமில்லைன்னுட்டார்.''

"எதுவுமே எனக்குத் தெரியாதே...''

"அதுக்குத்தான் அப்பப்ப நம்ம வசந்த மண்டபத்துக்கு வரணும்கறது.''

"பாவம்டா டாவ்.. கோடீஸ்வரன் குபேரன்னு கனா கண்டுட்டு இப்ப பஸ் ஸ்டாண்டை சுத்தறான்.''

"எதுக்கு?''

"போய்ப் பாரு தெரியும்.''

"இன்னிக்கு காலைல கூட பஸ் ஸ்டாண்டுலதானே பஸ் ஏறினேன்.''

"நம்ம ஆபீஸ் டயமான ஒன்பது டு பத்து மணி வரை ஐயா தலைமறைவாயிடுவார். அப்றமாத்தான் ஆஜராவார். ஏன்னா நாமெல்லாம் பாத்து சிரிப்போம் பாரு...''

"சிரிப்போமா...?''

"போய்ப் பாரு தெரியும். ஐயா இப்பவும் குபேரசாமிதான்.''

புதிர் போடுகின்றது புகை விடும் கூட்டம். எனக்குள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் கூடிப் பிரசவித்த குழப்ப அலைகள்!

பஸ் ஸ்டாண்ட்.

பத்து மணி கடந்த வேளையில் உள்ளே நுழைகிறேன்.

பரபரப்பான பிழைப்புத் தகிடுதத் தங்கள்.

ரிஸ்ட் வாட்ச் செய்த பாவம் பத்து ரூவாய்க்கு வாங்க ஆளில்லை.

(வாங்கின பத்தாவது நிமிடம் அது சுண்ணாம்பு டப்பாவாகப் போவது வேறு விஷயம்.)

புதிதாக ஒரு கூட்டம் டிட்டிபேட் கரடியை விற்கப் பார்க்கிறது. அசல் கரடியை வைத்து ஒரு பக்கமாக தாயத்து வியாபாரம் வேறு. போண்டால இருந்து பொண்டாட்டி வரை வாங்கலாம் என்று யாரோ சொன்னதெல்லாம் உள் ஓட நான் டாவ் தமிழ்மணியைத் தேடுகிறேன்.

எனக்கு அவன் சூரியனாக இருப்பான் என்று எண்ணியிருந்தேன். என்னவானான் என்பது தெரிந்தாக வேண்டும். ஃபேக்டரியில் நண்பர்கள் பேசியதெல்லாம் நிஜம் தானா?

தமிழ்..

தமிழ்மணி...

எங்கய்யா இருக்கே?

தேடித் தவித்த போது காதில் விழுந்தது அவன் குரல்.

"சிக்கிம் ஒரு லட்சம். பூடான் மூணு லட்சம். ஒரிஸ்ஸா நேபாள் பத்து லட்சம் சார். குபேரசாமி சன்னதில வெச்சு பூஜை செஞ்சு எடுத்துக்கிட்டு வந்த சீட்டு சார். பத்து சீட்டுக்கு ஒரு பரிசு உத்தரவாதம்!''

– அவன்தான்... அவனேதான்! அடப் பாவி எதால் மூழ்கினாயோ... அதைக் கொண்டே பிழைப்பா...? நான் பார்த்துக் கொண்டேயிருக்கும்போது ஒருவர் அவனை கூடிக்கிறார்.

"சிக்கிமும் பூடானும் இருக்கட்டும் மதுரை எத்தனை லட்சம் அதச் சொல்

லுப்பா."

"அத நீங்க வாங்க முடியாதுண்ணே. நீங்க ஒரிஸ்ஸா வாங்குங்க. உழுவாட்டி கேளுங்க..."

"என்ன வாங்குன காசைக் கொடுத் துடுவியோ?"

"வாங்கிக்குங்க. இப்ப என்ன ஒரு ருவாதானே?"

"பரவால்லியே... சரி சரி ஒரு பத்து சீட்ட கொடு."

"அண்ணே உழுந்தா நம்மளை மறந்து டாதீங்க..."

"பாதிய தொடுத்துட்றேன்" – அவர் அப்படிச் சொல்லும்போது அவன் முகம் ஒரு தினுசாக மாறிப் போகிறது. அப்படியே என்னையும் பார்த்து விடுகிறான். நிமிட நேரம்தான் தடுமாற்றம் திகைப்பு எல்லாம். சட்டென்று சுதாரித்து அங்கிருந்து நழுவு கிறான்.

"தமிழ்... தமிழ்மணி... நில்லு."

என் குரலுக்கு அவன் திரும்பத் தயாரில்லை. திரும்பவும் முடியாது.

"என்ன சார் உங்க தோஸ்த்தை கூப்பி டறீங்களா அவர் இப்ப தமிழ்மணி இல்ல சார். குபேரசாமி!"

– பக்கவாட்டிலிருந்து ஒரு குரல். அந்த லாட்டரி விற்கும் சிறுவன்.

"நீயா..."

"ஆமாம் சார்..."

"என்ன வெறும் கையோட நிக்கறே – சீட்டு விக்கலை."

"அவர் பாதி கொடுத்தாரோ கொடுக் கலையோ நான் முழுசாவே கொடுத்துட் டேன். நான் இப்ப ஏஜெண்ட்" – அந்தப் பொடியன் கண்ணடித்துச் சிரிக்கிறான்.

எனக்கு நிற்கும் இடம் நரநரக்கிறது.

காலடியில் கஜகர்ண மாற்றங்கள்.

"ஆமாம் உன் பேர் என்ன?"

"ராமச்சந்திரன் சார்.. வரேன்."

– போகிறான் அவன். அந்த ராமனைப் போலவே சொல்லில் நின்று விட்டவன்.

நான் திரும்புகிறேன்.

வயிறு... பாழாய்ப் போன வயிறு..

ஒரு ஜனத்தை இன்னொரு ஜனம் விழுங்கும் முகாந்திரத்தில் மும்முரமாக இருக்கிறது.

எனக்கு மட்டும் சற்று தெளிவு.

அனைத்துக்கும் நடுவில் தர்மசக்கரம் மட்டும் சரியாகவே சுற்றுவதாக!

(முற்றும்)

வெயிட் போட்ட பிரதமர்!







சுதிர் தைலாங். டெல்லியிருந்து வெளியாகும் இந்துஸ்தான் டைம்ஸ் இதழின் கார்ட்டூனிஸ்ட். அண்மையில், பிரதமரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அந்த நாற்பது நிமிட சந்திப்பின் போது வாஜ்பாயை, பல்வேறு கோணங்களிலும் கார்ட்டூனாக வரைந்து தள்ளிவிட்டார்.



"வாஜ்பாய் கொஞ்சம் வெயிட்போட்டிருக்கிறார்; ஆனால் பேச்சில் வழக்கமான நகைச்சுவைக்குக் குறைவில்லை" என்று கூறும் சுதிர், "போயஸ் தோட்டம் பற்றிய பயம் போய் விட்டதில், முகத்தில் ஒரு மலர்ச்சியும், தெளிவும் இருக்கிறது. பிரதமராக இருந்ததைவிட கேர்டேக்கர் பிரதமராக இருப்பதில் அவருக்கு ஒருவித நிம்மதி கிடைக்கிறதோ!" என்று கிண்டலடிக்கிறார்.





"இப்படி, ஜாலியாகப் பேசி, கார்ட்டூன் வரைய வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி. ஆனால், அதற்காக இனி கார்ட்டூனில் உங்களை கேலி செய்யாமல் விட்டு விடுவேன் என்று நினைத்துக் கொண்டு விடாதீர்கள்" என்று சுதிர் சொல்ல, வாய்விட்டுச் சிரித்தாராம் வாஜ்பாய்.



தொகுப்பு: **கௌதம்.**



பதினாறாம் அத்தியாயம்

மதுராந்தகத் தேவர்

இந்தக் கதையில் ஒரு முக்கிய பாத்திரமாகிய மதுராந்தகத் தேவரை, கதை ஆரம்பத்தில் கடம்பூர் மாளிகையிலேயே நாம் சந்தித்தோம். இன்னொரு முறை பழுவேட்டரையரின் பாதாள நிலவறைப் பாதை வழியாக நள்ளிரவில் அவர் அரண்மனைக்குச் சென்றபோது பார்த்தோம். அப்பொழுதெல்லாம் அந்தப் பிரசித்தி பெற்ற இளவரசரை, - பின்னால் பரகேசரி உத்தம சோழர் என்னும் பட்டப் பெயருடன் தஞ்சைச் சிம்மாதனத்தில் வீற்றிருக்கப் போகிறவரை, - நல்ல முறையில் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. அந்தக் குறையை இப்போது நிவர்த்தி செய்து வைக்க விரும்புகிறோம்.



கல்கி கலெக்ஷன்

மதுராந்தகரைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் அவருடைய பரம்பரையைக் குறித்தும் வாசகர்களுக்குச் சிறிது ஞாபகப் படுத்த வேண்டும்.

சுந்தர சோழ சக்கரவர்த்திக்கு முன்னால் நாட்டில் நீண்ட காலம் அரசு செலுத்தியவர் அவருடைய பெரிய தந்தை கண்டராதித்த சோழர். அவரும் அவருடைய தர்மபத்தினியான மழவரையர் மகள் செம்பியன் மாதேவியும் சிவபக்த சிகாமணிகள். சிவாலயத் திருப்பணிகளிலேயே தங்கள் வாழ்க்கையை முழுதும் ஈடுபடுத்தியவர்கள்.

தமிழ் நாடெங்கும் சிதறிக் கிடந்த தேவாரத் திருப் பதிகங்களைத் தொகுத்துச்

அமரர் கல்கி

சேர்க்கக் கண்டராதித்தர் ஆசை கொண்டிருந்தார். அந்த ஆசை அவர் ஆயுள் காலத்தில் நிறைவேறவில்லை. ஆயினும் சில பாடல்களைச் சேகரித்தார். தேவாரப் பதிகங்களின் முறையில் தாமும் சில பாடல்களைப் பாடினார். அவற்றில் சிதம்பரத்தைப் பற்றி அவர் பாடிய பதிகம் திருவிசைப்பா என்ற தொகுதியில் இன்னும் வழங்கி வருகிறது.

கண்டராதித்தர் தமது அரும்பெரும் தந்தையாகிய பராந்தக சக்கரவர்த்தி தில்லையம்பலத்துக்குப் பொன் வேய்ந்தது பற்றித் தாம் பாடிய பதிகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்:-

"வெங்கோல் வேந்தன் தென்னன்
நாடும் ஈழமும் கொண்ட திறல்
செங்கோற்சோழன் கோழிவேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல்வளையார் பாடியாடும்
மணி தில்லையம்பலத்துள்
எங்கோல் ஈசன் எம்மிறையை
என்றுகொல் எய்துவதே!"

என்ற பாடலில் தம் தந்தை பாண்டிய நாடும் ஈழமும் வென்றவர் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். பதிகத்தின் கடைசிப் பாடலில் தமது பெயரை அவர் குறித்திருப்பதுடன், தம்முடைய காலத்தில் சோழரின் தலைநகரம் தஞ்சையான தையும் குறிப்பிட்டிருக்கிறார்.

"சீரான்மல்கு தில்லைச்
செம்பொனம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன்
தஞ்சை யர்கோன் கலந்த
ஆராவின் சொல் கண்டராதித்தன்
அருந் தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும்
பேரின்பம் எய்துவரே!"

கண்டராதித்தருக்குப் போர் செய்து இராஜ்யத்தை விஸ்தரிப்பதில் நம்பிக்கை இருக்கவில்லை. போர்களினால் மனிதர்கள் அடையும் துன்பங்களைக் கண்டு வருந்தியவரான படியால் கூடிய வரையில் சண்டைகளை விலக்க முயன்றார்; சமாதானத்தையே நாடினார். இதன் காரணமாக இவர் ஆட்சிக் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் மிகச் சுருங்கலாயிற்று.



கண்டராதித்தர் தம் முதிர்ந்த வயதில் மழவரையர் மகளை மணந்துகொண்டார். அவர்களுடைய புதல்வன் மதுராந்தகன், கண்டராதித்தரின் அந்திய காலத்தில் சின்னஞ் சிறு குழந்தை. இராஜ்யத்தைச் சுற்றிலும் எதிரிகள் தலையெடுத்துக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் கண்டராதித்தரின் தம்பி அரிஞ்சயன் போரில் காயம்பட்டு மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். அரிஞ்சயனுடைய குமாரன் சுந்தர சோழன் அதற்குள் காளைப் பருவத்தைக் கடந்து, பல போர்களிலே வெற்றி முரசு கொட்டி, மகா வீரன் என்ற பெயர்

பெற்றிருந்தான். ஆதலின் கண்டராதித்தர் தமக்குப் பின்னர் சுந்தர சோழனே பட்டத்துக்குரியவன் என்று முடிவு கட்டிக் குடிமக்களுக்கும் அறிவித்து விட்டார். பின்னால் சிம்மாதனம் சம்பந்தமான குடும்பச் சண்டைகள் உண்டாகாதிருக்கும் பொருட்டுச் சுந்தர சோழருடைய சந்ததிகளே பட்டத்துக்கு உரியவர்கள் என்றும் சொல்லி விட்டார்.

தமது குமாரன் மதுராந்தகனைச் சிவ பக்தனாக வளர்த்துச் சிவ கைங்கரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று தம் மனைவியிடமும் அவர் சொல்லியிருந்தார். இவையெல்லாம் அந்நாளில் நாடறிந்த விஷயங்களாயிருந்தன.




செம்பியன்மாதேவி தன் கணவருக்கு அளித்த வாக்கை நிறைவேற்றி வந்தாள். மதுராந்தகனுடைய சிறு பிராயத்திலேயே அவன் உள்ளத்தில் சிவ பக்தியையும் உலக வாழ்வில் வைராக்கியத்தையும் உண்டாக்கி வளர்த்து வந்தாள்.

ஏறக்குறைய இருபது பிராயம் வரையில் மதுராந்தகன் அன்னையின் வாக்கையே வேத வாக்காகக் கொண்டு நடந்து வந்தான். இராஜ்ய விவகாரங்களில் அவனுக்குச் சிறிதும் பற்று ஏற்படவில்லை. சோழ சிங்காதனம் தனக்கு உரியது என்ற எண்ணமே அவன் உள்ளத்தில் உதயமாகாமல் இருந்தது.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்ததிலிருந்து அவன் மனம் மாறத் தொடங்கியது. ஆரம்பத்தில் இலேசாகத் தலைகாட்டிய ஆசைக்குப் பழுவூர் இளையராணி நந்தினி தூபம் போட்டுப் பெரிதாக்கி வந்தாள். சிறிய தீப்பொறி அதிவிரைவில் பெரிய காட்டுத் தீ ஆகி விட்டது. பல்வேறு காரணங்களினால் சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலரும் பெருந்தர அதிகாரிகளும் மதுராந்தகனை ஆதரித்துச் சதி செய்ய முற்பட்டதையும் பார்த்தோம். மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றுவதற்குச் சுந்தர சோழர் கண் மூடும் சந்தர்ப்பத்தை அவர்கள் எதிர் நோக்கியிருந்தார்கள். ஆனால் மதுராந்தகனோ அவ்வளவு காலம் காத்திருப்பதற்கே விரும்பவில்லை. சுந்தர சோழருக்குச் சிம்மாசனத்தில் பாத்தியதை இல்லையென்றும், தனக்கே சோழ சாம்ராஜ்யம் வந்திருக்க வேண்டும் என்றும் அவன் எண்ணத் தொடங்கினான். அதிலும் இப்போது சுந்தர சோழர் நோய்ப் பட்டுப் படுத்த படுக்கையாகி இராஜ்யத்தைக் கவனிக்க முடியாத நிலைமையில் இருந்தார் அல்லவா? ஆதலின் ஏன் தான் உடனடியாகத் தஞ்சாவூர் சிங்காதனமேறி இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது?

இவ்விதம் மதுராந்தகனுக்கு ஏற்பட்டிருந்த அரசுரிமை வெறியைக் கட்டுக்குள் அடக்கி வைப்பது இப்போது பழுவேட்டரையர்களின் பொறுப்பாயிருந்தது.



அவசரப்பட்டு காரியத்தைக் கெடுத்து விட அவர்கள் விரும்பவில்லை. சுந்தர சோழரின் இரு புதல்வர்களும் வீராதி வீரர்கள். அவர்களுடைய வீரச் செயல் களினாலும் பிற குணாதிசயங்களினாலும் குடி மக்களின் உள்ளங்களில் அவர்கள்



இடம் பெற்றிருந்தனர். கொடும்பாளூர் வேளார், திருக்கோவிலூர் மலைய மான் என்னும் இரு பெரும் தலைவர்கள் சுந்தர சோழரின் புதல்வர்களை ஆதரித்து நின் றார்கள். சைன்யத்திலேயும் ஒரு பெரும் பகுதி வீரர்கள் சுந்தர சோழரின் புத்திரர்களையே விரும் பினார்கள். ஆகையால் சக்கரவர்த்தி உயிரோடிருக்கும் வரையில் பழு வேட்டரையர்கள் பொறுமையுட னிருக்கத் தீர்மானித்தார்கள். இதற் கிடையில், சக்கரவர்த்தியின் மனமும் சிறி தளவு மாறியிருந்ததை அவர்கள் அறிந்துகொண்டார்கள். தமக்குப் பிறகு இளவரசர் மதுராந்தகருக்குத்தான் பட்டம் என்று சுந்தர சோழரே சொல்லி விட்டால் ஒரு தொல்லையும் இல்லை. இதற்குக் குறுக்கே நின்று தடை செய்யக் கூடிய வர்கள் இளைய பிராட்டியும் செம்பியன் மாதேவியுந்தான். இளைய பிராட்டியின் சூழ்ச்சிகளை மாற்றுச் சூழ்ச்சிகளினால் வென்று விடலாம். ஆனால் தமிழ் நாடெங்கும் தெய்வாம்சம் பெற்றவராகப் போற்றப்பட்டு வரும் செம்பியன் மாதேவி தடுத்து நின்றால், அந்தத் தடையைக் கடப்பது எளிதன்று. அந்தப் பெருமாட்டி தாம் பெற்ற புதல்வன் சிம்மாதனம் ஏறு வதை விரும்பவில்லையென்பது எங்கும்

பரவியிருந்தது. அன்னையின் வார்த்தையை மீறி மகன் சிங்காதனம் ஏறுவதைக் குடிமக்கள் எப்படி ஏற்றுக் கொள்ளுவார்கள்? ஒன்று, அந்த அம்மாளும் தமது கணவரைப் பின்பற்றிக் கைலாச பதவிக்குச் செல்ல வேண்டும். அல்லது அவருடைய மனம் மாறச் செய்ய வேண்டும். தாயின் மனத்தை மாற்றக்கூடிய சக்தி, பெற்ற பிள்ளையைத் தவிர வேறு யாருக்கு இருக்கக் கூடும்?

ஆதலின் அன்னையிடம் சொல்லி அவர் மனத்தை மாற்றும்படி மதுராந்தகத் தேவரை அடிக்கடி பழுவேட்டரையர்கள் தூண்டிக் கொண்டிருந்தார்கள். மதுராந்தகர் இந்தக் காரியத்தில் மட்டும் உற்சாகம் காட்டவில்லை. இராஜ்யம் ஆளும் ஆசை அவர் உள்ளத்தில் வெறியாக மூண்டிருந்தது. ஆனால் அன்னையிடம் அதைப் பற்றிப் பேச மட்டும் அவர் தயங்கினார். ஏன்? - அந்த மூதாட்டியைச் சந்தித்துப் பேசுவதற்கே அவர் அவ்வளவாக விரும்பவில்லை.

இப்போது, செம்பியன் மாதேவியே தஞ்சைக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருந்தார். தமது கணவருடைய விருப்பங்களில் முக்கியமானதொரு விருப்பத்தை நிறைவேற்றத் திட்டமிட்டிருப்பதாகவும், அந்தச் சந்தர்ப்பத்தில் தம் குமாரன் தம்முடன் இருக்க வேண்டும் என்றும் தெரியப்படுத்தியிருந்தாள். அதன்படியே சின்னப் பழுவேட்டரையர் மதுராந்தகரைப் பழையாறைக்குப் போய் வரும்படி கூறினார். இச் சந்தர்ப்பத்தில் தஞ்சைச் சிங்காதனத்துக்குத் தமக்குள்ள உரிமை பற்றித் தாயிடம் வாதாடி அவருடைய மனத்தை மாற்ற முயலும்படியும் சொல்லி அனுப்பினார்.

பதினேழாம் அத்தியாயம்

திருநாரையூர் நம்பி

மதுராந்தகத் தேவர் தமது பரிவாரங்களுடனும் வந்தியத்தேவனுடனும் பழையாறை நகருக்குள் பிரவேசித்தார். ஆரியப்படை வீடு, பம்பைப் படை வீடு, புதுப்படை வீடு, மணப்படை வீடு முதலான வீரர்கள் வாழும் பகுதிகளின் வழியாக ஊர்வலம் சென்றது. பிறகு கடை வீதிகள், குடிமக்கள் வாழும் பகுதிகள், ஆலயங்கள், ஆலயங்களைச் சூழ்ந்திருந்த சந்நிதித் தெருக்கள் முதலியவற்றின் வழியாகச் சென்றது. ஆங்காங்கு ஒரு சிலர் வீட்டு வாசல்களில் நின்று பார்த்தார்கள். ஆனால் மக்களிடையே எவ்வித உற்சாகமும் இல்லை என்பதை வந்தியத்தேவன் கண்டான். முன்முறை அவன் இந் நகருக்குள் வந்திருந்தபோது நகரம் கோலாகலத்தில் மூழ்கியிருந்தது. இப்போது வீதிகள் ஜன சூனியமாயிருந்தன. பழையாறை பாழடைந்த நகரமோ என்று சொல்லும்படி இருந்தது. மதுராந்தகத் தேவர் மீது பழையாறை மக்கள் அவ்வளவாக விசுவாசம் கொண்டிருக்கவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. வந்தியத்தேவனுக்கு இது ஒரு விதத்தில் சௌகரியமாயிருந்தது. தன் முகம் தெரிந்தவர்கள் யாரேனும் தன்னைப் பார்க்கும்படி நேரவும், அதனால் தொல்லை ஏற்படவும் இடமில்லையல்லவா?

இவர்கள் சோழ மன்னர்களின் புராதன அரண்மனை வீதியை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இன்னொரு பக்கமிருந்து பெரியதோர் ஊர்வலம் வந்துகொண்டிருந்ததைக் கண்டார்கள். அந்த ஊர்வலத்தின் மத்தியில் திறந்த பல்லக்கு ஒன்று வந்துகொண்டிருந்தது. அதில் இருந்தவர் யார் என்பது நன்கு தெரியவில்லையாயினும் யாரோ சிவனடியார் என்றும் இளம் பிராயத்தினர் என்றும் தோன்றியது. சிவிகைக்கு முன்னும் பின்னும் ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தது. கையில் தாளங்களை வைத்து இனிய ஜங்கார ஓசையை எழுப்பிக்கொண்டு சிலர் பல்லக்கின் முன்னாலும் பின்னா

லும் பாடிக் கொண்டு வந்தார்கள்.

இடையிடையே "திருச்சிற்றம்பலம்" "ஹர ஹர மகாதேவா!" என்ற கோஷங்களுடன் "திருநாரையூர் நம்பி வாழ்க!" "பொல்லாப் பிள்ளையாரின் அருட் செல்வர் வாழ்க!" என்ற கோஷங்களும் எழுந்து வானை அளாவின.

மதுராந்தகர் அந்த ஊர்வலத்தை அருவருப்பைக் கொண்ட கண்களினாலே பார்த்தார். பக்கத்திலிருந்த வீரனைப் பார்த்து ஏதோ கேட்டார். "ஆம்; பல்லக்கிலே வருகிறவர்தான் திருநாரையூர் நம்பி!" என்று அவன் மறுமொழி கூறினான்.

"இருந்தாலும், என்ன தடபுடல்! இந்த ஊரில் நம்மை யாரும் கேட்பாரைக் காணோம்! இந்த நம்பியைச் சூழ்ந்து கொண்டு ஜனங்கள் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே?" என்றார் மதுராந்தகத் தேவர்.

அந்த ஊர்வலம் இவர்கள் இருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்திலேயே சென்றது. ஆயினும் பல்லக்கின் அருகிலே வந்தவர்களில் ஒருவர், முன்னொரு சமயம் கொள்ளிட நதியைப் படகிலே தாண்டியபோது ஆழ்வார்க்கடியானோடு சண்டையிட்ட வீர சைவர் என்று வந்தியத்தேவனுக்குத் தோன்றியது.

மதுராந்தகத் தேவரும் அவருடைய பரிவாரங்களும் அரண்மனை வீதியை அடைந்து செம்பியன் மாதேவியின் மாளிகையை அடைந்தார்கள். அரண்மனை வாசலிலேயே பெரிய பிராட்டி நின்றுகொண்டிருந்தார். யாரையோ வரவேற்பதற்கு ஆயத்தமாக அவர் காத்திருந்ததாய்த் தோன்றியது. மதுராந்தகர் ரதத்திலிருந்து இறங்கி அன்னையின் அருகில் சென்று வணங்கினார். வணங்கிய மதுராந்தகரை உச்சி மோந்து அன்னை ஆசி கூறினார். பின்னர், "மகனே! நல்ல தருணத்தில் வந்து விட்டாய்! திருநாரையூர் நம்பி வந்து கொண்டிருக்கிறார். அவசியமானால் சற்றுச் சிரம பரிகாரம் செய்துகொண்டு விரைவில் சபா மண்டபத்துக்கு வந்து சேர்!" என்று கூறினார்.

மதுராந்தகரின் முகம் பொலிவு இழந்ததை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான். பாவம்! தம்மை வரவேற்பதற்காகவே பெரிய பிராட்டி அரண்மனை வாசலில் காத்திருந்ததாக மதுராந்தகர் எண்ணியிருந்தார் போலும்! என்ன ஏமாற்றம்! பல்லக்கிலே பின்னால் ஊர்வலமாக வரும் சிவனடியாரை வரவேற்பதற்குத்தான் அவர் காத்திருந்தார் என்று தெரிந்ததும் மதுராந்தகருக்கு, – நாளைக்குச் சோழ சிம்மாதனத்தில் ஏறலாம் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருப்பவருக்கு, – மிக்க ஏமாற்றமாயிருப்பது இயல்புதானே?

அரண்மனையில் மதுராந்தகருக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்கு எல்லாரும் சென்றார்கள். மதுராந்தகர் உடை மாற்றுதல் முதலிய காரியங்களைச் சாவகாசமாகவே செய்து கொண்டிருந்தார். சபா மண்டபத்துக்குப் போக அவ்வளவாக ஆர்வம் கொண்டிருந்ததாய்த் தெரியவில்லை. அன்னையிடமிருந்து ஆள் மேல் ஆள் வந்து கொண்டிருந்தனர். கடைசியாக, மதுராந்தகர் புறப்பட்டார். புறப்பட்டபோது "அந்த நிமித்தக்காரன் எங்கே?" என்று வினவினார். அவருடன் சபா மண்டபத்துக்குப் போகத் துடி துடித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன் "இதோ ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான். அவனையும் இன்னும் சிலரையும் அழைத்துக்கொண்டு மதுராந்தகர் சபா மண்டபம் போய்ச் சேர்ந்தார்.


மண்டபத்தில் ஏற்கெனவே சபை கூடியிருந்தது. ஒரு பக்கத்தில் செம்பியன் மாதேவியும் குந்தவைப் பிராட்டியும் மற்றும் சில அரண்மனைப் பெண்களும் வீற்றிருந்தார்கள். சபையில் நடுநாயகமாகப் போட்டிருந்த பீடத்தில் ஒரு வாலிபர் அமர்ந்திருந்தார். அவர் இளம் பிராயத்தவர். விபூதி ருத்ராட்சதாரி. அவருடைய திருமுகம் களையுடன் பொலிந்தது. அவர் எதிரில் ஓலைச் சுவடிகள் சில கிடந்தன. கையிலும் ஓர் ஓலைச் சுவடியை அவர் வைத்துக் கொண்டிருந்தார். அவர் அருகில் விபூதி ருத்ராட்சதாரியான பெரியவர் ஒருவர் பரவசமாக நின்றார். இன்னும் சபா மண்டபத்தில் ஜனங்கள்

நிறைந்திருந்தார்கள். இளைஞர் பல்லக்கிலே வந்தவர் தான் என்பதையும், பக்கத்திலே நின்றவர் முன்னொரு தடவை தான் கொள்ளிடத்துப் படகில் பார்த்தவர் என்பதையும் வந்தியத்தேவன் கண்டு கொண்டான். அவனுடைய கண்கள் சபா மண்டபத்தில்



அங்குமிங்கும் சுற்றிச் சுழன்றாலும் கடைசியில் பெரிய பிராட்டிக்கு அருகில் வீற்றிருந்த குந்தவையின் திருமுகத்திலேயே வந்து நின்றன. குந்தவைதேவியின் கண்களோ முதல்முறை அவனைப் பார்த்ததும் வியப்புக்கு அறிகுறியைக் காட்டின. பிறகு அவன் பக்கம் இளவரசியின் கண்கள் திரும்பியதாகவே தெரியவில்லை. தன்னை ஒருவேளை தெரிந்துகொள்ளவில்லையோ என்றுகூட அவனுக்கு ஐயம் உண்டாயிற்று.

மதுராந்தகர் சபா மண்டபத்தில் பிரவேசித்ததும் பெண்மணிகளைத் தவிர மற்றவர்கள் எழுந்து மரியாதை செய்தார்கள். மதுராந்தகர் தம் பீடத்தில் அமர்ந்



ததும் மற்றவர்களும் அவரவர்களுடைய இடத்தில் உட்கார்ந்தார்கள்.

செம்பியன் மாதேவி மதுராந்தகரைப் பார்த்து, "குமாரா! இந்த இளம் நம்பி திருநாரையூரைச் சேர்ந்தவர். அவ்வூரிலுள்ள பொல்லாப் பிள்ளையாரின் பூரண அருளைப் பெற்றவர். இதுவரையில் யாருக்கும் கிடைக்காத தேவாரப் பதிகங்கள் சில இவருக்குக் கிடைத்திருக்கின்றன. முன்னொரு காலத்தில் நமது சோழ குலத்தில் உதித்த மங்கையர்க்கரசியார் பாண்டிமாநாட்டின் மகாராணியாக விளங்கினார். அவருடைய அழைப்புக்கிணங்கி ஆளுடைய பிள்ளையார் ஞான சம்பந்தர் மதுரை மாநகருக்குச் சென்றார். அங்கே சமணர்களை வாதப் போரில் வென்றார். அச்சமயம் மதுரை மாநகரில் சம்பந்த சுவாமி பாடிய பதிகங்கள் சில இவருக்குக் கிடைத்திருக்கின்றன. அந்தப் பதிகங்களில் நமது சோழ குலத்து மாதரசியைப் பற்றியும் சம்பந்தர் பாடியிருக்கிறார். அந்தப் பாடல்களைக் கேட்கும்போது எனக்கு உடல் பூரித்துப் பரவசமாகிறது. உன் தந்தை இருந்து கேட்டிருந்தால் எவ்வளவோ மகிழ்ச்சியடைந்திருப்பார். நீயாவது கேள்!" என்று சொன்னார்.

மதுராந்தகர், "கேட்கிறேன், தாயே! பதிகத்தை ஆரம்பிக்கட்டும்" என்றார். ஆனால் அவருடைய முகம் அவ்வளவாக மலர்ந்திருக்கவில்லை. அவருடைய உள்ளம் வேறு எங்கேயோ இருந்தது. திருநீறு ருத்ராட்சம் அணிந்த சாதாரணச் சிறுவன் ஒருவனைப் பெரியதொரு பீடத்தில் நடுநாயகமாக அமர்த்தித் தடபுடல் செய்வதும் அவருக்குப் பிடிக்கவில்லை. அன்னையைத் திருப்தி செய்வதற்காகப் பொறுமையுடன் உட்கார்ந்திருந்தார்.

பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி தம் கையிலிருந்த ஓலைச்சுவடியிலிருந்து படிக்கத் தொடங்கினார். ஞான சம்பந்தர் மதுரை மாதகரைப் பார்த்ததும், "சிவ பக்திச் செல்வத்திற் சிறந்த மங்கையர்க்கரசியார் வாழும் பதி அல்லவா இது?" என்று வியந்து பாடிய பதிகங்களை முதலில் அவர் பாடினார்.


"மங்கையர்க்கரசி வளவர்
கோன்பாவை
வரிவளைக்கைம்மட மானி
பங்கயச்செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாடொறும் பரவப்

பொங்கழலுருவன் பூத நாயகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னோடும்
அமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே!

"மண்ணெலாம் நிகழ மன்னனால்
மன்னும்
மணி முடிச் சோழன்றன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டி
மாதேவி
பாங்கினாற் பணி செய்து பரவ
விண்ணுளோர் இருவர் கீழொடு
மேலும்
அளப்பரிதாம் வகை நின்ற
அண்ணலார் உமையோடு இன்புறு
கின்ற
ஆலவாயாவதும் இதுவே!"

என்னும் பாடல்களைக் கேட்டபோது செம்பியன் மாதேவியின் கண்களிலிருந்து முத்து முத்தாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. அத்தகைய மங்கையர்க்கரசியாரைப் பெற்ற குலத்தில் தாமும் வாழ்க்கைப் பட்டு மகாராணியாக வாழ்ந்திருக்கக் கொடுத்து வைத்திருந்த பூர்வ ஜன்ம பாக்கியத்தை எண்ணி எண்ணி மனம் பூரித்து மகிழ்ந்தார்.

மதுராந்தகருக்கோ மேற்கூறிய பாடல்களில் 'மண்ணெலாம் நிகழ மன்னனால் மன்னும் மணிமுடிச் சோழன்' என்னும் வரி மட்டுமே மனத்தில் பதிந்தது. அத்தகைய புராதனப் பெருமை வாய்ந்த சோழர் குலத்து மணி மகுடம் தன் சிரஸை அலங்கரிக்க வேண்டியதிருக்க, இன்னொருவர் அதை அபகரித்துக் கொண்டிருப்பதை நினைத்தபோது



அவருக்கு ஆத்திரம் உண்டாயிற்று.

சம்பந்தர் மங்கையர்க்கரசியாரைப் போய்ப் பார்க்கிறார். பாண்டி மாதேவி அந்தப் பாலகரைப் பார்த்து, "ஐயோ! இளம்பிள்ளை எங்கே? பிரம்ம ராட்சதர்கள் போன்ற சமணர்கள் எங்கே? இந்தப் பிள்ளை அவர்களுடன் எப்படி வாதப் போரிட்டு வெல்ல முடியும்!" என்று கவலையுறுகிறார். அதையறிந்த சம்பந்தர் பாண்டிமாதேவியைப் பார்த்துச் சொல்கிறார்.

"மானினேர் விழி மாதராய் வழுதிக்கு
மாபெருந் தேவி கேள்!

பானல்வாயொரு பாலன் ஈங்கிவன்
என்று நீ பரிவெய் திடேல்!

ஆனை மாமலையாதியாய
இடங்களிற் பல அல்லல் சேர்

ஈனர்கட் கெளியேன் அலேன் திரு
ஆலவாயரன் நிற்கவே!"

என்ற பதிகத்தைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி பாடியபோது, செம்பியன் மாதேவி தம்மையே மங்கையர்க்கரசியாகவும், பதிகம் பாடிய நம்பியையே ஞானசம்பந்தராகவும் பாவனை செய்துகொண்டு இந்த உலக நினைவையே மறந்து மனம் பூரித்தார்.

மதுராந்தகத் தேவரோ, "ஆம்; நான் இளம்பிராயத்துச் சிறுபிள்ளைதான்! ஆனால் திருக்கோவலூர் மலையமானுக்கும் கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரிக்கும் அவர்களுடைய ஆதரவைப் பெற்ற சுந்தர சோழரின் புதல்வர்களுக்கும் அஞ்சி விட மாட்டேன். சம்பந்தருக்கு ஆலவாயன் அருள் இருந்தது போல எனக்கும் பழுவேட்டரையர் உதவி இருக்கிறது!'' என்று எண்ணிக் கொண்டார்.

வந்தியத்தேவனுடைய செவிகளில் பாடல் ஒன்றும் புகவேயில்லை. அவனுடைய கண்களும் கருத்தும் குந்தவை தேவியினிடமே முழுதும் ஈடுபட்டிருந்தன. இளையபிராட்டி ஒருகால் தன்னைத் தெரிந்து கொள்ளவே யில்லையா, தெரிந்து கொண்டும் பராமுகமா, அல்லது தன்னிடம் ஒப்புவித்த காரியத்தை நிறைவேற்றி விட்டு வந்து உடனே சொல்லவில்லை என்ற கோபமா? - என்று இப்படி அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. அத்துடன் இளையபிராட்டியைத் தனிமையில் எப்படிச் சந்திப்பது, சந்தித்துச் செய்தியை எப்படிச் சொல்லுவது என்றும் அவன் யோசனை செய்து கொண்டிருந்தான்,.

பாடல்கள் முடிவடைந்ததும் செம்பியன் மாதேவி நம்பியாண்டாருடன் வந்திருந்த பெரியவரைப் பார்த்து, "ஐயா! இந்த இளம் பிள்ளையைப் பார்த்தால் ஞான சம்பந்தரே மீண்டும் வந்து அவதரித்திருப்பது போலத் தோன்றுகிறது. இவரை அழைத்துக்கொண்டு தமிழகமெங்கும் ஊர் ஊராகச் செல்லுங்கள். அங்கங்கே கிடைக்கும் தெய்வீகமான தேவாரப் பதிகங்களைச் சேகரித்துக் கொண்டு வாருங்கள். அப்பர் பதிகங்களையும், சம்பந்தர் பதிகங்களையும் சுந்தரமூர்த்தியின் பாடல்களையும் தனித்தனியாகத் தொகுக்க வேண்டும். சிவாலயங்கள் எல்லாவற்றிலும் தினந்தோறும் பாடச் செய்ய வேண்டும். இது என் கணவருடைய விருப்பம். அதை என் வாணாளில் நிறைவேற்றிப் பார்க்க ஆசைப்படுகிறேன். நீங்கள் ஊர் ஊராய்ப் போவதற்கு வேண்டிய சிவிகைகள், ஆட்கள், பரிவார சாதனங்கள், - எல்லாம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். சக்கரவர்த்தியின் அனுமதியைக் கோரி என் குமாரனிடமே செய்தி சொல்லி அனுப்புகிறேன்!'' என்றார். அச்சபையில் அப்போது எழுந்த கோலாகலமான கோஷங்கள் மதுராந்தகரின் செவிகளுக்கு நாராசமாயிருந்தன.

(தொடரும்)

அமரர் கல்கி

மற்றொரு வெற்றி!

"அபூர்வ சகோதரர்கள்" என்னும் படம் நாடெங்கும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதைத்தான் "மற்றொரு வெற்றி" என்று தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிச் சொல்லும்போது, ஜெமினி ஸ்டுடியோவின் வெற்றியையோ, ஸ்ரீ எஸ்.எஸ். வாஸனுடைய வெற்றியையோ மனதில் வைத்துக் கொண்டு சொல்லவில்லை. "சுத்தமான நல்ல படங்களுக்கு நம் நாட்டிலே இடம் உண்டு" என்ற கட்சிக்காரர்களுக்கு இந்தப் படம் மற்றொரு வெற்றி என்றுதான் சொல்லுகிறேன்.

'ஸெக்ஸ் அப்பீல்' என்று சொல்லப் படும் ஆபாசக் காட்சிகளும், 'காமிக்'குகள் என்ற பெயரால் வழங்கும் கீழ்த்தர நிகழ்ச்சிகளும் இருந்தால்தான் நம்முடைய நாட்டில் படங்கள் வெற்றிகரமாக ஓடும் என்று 'புரொட்யூஸர்கள்' என்று சொல்லப்படும் விந்தை மனிதர்கள் முன்பெல்லாம் கூறுவதுண்டு. இதற்காக அவர்கள் நம்முடைய தேவர்கள் தேவியர்களைத் திரைகளிலே கொண்டு வந்து படாதபாடு படுத்தி வைப்பார்கள். பரமசிவனுடைய நெற்றியிலே நாமத்தைப் போடுவார்கள். மகாவிஷ்ணுவுக்கு நீண்ட தாடியைக் கொடுப்பார்கள். பிரம்ம தேவனுடைய நாலு தலைகளையும் களிமண்ணாலே செய்து வைத்து விடுவார்கள்!

இன்னும் இவர்கள் "பாமர மக்களுக்குப் பிடிக்கும்" என்று சொல்லிக்கொண்டு படங்களிலே புகுத்திய அக்கிரமங்களுக்குக் கணக்கே இல்லை. பெண்டாட்டியின் கையில் விளக்குமாற்றைக் கொடுத்துப் புருஷனை அடிக்கச் செய்வார்கள். படுக்கையறைக் கட்டிலின் கீழே சோர நாயகனை ஒளித்து வைப்பார்கள். உயிரோடு தவளைகளை விழுங்கச் செய்து "இது ஹாஸ்யம்! சிரியுங்கள்!" என்று சொல்லுவார்கள்.

இவையெல்லாம் ஆபாசமாயிருக்கின்றனவே, நம்முடைய பண்பாட்டுக்கும் பெருமைக்கும் இழிவு தேடுகின்றனவே என்று சொன்னால், "உங்களுக்கு என்ன? நீங்கள் இப்படித்தான் சொல்லுவீர்கள். இந்த மாதிரி காட்சிகள் இருந்தால்தான் பாமர ஜனங்கள் படம் பார்ப்பார்கள்; நாங்கள் போட்ட பணம் திரும்பக் கிடைக்கும்!" என்று டாக்கி முதலாளிகள் பதில் சொல்லுவார்கள்.

மேலே நாம் அவர்களிடம் சொல்லு வதற்கு ஒன்றும் இராது. 'பாமர ஜனங்கள்' மீது என்ன பழியை வேண்டுமானாலும் போடலாம்! அந்த அப்பாவிகள் சுமந்துதான் தீர வேண்டும்! பாமர ஜனங்களைப் பற்றிப் பேச நமக்கு பாத்தியதை இல்லை. சினிமா முதலாளிகளுக்குத்தான் அந்த ஏகபோக உரிமை. "பாமர ஜனங்களுக்கு எது பிடிக்கும் என்பது



உங்களுக்குத் தெரியாது!" என்று ஒரே போடாய்ப் போட்டு நம்முடைய வாயை அடைத்து விடுவார்கள்.

அப்படிப் பேசியவர்களுடைய கட்சி எவ்வளவு அபத்தமானது என்பதை "அபூர்வ சகோதரர்கள்" படம் நிரூபித்திருக்கிறது. ஒருவிதமான ஆபாசமும் இல்லாமல் படம் எடுத்தாலும் மற்ற நல்ல அம்சங்கள் பொருந்தியிருந்தால் பொதுமக்கள் (பாமர ஜனங்கள் உள்படப்) பார்ப்பார்கள், படம் வெற்றிகரமாக ஓடும் என்பதற்கு "அபூர்வ சகோதரர்கள்" ஒரு சிறந்த அத்தாட்சியாகும். ஆகையினால்தான், "சுத்தமான படங்கள் வேண்டும்" என்று சொல்லும் கட்சிக்கு இந்தப் படம் "மற்றொரு வெற்றி" என்று சொல்கிறேன். இதற்கு முன்னாலேயும் சில தூய்மையான படங்கள் வெளியாகி வெற்றி பெற்றிருக்கிறபடியால் இதை "மற்றொரு வெற்றி" என்று கூறுகிறேன்.

● ● ●

அலெக்ஸாண்டர் டூமாஸ் என்னும் பிரஞ்சுக் கதை ஆசிரியர் விறுவிறுப்பான சம்பவங்கள் அடங்கிய கதைகளை எழுதுவதில் பிரசித்தி பெற்றவர். ஆனால் அவர் எழுதிய கதைகள் எல்லாம் சினிமாவுக்குப் பொருத்தமாயிரா. அப்படிச் சினிமாவுக்குப் பொருத்தமாயுள்ள கதைகளும் இந்திய வாழ்க்கையோடு ஒட்டி அமைவது துர்லபம். "கார்ஸிகன் பிரதர்ஸ்" என்னும் கதை சினிமாவுக்குப் பொருத்தமாயும் இந்திய வாழ்க்கையோடு ஒருவாறு ஒட்டியமைக்கக் கூடியதாயும் உள்ளது. ஜெமினி ஸ்தாபனம் அப்படிப்பட்ட கதையைத் தேர்ந்தெடுத்தது பற்றி முதலில் பாராட்ட வேண்டும்.

அபூர்வ சகோதரர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொண்டு பிறந்தவர்கள். அவர்கள் பிறப்பதற்கு உதவி செய்த டாக்டர், சஸ்த்திர சிகிச்சை செய்து அவர்களைத் தனித் தனிக் குழந்தைகளாக்கி விடுகிறார். அவர்களுடைய தந்தையின் விரோதியான ஒரு ஜமீன்தாரின் சதிச் செயலினால் குழந்தைகள் தந்தையையும், தாயையும் இழந்து, காட்டில் ஒன்றும், வீட்டில் ஒன்றுமாக வளர்கின்றன. பிறக்கும்போது ஒட்டிக்கொண்டு பிறந்த காரணத்தினால் ஒரு சகோதரனுடைய உணர்ச்சி அநுபவங்கள் இன்னொரு சகோதரனை எப்போதும் பாதித்துக் கொண்டு வருகின்றன. கடைசியில் நாட்டில் வளர்ந்த இளைஞன் காதல் வசப்படும் போது மற்றவனும் அந்த உணர்ச்சிக்கு ஆளாகிறான். இது காரணமாக அவர்களுடைய சகோதர வாஞ்சைக்கே பங்கம் உண்டாகும் போலிருக்கிறது. நல்லவேளையாக எதிரி மார்த்தாண்டன் அவர்களுடைய வாழ்க்கையில் குறுக்கிடுகிறான். ஒரு சகோதரன் எதிரியைக் கொல்லும் முயற்சியில் உயிரை விடுகிறான். இன் னொருவன் இழந்த ஜமீனைப் பெற்றுக் காதலித்த பெண்ணையும் மணந்து கொள்ளுகிறான்.

இந்த டூமாஸ் கதை விறுவிறுப்பான நிகழ்ச்சிகளும் உணர்ச்சிப் போராட்டங்களும் நிறைந்தது. அதில் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப, இன்னும் பல புதிய நிகழ்ச்சிகளை அமைத்து "அபூர்வ சகோதரர்கள்" என்னும் படத்தை எடுத்திருக்கிறார்கள்.

கதாநாயகியைச் சில நெருக்கடியான கட்டங்களுக்கு உட்படுத்தி அந்த நெருக்கடிகளிலிருந்து அவளை விடுவிக்கும் இடங்கள் மிகச் சாதுர்யமாய் அமைந்திருக்கின்றன.

● ● ●

கலா ரஸிகர்கள் வியந்து பாராட்டும்படியான நடிப்புத் திறமையை இந்தப் படத்தில் காணலாம். பதினைந்து வருஷத்துக்கு முன்னாலேயே பதிபக்தி, சதி லீலாவதி முதலிய நாடகங்களில் ஸ்ரீ எம்.கே. ராதா மிகவும் சோபித்தார். பிறகு அவர் நடித்த சினிமாப் படங்களில் அவரது நடிப்புத் திறமை அவ்வளவாகப் பிரகாசிக்கவில்லை. அதற்குக் காரணம் படம் எடுத்தவர்களே தவிர அவர் இல்லை என்று இந்தப் படத்தின் மூலம்

ருசுவாகிறது. அபூர்வ சகோதரர்கள் இரண்டு பேர் வேஷத்தில் ஸ்ரீ எம்.கே. ராதா அபூர்வமாக நடித்திருக்கிறார். வெவ்வேறு முரண்பட்ட உணர்ச்சிகளை வெகு



அற்புதமாக முகபாவத்திலும் பேச்சிலும் வெளிப்படுத்தி நடித்திருக்கிறார். முக்கியமாக, காட்டிலே வளர்ந்து உலகமறியாத சாதுவாக நடிக்கும் இடத்திலும், சகோதரனுடைய உணர்ச்சிகளுக்குத் தான் அடிமையாக இருந்து அவதிப்படுவதைக் குறித்து முறையிடும் இடத்திலும், சகோதரனிடம் உள்ள பாசமும் அசூயையும் மனதில் போராடும் இடத்திலும் அவரது உன்னத நடிப்புத் திறன் வெளியாகிறது.

மார்த்தாண்டன் என்னும் ஜமீன்தாராக நடிக்கும் நாகேந்திர ராவின் நடிப்புத் திறமையை மிகச் சிறந்த மேனாட்டு நடிகரின் நடிப்புத் திறமையுடனேதான் ஒப்பிட வேண்டும். அவருடைய முகமும் கண்களும் மீசையும் புருவங்களும் மன நிலையைச் சில சமயம் வெளிப்படுத்தவும் சில சமயம் மறைத்து வைக்கவும் உபயோகப்படுகின்றன. அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அந்த அந்த வார்த்தையின் தொனியும் பாவ பூர்வமாய் அர்த்த புஷ்டியுடன் வெளி வருகின்றன. குருட்டுக் காதலினால் மதி மோசம் போன அசட்டுக் காதலனாக நடிக்கும் இடங்கள் வெகு ரஸமாயிருக்கின்றன.

ஸ்ரீமதி பானுமதி உல்லாஸ ஹாஸ்ய நடிப்பில் அவருக்கு இணையில்லை என்று சொல்லக் கூடியவாறு நடித்திருக்கிறார். சமையல் அறையிலிருந்து வெளியேறுவதற்காக அங்கிருந்த சிப்பாய்களையும் பிறகு காவல்காரர்களையும் ஏமாற்றும் இடங்கள் பிரமாதம். மறுபடியும் ஒருதடவை காவலாளிகளிடமிருந்து தப்புவதற்காக முயன்று நாட்டியக்காரிகளின் கோஷ்டியில் புகுந்து அவர்களைப் போல் தானும் ஆட முயன்று தப்புந் தவறுமாகக் கையைத் தூக்கும் கட்டம் பிரமாதத்துக்கும் மேலே. ஸ்ரீமதி பானுமதியின் நடிப்புத் திறன் இவ்வளவு என்பதைக் கண்டுபிடித்து இந்தப்

படத்தில் பூரணமாகப் பயன் படுத்தியிருக்கிறார்கள்.

• • •

கதைப் போக்கின் அமைப்பு, டைரக்ஷன் திறமை, ஸ்டுடியோ வசதி, 'டெக்னீஷியன்'களின் ஆற்றல் ஆகியவற்றினாலேயே ஒரு படத்தை மிக வெற்றிகரமாய் எடுக்கலாம் என்பதற்கு "அபூர்வ சகோதரர்கள்" சிறந்த உதாரணமாகும்.

கதைப் போக்கில் சில இடங்களில் சந்தேகம் எழுகின்றது. (1) ஒரு சகோதரனை அடித்தால் இன்னொரு சகோதரனுக்கு வலிக்கிறது அல்லவா? அது போலவே ஒரு சகோதரன் காதலில் இன்பமுற்றால் இன்னொரு சகோதரனும் இன்பந்தானே அடைய வேண்டும்? ஏன் துன்பமும் அசூயையும் அடைகிறான்? (2) இரண்டு சகோதரர்களையும் ஒருவரையொருவர் கத்தியால் குத்த முயன்று கீழே விழுந்து புரளும்போது கதாநாயகி ஓடி வந்து அவர்களுடைய சண்டையைத் தீர்க்க ஏன் முயலவில்லை? (3) கடிதம் எழுதி வைத்து விட்டு ஓடிப் போனவள் வேறு எங்கேயாவது தொலைந்து போகாமல் தன்னைக் கெடுக்க முயன்ற மார்த்தாண்டன் இருக்குமிடத்துக்கே போய்ச் சேர்வது ஏன்? – இம்மாதிரி சந்தேகங்கள் சில சமயம் ஏற்படுகின்றன. ஆனால் அவற்றைக் குறித்து யோசிப்பதற்கு நமக்கு அவகாசம் கிடைப்பதில்லை. அடுத்த நிகழ்ச்சி, அதற்கடுத்த நிகழ்ச்சி, மோதிக்கொண்டு வந்து நம்மைத் திணறச் செய்கின்றன. படத்தில் 'டெம்போ' என்று சொன்னால் இந்தப் படத்திலேதான் பார்க்க வேண்டும். 'படம் ஓடுகிறது' என்று சாதாரணமாய்ச் சொல்லுவதுண்டு. இந்தப் படமோ விழுந்தடித்து ஒரே ஓட்டமாய் வாயுவேக மனோவேகமாய் ஓடுகிறது. பார்ப்பவர்களுக்கு மூச்சு விடக்கூட அவகாசம் கிடைப்பதில்லை. யோசிப்பதற்கு நேரம் எப்படி இருக்கும்?

• • •

"அபூர்வ சகோதரர்கள்" என்னும் படம் தமிழ், ஹிந்தி என்னும் இரு பாஷைகளிலும் நாலே மாதத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

நாலு மாதத்தில் படம் எடுப்பது ஒரு பெரிய காரியம் இல்லை. ஏதாவது ஒரு குப்பைப் படத்தை நாலு மாதத்தில் எடுத்து விட்டால் அதற்காக யாரும் பெருமை யடித்துக் கொள்ள முடியாது. படம் நன்றாயில்லாவிட்டால் "யார் இவ்வளவு அவசரப்பட்டுப் படம் எடுக்கச் சொன்னது?" என்றுதான் கேட்கத் தோன்றும்.

நாலு மாதத்திற்குள்ளே நல்ல படமாகவும் எடுத்து வெற்றி பெற்றால் அது பாராட்டப்பட வேண்டிய காரியந்தான்.

ஹிந்தியில் இதே படம் 'நிஷான்' என்னும் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அதையும் நான் பார்க்க நேர்ந்தது. தமிழைக் காட்டிலும் இரண்டொரு அம்சங்களில் திருத்தமாகவே அமைந்திருக்கிறது.

உதாரணமாக, தமிழ்ப் படத்தில் குழந்தைகளுக்குச் சிகிச்சை செய்யும் டாக்டரின் தாடி இருபது வருஷ காலம் ஒரே மாதிரியாக இருக்கிறது. ஹிந்திப் படத்தில் தாடிக்கும் வயதாகி மாறுதல் அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

ஹிந்தி 'நிஷான்' வடநாட்டில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது என்று தெரிகிறது. தமிழர் ஒருவர் நல்ல முறையில் ஒரு காரியத்தைச் செய்து நாடெங்கும் புகழ் பெற்றால் அதைப் பற்றிப் பெருமை கொள்ள நமக்கு உரிமை உண்டு. ஆகையால் ஸ்ரீ எஸ்.எஸ். வாஸனுடைய வெற்றியைத் தமிழ்நாட்டின் வெற்றியாகவே கருதி மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

இது மேனாட்டில் பிரபலமான ஆசிரியரின் கதையொன்றை வைத்து எடுத்த படம். இங்கிலீஷிலும் ஏற்கெனவே படமாக வெளியாகியிருக்கிறது. உள் நாட்டுக் கதையைக் கொண்டு இம்மாதிரி உயர்ந்த முறையில் படம் எடுத்திருந்தால் சர்வதேசப் பிரசித்தி அடைந்திருக்கும். ●

(கல்கி, நவம்பர் 27, 1949)

இன்டர்நெட்டில் உலகக் கோப்பை!

இதுவரை நடைபெற்ற உலகக் கோப்பை பந்தயங்கள் பற்றின முழுமையான தகவல்களோடு இந்த வருடம் களமிறங்கும் பல்வேறு அணிகளிலும் உள்ள அனைத்து ஆட்டக்காரர்கள் பற்றியும் முழுமையான விவரங்கள் கிடைக்கிறது இன்டர்நெட்டில்!

www.cyber cricket.com

www.world - cup 99.com

www.cricinfo.com

இந்தத் தளங்களை அமைத்திருப்பவர்கள் இடையே



போட்டா போட்டிதான். ஆம்! பத்திரிகைகள், பல்வேறு நிறுவனங்கள் போல, இங்கேயும் கூட போட்டிகள், பரிசுகள் எல்லாம் உண்டு.

இவை மட்டுமா? கபில்தேவ், வெங்கட்ராகவன், மைக்கேல் ஹோல்டிங், ஜயன்போதம், டோனி கிரெய்க் என்று பல கிரிக்கெட் ஜாம்பவான்களின் கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகள்; பழைய அணிகளின் கேப்டன்கள், இப்போதைய அணிகளின் கேப்டன்களின் பேட்டிகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பழைய மேட்ச் ஹைலைட்ஸ் பார்க்க ஆசையா? அதற்கும் வழி உண்டு.

கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்தவுடன், நியூஸ் கடகட வரும்; டி.வி.யில் மேட்ச் நேரடி ஒளிபரப்பைப் பார்ப்பது போல, இன்டர்நெட்டிலும் பார்க்கலாம். ஆனால், கொஞ்சம் நிதானமாக, ஃப்ரேம் ஃப்ரேமாகத்தான் பார்க்க முடியும்.

மேட்ச் நடக்கிறபோது, அப் பகுதியில் என்ன மாதிரி வானிலை நிலவுகிறது? மழை வருமா? மேட்ச் நடக்குமா? நிறுத்தும் சூழல் ஏற்படுமா என்றெல்லாம் விரிவான அலசலும் உண்டு. இந்த இணையத் தளங்களுக்கு, ஈமெயில் மூலமாக, கேள்விகளை அனுப்பலாம். கிரிக்கெட் வல்லுனர்களும், பிரபலங்களும் உங்கள் கேள்விகளுக்கு பதில் அளிப்பார்கள். ஈமெயில் மூலமாக, கிரிக்கெட் வீரர்களையும், அணிகளையும் வாழ்த்தவும் முடியும்.

அதெல்லாம் சரிதான்! நம் ஊரில் இன்டர்நெட் இணைப்பு வைத்திருப்பவர்கள் எத்தனை முறை நம்பரை சுழற்றினாலும், கனெக்ஷன் கிடைப்பதில்லையே! அப்படியே கிடைத்தாலும், பத்தாவது நிமிடம் கட் ஆகி விடுகிறதே அதற்கு என்ன செய்ய? என்று கேட்கும் கிரிக்கெட் ரசிகரின் கேள்விகளுக்கு விடை சொல்லத்தான் எந்த வெப்சைட்டும் இல்லை!

— கௌதம்

மீன்பாடி வண்டிகளை என்ன செய்யலாம்?

சென்னையிலிருப்பவர்களுக்கு 'மீன் பாடி வண்டி'யை நன்றாகத் தெரியும். இது சரக்குகளை ஏற்றிச் செல்லும் மோட்டார் ரிக்ஷா. ரோட்டில் நடந்து போகிறவர்களிலிருந்து, பஸ், லாரி ஓட்டுபவர்கள் வரை அனைவரையும் மிரள வைக்கிற வாகனம். அபாயகரமான வளைவுகளில் அனாயாசமாகத் திரும்பி திடுக்கிட வைப்பதும், 'கிரீச்'சென அதிர வைக்கிற இந்த வண்டியின் பிரேக் சப்தமும் சென்னைவாசிகளுக்குக் கிலியூட்டுகிற விஷயங்கள்.

"இந்த வண்டிகள்தான் எங்களுக்குப் பெரிய தலைவலி. சௌகார்பேட்டை, தி.நகர் போன்ற சென்னையின் நெரிசல் மிகுந்த பகுதிகளில், போக்குவரத்து ஸ்தம்பித்துப் போவதற்குக் காரணம் இந்த வண்டிகள்தான்" என்கிறார் போக்குவரத்து போலீஸ்காரர் ஒருவர்.

நியாயப்படி இந்த வண்டிகளுக்கு, மோட்டார் ரிக்ஷாவுக்குப் பயன்படுத்தும் 35 சிசி (ராலே) மோட்டார்களைத்தான் பொருத்த வேண்டும். ஆனால், இந்த வண்டிகளை ஓட்டுபவர்கள், 75 சிசியிலிருந்து 250 சிசி வரை அவரவர்க்கு வசதிப்பட்ட மோட்டார்களைப் பொருத்திக் கொள்கிறார்கள் என்பது கவனிக்க வேண்டிய அம்சம்.

காசிமேடு, ராயபுரம் பகுதிகளில், முதன் முதலில் மீன்களைக் கொண்டு செல்ல இந்த வண்டிகளை உபயோகப்படுத்தியதால், இதற்கு 'மீன் பாடி வண்டி' என்று பெயராம். தற்போது, காய்கறிகள், இரும்புச் சாமான்கள், பர்னிச்சர், மரம் என இவை ஏற்றிச் செல்லும் சரக்குகளின் பட்டியல் மிக நீளமானது.

ஐந்தாவது வரை படித்திருக்கும் ஆறுமுகத்துக்கு இருபத்திரண்டு வயது. அப்பா மாட்டு வண்டி ஓட்டுகிறார். தம்பி கொத்தனார் வேலை பார்க்கிறான். இரண்டு வருடங்களாக சூளைமேட்டில் மீன்பாடி வண்டி ஓட்டுகிறார். ஆறுமுகம் ஓட்டுவது வாடகை வண்டி. வாடகை ஒரு நாளைக்கு எண்பது ரூபாய்.

"ஒரு நாளைக்கு சவாரி கிடைக்கும். ஒரு நாளைக்குக் கிடைக்காது. வண்டி ஓடுதோ இல்லியோ, தினமும் வாடகைப் பணத்தை ஓனருக்குக் குடுத்துடணும். வண்டிக்கு பெட்ரோல் கூட நம்மதான் போடணும். இதுக்கு மேல கிடைக்கிற வருமானத்துலதான் பொழைப்பு ஓடுது. இதுவாவது பரவாயில்லை. திடீர் திடீர்னு போலீஸ்காரங்க வண்டியை மடக்கி ஐம்பது ரூபா ஃபைன் போட்டுர்றாங்க. கேட்டா லைசென்ஸ் இல்லையாம். அதுதான் தாங்க முடியாத விஷயம்" என்கிறார் ஆறுமுகம்.


• ராஜேந்திரன்



"மூணு மாசத்துக்கு முன்னாடிதான் ஆர்.டி.ஓ. ஆபீஸ்ல மீன்பாடி வண்டி ஓட்டுற எல்லாரையும் கூப்பிட்டு, வரிசைப்படி நம்பர் கொடுத்தாங்க. அப்படியும் இந்தப் போலீஸ்காரங்க ஏன்தான் லைசென்ஸ் கேக்குறாங்களோ தெரியலை" என்கிறார் ஹரிநாதன்.

'அதென்ன லைசென்ஸ்?' என்று மீனம்பாக்கம் ஆர்.டி.ஓ. ஆபீஸில் வேலை பார்க்கும் அதிகாரி ஒருவரைக் கேட்டோம்.

"இந்திய மோட்டார் வாகனச் சட்ட விதிகளுக்குள் அடங்காத வண்டின்னுதான் மீன் பாடி வண்டியைச் சொல்லணும். ஒவ்வொண்ணும் ஒவ்வொரு ரகம். ஸ்கூட்டர், பைக்குக்குள்ள பழைய சேதமடைஞ்ச மோட்டாருங்களை பயன்படுத்தித்தான் பெரும்பாலும் வண்டி ஓட்டுறாங்க. ஒவ்வொரு மோட்டாருக்கும் ஒவ்வொரு பவர். மூணு மாசத்துக்கு முன்னாடி சென்னையில் மொத்தம் எத்தனை வண்டி ஓடுதுன்னு கணக்குப் பார்க்கறதுக்காக ஒரு லிஸ்ட் போட்டு, ஒவ்வொரு வண்டிக்கும் ஒரு நம்பர் கொடுத்தோம். எப்படியாவது இந்த வண்டிங்களை ஒரு ஒழுங்குக்குள்ள கொண்டு




வர்றதுக்குதான் இந்த ஏற்பாடு. லைசென்ஸுன்னு இந்த வண்டிக்கு எதுவும் தனியா இதுவரைக்கும் கொடுக்கலை. போலீஸ் கேக்கற லைசென்ஸ் டிரைவிங் லைசென்ஸ். இந்த வண்டி ஓட்டுறவங்கல்ல பெரும்பாலானவங்ககிட்ட டிரைவிங் லைசென்ஸ் கூட இல்லைங்கறதுதான் வருத்தமான விஷயம்" என்றார் அவர்.

சூளைமேட்டில் மீன்பாடி வண்டியோட்டும் அன்பழகன் சொல்கிறார்: "நான் சொந்தமா இரண்டு வண்டி வச்சிருக்கேன். சவாரி வந்தாத்தான் வருமானம். ஒரு வண்டி புதுசா ரெடி பண்ண 30,000 ரூபாய் வரைக்கும் செலவாகுது. வண்டி அடிக்கடி ரிப்பேராய்டும். அந்தச் செலவையும் பாத்துக்கிடணும். சென்னை சிட்டியில வண்டி ஓட்ட போலீஸ்காரங்க நேரம் ஒதுக்கியிருக்காங்க. காலைல ஆறிலிருந்து எட்டு மணி வரைக்கும் ஓட்டலாம். எட்டிலிருந்து ஒரு மணி வரைக்கும் ஓட்டக் கூடாது. மத்தியானம் ஒண்ணுலருந்து மூணு மணி வரைக்கும் ஒட்டலாம். மூணுலிருந்து ராத்திரி எட்டு மணி வரைக்கும் ஓட்டக் கூடாது. எட்டிலிருந்து காலைல வரைக்கும் ஓட்டிக்கலாம். அவங்க அனுமதிக்கிற அந்த நேரத்துக்குள்ள வண்டியை ஓட்டி, பெட்ரோல் போட்டு, காசு சம்பாரிக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆய்டுது. எங்களுக்கு இதை விட்டா வேற பொழைப்பும் இல்லை."



• ஆறுமுகம்



• அன்பழகன்

தாம்பரம் மீன்பாடி வண்டி ஓட்டுனர் சங்கச் செயலாளர் ராஜேந்திரன், "மெட்ராஸ்ல 10,000 வண்டி வரைக்கும் ஓடுது. அரசாங்கத்துலதான் லைசென்ஸ் தரமாட்டேங்கறாங்க. அதான் பிரச்னை. மூணுமாசத்துக்கு முன்னாடி ஆர்டிஓ ஆபீஸ்ல வண்டிங்களுக்கு நம்பர் குடுத்தாங்க. அதுக்கப்புறம் புதுசா யாரும் வண்டி தயார் பண்ணக் கூடாதுன்னு வேற சொல்லிட்டாங்க. எங்களுக்கு முறையான லைசென்ஸ் வேணும்னு ஆர்.டி.ஓ. ஆபீஸ்ல மனு கொடுத்தோம். அவங்க அமைச்சர் பொன்முடிகிட்ட மனு கொடுக்கச் சொன்னாங்க. அவரைப் பார்க்க முடியலை. தேர்தல் முடியறவரைக்கும் எதுவும் பிரச்னை இல்லேன்னுதான் நினைக்கிறோம். நான் பதினோரு வருஷமா இந்த வண்டி ஓட்டுறேன். ரிக்ஷாவுக்குப் போடுற 35 சிசி மோட்டாரைத்தான் போடணும்னு போலீஸ்காரங்க சொல்றாங்க. ஆனா, அதை வச்சு இந்த வண்டியை ஓட்ட முடியாது. எங்களுக்கு இதவிட்டா வேற பொழைப்பே கிடையாது. இதை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பம் இருக்கு. எங்களுக்குன்னு ஒன்றுபட்ட தனி சங்கம் எதுவும் இல்லை. திண்டிவனத்தைச் சேர்ந்த ஸ்ரீராமுலுன்னு ஒருத்தர்தான் ஒரு சங்கம் ஆரம்பிச்சு, மாநாடெல்லாம் போட்டார். நாங்க கூட போயிருந்தோம். ஆனா, அது ஒரு தனி அமைப்பு மாதிரி தெரிஞ்சதுனால நாங்க வெலகிட்டோம். அரசாங்கம் பார்த்து ஏதாவது நல்லது பண்ணினா சரி" என்கிறார்.

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள் : **எம். சண்முகம்**

காத்திருப்பு



அந்தக் கோயில் கண நேரத்தில் மிகவும் பரபரப்பாகிவிட்டது. அன்று விடியற்காலையில்தான் ஏற்பாடு செய்யப்பட்ட பந்தல் முழுவதையும் பெண் வீட்டார் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்கள். திண்ணைப் புறத்தில், தெப்பக்குளப் பகுதியில் - ஆக எங்கு பார்த்தாலும் வண்ண வண்ணப் புடைவைகளே! உடனுக்குடனே தகவல் கேள்விப்பட்டு இரண்டு பெட்டிக் கடைக் காரர்கள் வாசலில் கடை போட்டு விட்டார்கள்.

கோயிலை ஒட்டியிருந்த ஓட்டு வீட்டுக்குள்ளிருந்து அர்ச்சகர் லட்சுமிநரசிம்மாச்சாரி பட்டு வேட்டி கட்டிக் கொண்டு, அடுத்திருந்த பொதுச் சுவர்க் கதவைத் திறந்து கொண்டு கோயிலுக்குள் நுழைந்தார்.

அந்த ஓட்டு வீட்டு ஜன்னல் வழியே இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மயூரி தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

அந்தக் கோயிலுக்குக் களை வருவதே இந்த மாதிரி சமயங்களில்தான். இல்லாவிட்டால் உற்சவங்கள் நடக்கும் சமயங்களில் - அவ்வளவுதான்! மற்ற சமயங்களில் களையிழந்து, சந்தடி ஏதுமின்றி கேள்வி கேட்பாரற்றுக் கிடக்கும்.

''இந்தக் கோயில்லே கல்யாணம் பண்ணிக்கிட்டவங்களெல்லாம் பிள்ளை குட்டிகளோடு செல்வச் செழிப்போடே ஆனந்தமா இருக்காங்க'' என்பதாக எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருப்பார் தன் அப்பா.

ஆனால் அவர் அப்படியெல்லாம் ஏன் சொல்கிறாரென்று தனக்குத் தெரியும். மற்றவர்கள் அந்தப் பேச்சினால் ஈர்க்கப்பட்டுத் தங்கள் வீட்டுக் கல்யாண வைபோகங்களை அந்தக் கோயிலிலேயே செய்து கொள்ள வேண்டுமென்பது அவருடைய ஆசை. எது எப்படியானாலும் அந்தக் கல்யாண வினோதங்களை இந்த ஜன்னல் வழியாக உட்கார்ந்த

தெலுங்கு மூலம் : வேதகிரி ராம்பாபு

நிலையில் கண்ணாரக் களிப்பது தனக்கும் பழக்கமாகிப் போனது.

கல்யாணம் எப்படி நடக்கிறது என்பதை அவளால் இப்போது சுலபமாகச் சொல்ல முடியும். உண்மையில் அந்தக் கல்யாண மந்திரத்தின் பெரும்பகுதி அவளுக்கு மனப் பாடம் ஆகிவிட்டிருந்தது. அவர்கள் மட்டும் ஒத்துக் கொள்வார்களேயானால் அவளால் புரோகிதக் காரியங்களைக் கூடச் செய்ய முடியும். சிரிப்பு வந்தது மயூரிக்கு.

மணப்பெண் ஒரு மூலையில் சிநேகிதி களுடன் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். அவளை உற்றுப் பார்த்தாள் மயூரி.




தமிழாக்கம் : இளம்பாரதி

பரவாயில்லை. நன்றாகத்தான் இருந்தாள். பணக்கார வீட்டுப் பெண்ணாகத் தென்பட்டாள். அந்த ரகசியத்தை அவள் போட்டிருந்த நகைகளே மினுக்கிக் காட்டின. அத்தனை நகைகளைப் போட்டுக் கொண்டிருந்த போதிலும்கூட அவள் அப்படி ஒன்றும் தன்னைவிட அழகாகத் தோன்றவில்லை.

அங்கே நடக்கும் எல்லாக் கல்யாணங்களின் போதும் மணப்பெண்களைத் தன்னுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அவளுக்கு நன்றாகவே பழக்கமாகி விட்டிருந்தது.

ஆமாம்! தானும் ஒரு நாள் அவ்வாறே மணமகளாவாள். தன்னுடைய கல்யாணமும் அதே கோயிலில்தான் நடக்கும். மாப்பிள்ளை வேறு யாரும் இல்லை...

ஈஸ்வரன்தான்!



"ஏட்டையா, நீங்க ஒரு விதத்துல எனக்குச் சொந்தமாமே; என் மனைவி சொன்னா!"

"இதப்பாரு, போலீஸ் டிரஸ்ஸை மாட்டினப்புறம் சொந்தம் பந்தமெல்லாம் நான் பார்க்க மாட்டேன்; கடமைதான் எனக்கு முக்கியம்; ஒழுங்கா மாமூல் வெட்டு!"

– யமுனா ரெங்கநாதன்

அவளுக்கு ஏழெட்டு வயதானபோது முதன்முறையாக அவனுடன் அறிமுகம் நேர்ந்தது.

அவள் அப்போது தெப்பக்குளத்து மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவனுடைய வீட்டார் அந்த ஊருக்கு அப்போதுதான் புதிதாகக் குடி வந்திருந்த நேரம். தங்கள் வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளியிருந்த மாடி வீட்டில் குடியேறியிருந்தார்கள். அவர்களுடைய அப்பாவுக்கு ஒரு மோட்டார் சைக்கிள்கூட இருந்தது!

"ஏய்! நானும் விளையாட்டுக்கு வர்றேன்..." என்று பக்கத்தில் வந்து நின்றபடி கேட்டான்.

அவளுக்குத் தனிமை பொறுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் அவன் கேட்டதால் அவள் உடனே அதற்குச் சம்மதித்தாள்.

அவ்வளவுதான்! அன்றிலிருந்து இருவரும் கூட்டாளிகள். பள்ளிக் கூடத்திற்குப் போவது வருவது, விளையாடுவது - ஆக எல்லாமே ஒன்று சேர்ந்துதான்.

அவனும் தன் வயதுக்காரனே ஆனாலும் தான் இனைற்றுத் தவளையாக அந்தக் கோயில் வட்டாரத்திற்குள்ளேயே வளர்ந்து வந்ததனால் அவன் சொல்லும் எல்லா விஷயங்களையும் வாயைப் பிளந்து கொண்டு கேட்டுக் கொண்டிருப்பாள். அவளுடைய வெகுளித்தனத்தை அடிப்படையாக வைத்து அவன் மிகைப்படுத்திச் சொல்லும் புளுகுகளைக் கூட உண்மையென்று நம்பிவிடுவாள்.

அவளுடைய கண்ணெதிரிலேயே பெரிய 'ஆம்பிளை'யாக அவன் வளர்ந்தான். கோடை விடுமுறைகளில் மத்தியானப் பொழுதிலேயே அவளுடைய வீட்டுக்கு வந்து விடுவான். இருவரும் தெப்பக்குளக் கரை வழியாக நடந்து அப்பாலுள்ள பாதையைச் சென்றடைந்து, அங்கே காடாக வளர்ந்து மண்டிக் கிடந்த மரங்களுக்கிடையே அமர்ந்தும், புதர்களுக்கிடையே அலைந்து திரிந்தும் அதுவரையிலும் அவள் போயறியாத புதிய புதிய இடங்களை வேடிக்கை பார்ப்பார்கள். அப்படி மரம் செடிகொடிப் புதர்களுக்கிடையே அலைந்து திரிவது அவளுக்கு பயமாக இருக்கும். ஆனால் அவன் ஒரு ஹீரோ மாதிரி அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு இழுத்துச் செல்வான்.

ஒரு தடவை அப்படிப் போனபோது ஒரு பெரிய பாம்பு எதிர்ப்பட்டது.

அவ்வளவுதான்! ஒருவர் கையை ஒருவர் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு ஒரே ஓட்டமாகக் கோயிலுக்கு வந்து சேர்ந்தார்கள். அதற்குப் பிறகு ஒரு போதும் அவ்வளவு தூரத்திற்குப் போகவில்லை. கோயிலுக்குள்ளேயே விளையாடிக் கொண்டிருப்பார்கள். கோயிலில் கல்யாணங்கள் நடக்கும் போதெல்லாம் வேடிக்கை பார்க்க எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்!

அவள் தாவணியும் ஜாக்கெட்டும் போடத் தொடங்கிய பிறகு முன்பு போல அவனுடன் சுற்றித் திரிவதற்குக் கூச்சமாக இருந்தது. அம்மாவும் முன்பு போன்று விருப்

பப்படியெல்லாம் சுற்றித் திரியக் கூடாதென்று தடை விதித்தாள்.

அவன் மட்டும் தினமும் அவளைத் தேடி வந்து விடுவான். வாசலுக்கு வெளியே நின்றபடியே கொஞ்ச நேரம் வெளியே போய் விளையாடிவிட்டு வரலாமென்று தொந்தரவு செய்வான்.

அம்மாவிடம் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி பெற்று இருவரும் கோயிலுக்குள்ளேயே திண்ணையில் உட்கார்ந்து கொண்டு அரட்டை அடிப்பார்கள். அவனுடன் இருந்தால் பொழுது போவதே தெரிவதில்லை.

ஒரு நாள் நடந்த நிகழ்ச்சி அவளுக்கு இப்போது மட்டுமல்ல, எப்போதைக்கும் மறக்காது.

அன்றைக்கு அவளுடைய அப்பாவும் அம்மாவும் கோயிலில் நடந்து கொண்டிருந்த கல்யாணப் பரபரப்பில் இருந்தார்கள்.

வழக்கம்போல் நட்டநடு மத்தியானம் அவளைப் பார்க்க அவன் வந்தான்.

“உங்க அம்மா அப்பா வீட்டிலே இல்லையா?” அவனுடைய குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.

“இல்லே... கோயில்லே இருக்காங்க...”

“அப்படீன்னா நாம தெப்பக்குளத்துக்குப் போய் விளையாடுவோமா?”

“அம்மாடீ! அம்மா பார்த்துட்டா...?”

“ஒண்ணும் ஆகாது. எல்லாரும் அந்தக் கல்யாண சந்தடியிலே இருக்காங்க.” வரச் சொல்லிக் கட்டாயப்படுத்தினான்.

கொஞ்ச நேரம் அவனுடன் பொழுது போக்க வேண்டுமென்று அவளுக்கும் ஆசைதான். எத்தனை நாட்களாகிவிட்டன, தாங்கள் இருவரும் அந்த மரத்து நிழலில் விளையாடி!

இருவரும் கல்யாணக் கூட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டு தெப்பக்குளத்தை நோக்கி ஓடினார்கள். கெட்டி மேளம் அப்போதுதான் முழங்கத் தொடங்கியிருந்தது.

தெப்பக்குளக் கரையில் உட்கார்ந்து கொண்டு இருவரும் கல்யாணத்தைப் பற்றி அரட்டை அடித்தார்கள்.

திடீரென்று அவன் கேட்டான்:

“மயூரி, நாமும் கல்யாணம் பண்ணிக்குவோமா?”

“என்னது? கல்யாணமா?”

“சும்மா... சும்மாத்துக்கும்... பொம்மைக் கல்யாணம் மாதிரி...”

“சீ! மோசம்.”

“ஏன்?”

“அம்மாடீ! யாராச்சும் பார்த்துட்டா?”

“கடன் வாங்கி அவஸ்தைப் படற ஆளைப் பற்றின படமா, என்ன தலைப்பு?”

“பண முடையப்பா!”

– வெ. ராஜாராமன்



மேம்போக்காக வேண்டாமென்று சொல்லிவிட்டாளே தவிர அவளுக்கும் உள்ளூர ஆசை பிறந்தது. மறு கணமே இருவரும் மணமகன், மணமகளாக மாறினார்கள்.

தெப்பக்குளக் கரையில் மரத்து நிழலில் பெரிய பெரிய வாழை இலைகளைப் பரப்பி விரித்துக் கொண்டு இருவரும் எதிரெதிராக உட்கார்ந்து கொண்டார்கள்.

கோயிலில் தாலி கட்டும் வைபவத்துக்கான கெட்டி மேளம் உரத்துக் கேட்டது.

அதைத் தொடர்ந்து அவன் எழுந்து நின்று ஏற்கெனவே தயாராகக் கொண்டு வந்திருந்த மஞ்சள் கயிற்றைத் அவளது கழுத்தில் கட்டிவிட்டான்! அதன் பிறகு, மரத்திலிருந்து உதிர்ந்து உலர்ந்து சருகாகியிருந்த இலைகளை அட்சதைகளாக ஒருவர்க்கொருவர் தலையின் மீது போட்டுக் கொண்டார்கள். அவளுடைய குட்டைப் பாவாடையையும் அவனுடைய கால்சட்டையையும் ஒரு கயிற்றால் இணைப்பாக முடிபோட்டுக் கொண்டு, அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தைச் சுற்றி வலம் வந்தார்கள். அந்த வேளையில் தனது சுண்டு விரலால் அவள் பற்றிக் கொள்ளவும் மறக்கவில்லை. அதன் பிறகு அந்த வெளிச்சத்திலும்கூட அவன் அவளுக்கு அருந்ததி நட்சத்திரம் காட்டிக் காண்பித்தான். அது தெரிவதாக அவளும் தலையசைத்தாள்...

அந்தக் கல்யாணம் ‘சும்மானாச்சுக்கும் நடக்கிற கல்யாணம்’ என்று தெரிந்திருந்த போதிலும், உண்மையாகவே தனக்குக் கல்யாணம் நடப்பதான உணர்வே அவளுக்கு உண்டாயிற்று!

“இப்போ நாம ரெண்டு பேரும் புருஷன்



ஷபனா பற்றி அவர் கணவர்!

''பெண் என்பவள் வெறும் பொம்மை இல்லை. வெறும் எலும்பும், சதையுமான உடம்பும் இல்லை. அவளும் சிந்திக்கத் தெரிந்தவள்; உணர்ச்சிகள் உடையவள். பெண் என்பவள், பிள்ளை பெறும் இயந்திரம் இல்லை. அவளுக்கும் கனவுகள் உண்டு.'' இப்படிச் சொல்லுபவர் பிரபல இந்திக் கவிஞர், திரைப் படப் பாடலாசிரியரான ஜாவித் அக்தர். பிரபல இந்தி நடிகையும், ராஜ்ய சபை உறுப்பினருமான ஷபனா ஆஸ்மியின் கணவர்.



''என் மனைவி ஷபனா, மிகவும் அன்பானவள். என் மீதோ, குடும்பத்தினர் மீதோ மட்டுமல்லாமல், நண்பர்கள், இந்த சமூகம், இந்த தேசம் என்று பரவலாக நேசிப்பவள் அவள். சமீபத்தில்தான் சமைக்கக் கற்றுக் கொண்டாள். நன்றாக சிக்கன் சமைப்பாள். காய்கறிகளையும், அரிசியையும் சேர்த்து ஒரு ஐட்டம் செய்கிறாள். அதற்கு என்ன பெயர் என்று எனக்குத் தெரியாது. 'ஷபனாவின் கிச்சடி' என்று நான் அதற்குப் பெயர் வைத்திருக்கிறேன்!''

''ஷபனாவிடம் உங்களுக்குப் பிடிக்காத குணம் ஏதாவது உண்டா?''

''சட்டென்று எதற்கெடுத்தாலும் கோபம் வந்து விடும்; எரிச்சல் படுவாள். அவளுக்குக் கொஞ்சம் மறதி உண்டு. நகைகளை வீட்டில் எங்காவது வைத்துவிட்டு, தேடிக் கொண்டிருப்பாள். சாவிகளைத் தொலைத்து விட்டுத் தேடிக் கொண்டேயிருப்பாள்.''

நன்றி : மெமோயர்ஸ்

— பாரதி

பொண்டாட்டி ஆயிட்டோம் இல்லியா?'' என்று கேட்டான் ஈஸ்வரன்.

தன்னை அறியாமலே அவளுக்கு வினோதமான வெட்கம் வந்தது. அப்போது திருமணமென்றால் என்னவென்று அவளுக்கு முழுமையாகத் தெரியாதிருந்தாலும் அந்தப் பவித்திரமான உறவின் உணர்வு சலனத்தை ஏற்படுத்தியது.

"ஏய்! என்ன பேச மாட்டேங்கறே?" கனிவுடன் விசாரித்தான்.

"நாம இப்படிச் செய்றது தப்பில்லையா?"

"எப்படி?"

"இப்படித்தான்..." அதற்குப் பிறகு அவள் எதுவும் பேச இயலாதவளானாள். திடீரென்று அவளுள் ஒரு புதிய உணர்வு உருவாயிற்று.

''ஏய்! இப்படி ஊமையா மாறிட்டியே, என்ன?'' அவளுக்கு நெருக்கமாக வந்து ,கையைப் பற்றியபடி கேட்டான்.

அவனுடைய ஸ்பரிசம் அவளுள் வினோதமான உணர்வை ஏற்படுத்தியது.

அமைதியாகத் தலை நிமிர்ந்து அவனைக் கண்களினூடே பார்த்தாள். அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்குப் புரிந்தது. அந்தப் பார்வையில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. வெட்கத்தால் தலை கவிழ்ந்தாள். இனிய நினைவுகள் மனங்களைப் பரவசப்படுத்தின...

அவனுடைய அணைப்பில் கசங்கித் திளைத்துக் கொண்டிருந்தவரைக்கும் அவளுக்கு வெளியுலகப் பிரக்ஞை வரவில்லை. அந்த அணைப்பு தங்களை எவ்வளவு தூரத்திற்கு இழுத்துச் செல்லுமோ? அதுவரைக்கும் அவ்வப்போது கேட்டுக் கொண்டிருந்த மங்கள வாத்தியங்கள் நின்று, அவர்களை சுய உணர்வுக்குக் கொண்டு வந்தன.

''ஏய்! விடு...'' என்றாள், பயத்தால் தன்னை சற்றே பின்னுக்கு விலக்கிக் கொண்டபடி.

ஈஸ்வரனும் கூட பயந்து விட்டான். சட்டென்று அவளை விலக்கித் தள்ளிவிட்டு எட்டத்தில் நின்றான்.

"கோபம் வந்திரிச்சா?" சில கணங்களின் மௌனத்திற்குப் பின்னர் அவன்தான் கேட்டான்.

"ஊஹூம்... இல்லே... வீட்டுக்குக் கிளம்பிப் போவோம்." அவள் சரசரவென்று புறப்

படவும், அவனும் அவளைப் பின்பற்றிக் கிளம்பி விட்டான்.

வரும் வழியில் அவள் எதுவும் பேச வில்லை. அவனும் பேசவில்லை.

அதற்குப் பிறகு மூன்று நான்கு நாட்கள் அவர்களிருவரும் சந்தித்துக் கொள்ள வில்லை. ஆனாலும் அவன் மீதான தனது அபிமானம் அதுவரை இருந்ததைவிடப் பல மடங்கு அதிகரித்திருப்பதை அவளால் உணர முடிந்தது.

சொல்லி வைத்தாற்போல் அப்போது தான் அவனுடைய அப்பாவுக்கு வேறு ஊருக்கு வேலை மாற்றல் வந்தது.

கிளம்பிப் போவதற்கு முன்பு சொல்லிக் கொள்ள வந்தான் ஈஸ்வரன்.

அம்மா வேண்டாமென்று தடுத்தாலும் கேளாமல் அவனுக்குப் பின்னால் புறப்பட்டாள். இருவரும் கோயிலுக்குள்ளே வந்து உட்கார்ந்தார்கள்.

"நாங்க நாளைக்குக் கிளம்பறோம்." அவன் வருத்தத்துடன் சொன்னான்.

அவளுக்கு அதற்கு முந்தின நாளே, அந்த விஷயம் தெரிந்ததிலிருந்தே மனசெல்லாம் என்னவோ போல் ஆகிவிட்டது. அவனது வாயார அதைச் சொல்லக் கேட்டதும் அவ ளால் கண்ணீரை அடக்க முடியவில்லை.

"மறுபடியும் எப்பவாச்சும் வருவியா இங்கே?" வறண்டு போன குரலில் கண்களைத் துடைத்தபடி கேட்டாள்.

"பெரியவனானப்புறம் நிச்சயமா வரு வேன். அப்போ நாம ரெண்டு பேரும் கோயில்லே வச்சி நிஜமான கல்யாணம் பண்ணிக்குவோம்."

சட்டென்று தலை நிமிர்ந்து அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"நிஜமாவா?"

"சத்தியமா..." அவளுடைய கை மீது வைத்துக் கிள்ளியபடி சொன்னான்.

அவ்வளவுதான். அவன் விடை பெற்றுக் கொண்டு போய் ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒவ்வொரு நாளும் அவனுக்காக எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறாள்.

அதற்குப் பிறகு கோயிலில் எத்தனையோ கல்யாணங்களைப் பார்த்து விட்டாள். எந்தக் கல்யாணத்தைப் பார்த்தாலும் அவளுக்குத் தன் கண்ணெதிரில் நிழலாடுவது அந்த நாளைய தங்கள் கல் யாண விளையாட்டுத்தான்.

கோயிலில் நடக்கும் ஒவ்வொரு கல்யா ணத்திலும் மணமகள் தானே என்பதாக, மணமகன் ஈஸ்வரன் என்பதாக ஊகித்துக் கொள்வது அவளுக்குப் பழக்கமாகி விட்டது.

"என்னடி, 'கூப்பிட்டா பதில் பேச மாட்டேங்கறே? அங்கே கல்யாணத்தைப் பார்க்க ஆரம்பிச்சிட்டியானா வீட்டு வேலையே ஞாபகத்துக்கு வராது உனக்கு..." அம்மாவின் குரலைக் கேட்டு திடுக்கிட்டுச் சிந்தனையிலிருந்து மீண்டாள் மயூரி.

அவளுக்கு அம்மா மீது வாஞ்சைதான். ஆனால் இப்போது ஏனோ காரண மில்லாமல் எரிந்து விழுந்தாள். அம்மா எதற் காகத் தன்னிடம் வேலை சொல்கிறாள் என் பது அவளுக்குத் தெரியும்.

அவளுக்கு வயது ஏறிக் கொண்டிருக் கிறது என்றும், அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க முடியவில்லையே என்றும் பெற்றோருக்கு வருத்தம். மகளுக்கும் அப்படி ஒரு வேதனை இருக்குமோ என்ற பயத்தில் கல்யாணத்தைப் பார்க்க விடாமல் அந்த நாள் முழுக்க ஏதாவதொரு வேலை கொடுத் துக் கொண்டே இருப்பாள் அம்மா.

அவளுக்குப் பெரிதாகப் படிப்பெதுவும் இல்லை. பெரிய அழகி என்று சொல்வதற் கும் இல்லை. நல்லபடி வரதட்சணை கொடுக்கும் தகுதியும் பெற்றோர்களுக்கு இல்லை. அவளுக்குக் கல்யாணம் எப்படி நடக்க முடியும்?

ஒருவேளை தனக்குக் கல்யாணம் என்ற ஒன்று நடக்குமானால் அது ஈஸ்வரனோடு

"ஜீன்ஸ் பேன்டுக்கும், ஐந்து ரூபாய் நோட்டுக்கும் என்ன ஒற்றுமை?"

"வெளுத்து, நைந்து, கிழிந்து ஒட்டுப்போட்டு இருந்தாலும் இரண்டுக்கும் நல்ல மதிப்பு."

– எஸ். மோகன்



தான் நடக்கும் – அவன் தனக்குக் கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்ற என்றைக்காவது ஒரு நாள் தவறாமல் வருவான் என்ற நம்பிக்கை அவளுக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கைதான் அவளுக்கு வாழ வேண்டுமென்ற பிடிப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

கோயிலில் கெட்டிமேள ஒலி உச்சத்தில் கேட்டது. மணப் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டிக் கொண்டிருந்தான் மாப்பிள்ளை.

மயூரி அமைதியாக அங்கிருந்து எழுந்து போய், தன் பெட்டியைத் திறந்து – அதில் பத்திரமாக ஒளித்து வைத்திருந்த சன்னமான மஞ்சள் கயிற்றை வெளியே எடுத்துப் பார்த்துக் கொண்டாள்.

அது அன்றைக்கு ஈஸ்வரன் அவளுடைய கழுத்தில் கட்டிய தாலி!

ஆசை தீர ஒரு தடவை கழுத்தில் அணிந்து கொண்டுவிட்டு.. அதை பத்திரமாக மறுபடியும் பெட்டியில் ஒளித்து வைத்துவிட்டு சமையலறை நோக்கி நடந்தாள்.

''என்றைக்கானாலும் என்னோட ஈஸ்வரன் எனக்காக வருவான். எனக்கு அப்போதுதான் கல்யாணம் ஆகும்!'' ஆசையாகச் சொல்லிக் கொண்டாள்.

உண்மையில் கோயிலில் நடந்து கொண்டிருந்த கல்யாணத்தில் மாப்பிள்ளை அவளுடைய ஈஸ்வரன் என்பதையோ, அவன் அந்தக் காலத்து நினைவுகளையும் கல்யாணத்தையும் பிள்ளைப் பிராயத்து விளையாட்டுக்களாகக் கருதி மறந்து விட்டான் என்பதையோ, இப்போது அவன் கல்யாணம் செய்து கொள்ளும் மணப்பெண் மூலமாகத் தனது சமூக அந்தஸ்து மேலும் உயர்ந்து விட்டதாக அவன் நினைத்துக் கனவில் மூழ்கியிருப்பதையோ – அவள் அறிய மாட்டாள்.

அவளைப் பொறுத்தவரை அவனுடைய நினைப்பு வரும் போதெல்லாம் அவனுக்கே உரிய மணப் பெண்ணாகத் தன்னை பாவித்துக் கொண்டு வெட்கப்பட்டுக் கொள்ளத்தான் தெரியும்.

ஹை ஹீல்ஸ் ஷூ அணிந்தால் ஆர்த்ரைடிஸ்!

அமெரிக்காவில் ஹார்வர்டு மெடிகல் ஸ்கூலிலும், பாஸ்டனில் இருக்கும் ஸ்பால்டிங் மருத்துவமனையிலும், ஓர் ஆராய்ச்சி நடந்து முடிந்து, அதன் முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள்:



சாதாரண, தட்டையான ஷூ அணிகிறவர்களை விட ஹைஹீல்ஸ் அணியும் பெண்களுக்கு, ஆஸ்டியோ ஆர்த்ரைட்டிஸ் நோய் வரும் வாய்ப்பு அதிகம் இருக்கிறதாம். (ஆடிட்டருக்குத்தான் ஆபத்து என்று அல்லவா நாம் இது வரை நினைத்துக் கொண்டிருக்கிறோம்!)

உடலின் மொத்த எடையும், முழங்காலின் உள் பகுதியைத் தாக்குவதால், அந்தப் பகுதி எலும்பு பாதிப்புக்கு உள்ளாகி, ஆஸ்டியோ ஆர்த்ரைட்டிஸ் வருகிறதாம்.

இந்த ஆராய்ச்சிக்காக, இரண்டு அங்குல உயரமுள்ள ஹீல்ஸ் வைத்த ஷூக்களை அணியும், ஆரோக்கியமான இருபது பெண்களை அழைத்தார்கள். முதலில் இவர்களை வெறுங்காலில் நடக்கச் சொன்னார்கள். சென்ஸர் கருவி, வீடியோ காமரா இரண்டையும் உபயோகித்து, சோதனை செய்து பார்த்தார்கள்.

ஹைஹீல்ஸ் அணிந்து நடந்தால் 23 சதவிகிதம் கூடுதலாக முழங்கால் உட் பகுதி எலும்பு, பளு காரணமாக பாதிக்கப்படுகிறது என்று கண்டுபிடித்தார்கள். அப்போது கணுக்காலில் அசைவு குறைவாக இருப்பதாகவும், இடுப்பிலும் முழங்காலின் உட்பகுதியிலும் அசைவு கூடுதலாக இருப்பதாகவும் கண்டறிந்தார்கள். ஹை-ஹீல்ஸ் அணிந்து பாலன்ஸ் பண்ணி சரியாக நிற்கவும், தொடர்ந்து நடக்கவும் செய்யும்போது முழங்காலிலும், இடுப்பிலும்தான் ஸ்ட்ரெயின் கூடுதலாக இருக்கிறதாம்.

இதை இங்கே உள்ள டாக்டர்கள் ஒப்புக் கொள்ளுவதில்லை. ''இங்கே ஹை-ஹீல்ஸ் ஷூ அணியும் பெண்கள் குறைவு. இருந்தும், பத்துக்கு எட்டுப் பெண்களுக்கு ஆஸ்டியோ ஆர்த்ரைட்டிஸ்! இவர்கள் வயது, உடல் பருமன், எடை, டயபடிஸ், ஜெனடிக் எனப்படும் பாரம்பரியத் தொடர்பு என்று வேறு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன!'' என்கிறார்கள்.

– எஸ்.வி.என்.



• வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாய் இருப்பதில் பயனில்லை

மாணவனே

பத்மா சேஷாத்ரி பள்ளியை ஆரம்பித்து, ஐந்து வகுப்புகள் வரை வளர்ந்த நிலையில், ஒரு கேள்வி எழுந்தது. பள்ளியில் தமிழ்நாட்டு பாட திட்டத்தைப் பின்பற்றுவதா? இல்லை மெட்ரிகுலேஷன் முறையைப் பின்பற்றுவதா?

லேடீஸ் கிளப் உறுப்பினர்கள், பள்ளிக்கூட நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், விஷயமறிந்த நண்பர்கள் அனைவரும் கூடி, இது பற்றி ஆலோசனை நடத்தினோம். உயர்ந்த தரம் கொண்ட பாடத்திட்டம், இந்திய கலாசாரம் இரண்டும் குழந்தைகளுக்குத் தர வேண்டும் என்றுதானே இந்தப் பள்ளிக்கூடத்தையே ஆரம்பித்தீர்கள்! அந்த நோக்கத்தையே பாதிக்கிற வாய்ப்பு இருக்கிற அரசாங்க பாடத் திட்டத்துக்கு நாம் மாறுவது உசிதமில்லை என்பதுதான் ஏறத்தாழ அனைவரது கருத்துமாக இருந்தது. எனவே, மெட்ரிகுலேஷன் முறையையே பின்பற்றுவது என்று தீர்மானம் செய்யப்பட்டது.

அடுத்து, அதற்குரிய ஏற்பாடுகளில் இறங்கினோம். அந்தக் காலகட்டத்தில் மெட்ரிகுலேஷன் திட்டப்படி இயங்கி வந்த பள்ளிக்கூடங்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தன. எனவே, மெட்ரிகுலேஷன் பள்ளியாக அங்கீகாரம் பெறுவதற்கு, சென்னைப் பல்கலைக் கழகத்துக்குத்தான் விண்ணப்பிக்க வேண்டும்.

அப்போது, சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்தவர் மரியாதைக்குரிய ஏ.எல். முதலியார்.

நாங்கள் பெருமைப்படும்படியாக ஒரு நிகழ்ச்சி நடந்தது. எங்கள் பள்ளிக்கு, மெட்ரிகுலேஷன் பாடத் திட்டத்துக்கு அனுமதி வழங்கலாமா? கூடாதா? என்று ஆய்வு செய்வதற்காக, ஏ.எல். முதலியாரே வந்திருந்தார். கூடவே அப்போதைய லயோலா கல்லூரி முதல்வரும் வந்திருந்தார். பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்ட முதலியார், "விளையாட்டு மைதான வசதி போதிய அளவு இல்லையே!'' என்றார். நான், 'அதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எதிரேயுள்ள (இப்போதைய வள்ளுவர் கோட்டம்) இடத்தை விளையாட்டு மைதானத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி கோரி, அரசாங்கத்துக்கு விண்ணப்பித்திருக்கிறோம்' என்பதைத் தெரிவித்தேன். அவர் திருப்தியடைந்தார்.

அடுத்து, மெட்ரிகுலேஷன் பள்ளிக் கூடம் நடத்த விரும்புகிறவர்கள், ஒரு லட்சம் ரூபாயை அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டும் என்று ஒரு விதி இருந்தது. அது ஒரு டெபா

சிட் போல வைக்கப்படும். எங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கட்டுகிற அளவுக்கு வசதி இல்லை என்பதையும் விளக்கிச் சொன்னேன்.

'விதிப்படி ஒரு லட்சம் ரூபாய் கட்ட வேண்டும். அதிலிருந்து உங்களுக்கு விலக்கு அளிக்க வழி கிடையாது' என்றார் முதலியார். நான், 'ஒரு லட்சம் ரூபாயைக் கட்டி விடுகிறோம். ஆனால் அதை வருடத்துக்கு இருபதாயிரம் வீதம் ஐந்து தவணைகளில் கட்டி விடுகிறோம்' என்றேன். அவர் அதற்கு ஒப்புதல் அளித்தார்.

ஆசிரியராக்கும் புது முயற்சி!

அப்போது, பள்ளிக்கூடத்தில் மொத்தமே நானூறு, ஐநூறு மாணவர்கள்தான் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணம், ஆசிரியர் சம்பளத்துக்கும் நிர்வாகச் செலவுகளுக்குமே சரியாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில், வருடத்துக்கு இருபதாயிரம் ரூபாய் அதிகப்படியாய் புரட்ட வேண்டும் என்பது மிகப் பெரிய விஷயம்தானே!

பெற்றோர்களை அழைத்து, விஷயத்தை விளக்கிச் சொல்லி, அவர்கள் ஆதரவுடன், பள்ளிக் கட்டணத்தைக் கொஞ்சம் உயர்த்தினோம். மறுபடியும் நன்கொடை வசூலில் இறங்கினோம், நாடகம் போட்டு, நிதி திரட்டினோம். இப்படியாக அந்த வருடம் கட்ட வேண்டிய இருபதாயிரம் ரூபாயைக் கட்டி முடித்தோம்.

அடுத்தடுத்த வருடங்களில் ஒவ்வொரு வகுப்பாக கூடிக் கொண்டே போனது. புதிய கட்டடம் கட்ட வேண்டியிருந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு மெட்ரிகுலேஷன் கட்டணத் தவணையாக இருபதாயிரம் செலுத்த வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் சமாளித்தோம்.



• ஏ.எல். முதலியார்

ஒரு கட்டத்தில், மெட்ரிகுலேஷன் திட்டத்தில் இயங்கும் பள்ளிக்கூடங்களை, ஏன் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்? பல்கலைக் கழகம் என்பது உயர் கல்வியளிக்கும் அமைப்பு. எனவே, மெட்ரிகுலேஷன் பள்ளிக் கூடங்களை, பல்கலைக் கழகம் இனி தன் பொறுப்பில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மாநில அரசாங்கத்திடமே அவற்றை விட்டு விடலாம் என்று முடிவு செய்தது சென்னைப் பல்கலைக் கழகம்.

இதன் காரணமாக, மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில், மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடங்கள் கொண்டு வரப்பட்டன. இதற்கென்று, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் ஒரு போர்டு ஏற்படுத்தப்பட்டு, அதன் கட்டுப்பாட்டில், மெட்ரிகுலேஷன் பள்ளிக் கூடங்கள் வந்தன.

இந்தச் சமயத்தில், பள்ளிக் கூடங்களுக்கு அவை விரும்பினால், வேறு எந்த சிஸ்டத்துக்கும் மாறிக் கொள்ள அனுமதி தரப்பட்டது. அதாவது, மாநில அரசாங்க பாடத்திட்டம் என்னும் ஸ்டேட் போர்டு சிஸ்டம், மெட்ரிகுலேஷன் சிஸ்டம், ஆங்கிலோ இந்தியன் பாடத் திட்டம் அல்லது மத்திய அரசாங்கத்தின் சென்ட்ரல் போர்டு ஆஃப் செகண்டரி எஜுகேஷனின் கீழ் வரும் சி.பி.எஸ்.சி. சிஸ்டம்' – இவற்றில் எதையும் பின்பற்றிக் கொள்ள வாய்ப்புத் தரப்பட்டது.

'மாநில அரசின் பாடத் திட்டமா? மெட்ரிகுலேஷனா' என்ற கேள்வி எழுந்த போது முன்பு செய்ததைப் போலவே மறுபடியும் ஆலோசனை நடத்தினேன். எந்தக் காரணங்களுக்காக மாநில அரசின் பாடத் திட்டம் வேண்டாம் என்றோமோ, அதே காரணங்களுக்காக, மெட்ரிகுலேஷன் வேண்டாம் என்றார்கள். சி.பி.எஸ்.சி. சிஸ்டத்தில், மத்திய அரசின் கட்டுப்பாடு என்பது இடை

திருமதி. ஒய்.ஜி.பி

யாது. அது அகில இந்திய அளவில் கடைப் பிடிக்கப்படுவது என்பதால், அதன் தரம் இன்னும் உயர்வானது என்று சி.பி.எஸ்.சி. முறையைப் பின்பற்றுவதனால் ஏற்படும் அனுகூலங்களைப் பட்டியலிட்டார்கள். சி.பி.எஸ்.சி. முறையையே பின்பற்றுவது என்று முடிவானது.

அந்தச் சமயத்தில், சென்னையில் பிரபல மாக விளங்கிய மற்ற பள்ளிக்கூடங்களில் பெரும்பாலும் மெட்ரிகுலேஷன் முறை யையே பின்பற்றினார்கள் என்றாலும், எங்களைப் போல ஒரு சிலர், சி.பி.எஸ்.சி. சிஸ்டத்துக்கு மாறினார்கள்.

இந்த சிஸ்டத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், எட்டாம் வகுப்பு வரை இதுதான் பாடத் திட்டம் என்று குறிப்பிட்டு விடுவார்களே தவிர, இந்தப் பாட புத்தகங் களைத்தான் படிக்க வேண்டும் என்ற திணிப்பு ஏதும் இல்லை. பத்து மற்றும் ஹையர் செகண்டரி வகுப்புகளில் மட்டும் அகில இந்திய அளவிலான பொதுத் தேர்வு என்பதால், சில விதிமுறைகளைக் கடை பிடித்தாக வேண்டும். இன்னொரு முக்கிய மான அம்சம், அங்கே கட்டாயமாக, மூன்றா வது மொழியாக இந்தி படிக்க வேண்டும்.

எங்கள் பள்ளிக் கூடத்தைப் பொருத்த வரை என்ன ஆயிற்று என்றால், மெட்ரி குலேஷன் முறையைப் பின்பற்றிய போது, போட்டி என்பது மாநில அளவில்தான் இருந்தது. எங்கள் பள்ளி மாணவர்கள் டாப் இடங்களில் வந்து கொண்டிருந்தார்கள். சி.பி.எஸ்.சி முறைக்கு மாறிய பிறகு, நாங்கள் அகில இந்திய அளவில் போட்டிபோட வேண்டியிருந்தது. அதிலும் முதலிடங்களை எங்கள் மாணவர்கள் வாங்கினார்கள். வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்! என்றாலும் கூட முதல் வருடம் இறுதிப் பரீட்சையின் போது, நாங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது.

சிலபஸ் கொஞ்சம் கடுமையானது; புதிய முறை என்பதால் மாணவர்களுக்குக் கொஞ் சம் உள்ளூர பயம் இருக்கவே செய்தது. எனவே, அவர்களுக்கு 'பரீட்சை ஜுரம்' அவசியமில்லாதது; உங்களால் நன்றாகப் பரீட்சை எழுதி, முதல் வகுப்பில் பாஸ் செய்ய முடியும் என்று மனோரீதியாக தெம் பூட்ட வேண்டயிருந்தது, நல்ல பலனைக் கொடுத்தது. பரீட்சை ரிசல்ட்டும் பெருமைக் குரியதாக அமைந்ததில் ஆசிரியர்களுக்கும் எனக்கும் பெற்றோருக்கும் மகிழ்ச்சி.

இன்றைக்கு பள்ளிக் கூடங்களில், மிகப் பெரிய பிரச்னையாக இருப்பது, ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் எண்ணிக்கைதான். என்னைப் பொருத்தவரை, ஒரு வகுப்பு என் றால், அதிக பட்சமாக நாற்பது மாணவர்கள் இருக்கலாம் என்பேன். இதுவே அதிகம் என்று கூடத் தோன்றும். ஆனால், இங்குள்ள வசதிகள், வாய்ப்புகள் எல்லாவற்றையும் பார்க்கிறபோது, குறைவான குழந்தைகள் இருந்தால், நிர்வாக ரீதியில் சில பிரச்னைகள் ஏற்படக் கூடும். அதாவது மிக அதிக எண் ணிக்கையில் வகுப்பறைகள், ஆசிரியர்கள், சோதனைக் கூட வசதி இப்படி.

இப்போது அட்மிஷன் சமயங்களில், பிரஷர் அதிகமாக இருப்பது உண்மைதான். அதற்காக, வகுப்பறைகளின் எண்ணிக் கையை அதிகரிக்காமல், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதை பல பள்ளிக் கூடங்களில் கடைப்பிடிக்கிறார்கள். அறுபது மாணவர்கள் ஒரு வகுப்பில் இருக் கிறார்கள் என்றால், ஒரு ஆசிரியரால் எப்படிப் பாடம் நடத்த முடியும்? ஒவ்வொரு மாணவன் மீதும் ஆசிரியரால் எப்படி தனிக்கவனம் செலுத்த முடியும்?

பத்மா சேஷத்ரி பள்ளியில் கூட கிண்டர் கார்டன் செக்ஷனில், சில வகுப்புகளில் குழந்தைகளின் எண்ணிக்கை வேறு வழி யில்லாமல், நாற்பதைத் தாண்டி விடக் கூடும். அது போன்ற சமயங்களில் நாங்கள், அந்த வகுப்புக்கு இரண்டு டீச்சர்களைப் போட்டு விடுவோம். இரண்டு பேரும் சேர்ந்து வகுப்பை கவனித்துக் கொள்ளுகிறபோது, குழந்தைகள் மீது தனிக்கவனம் செலுத்த முடியுமில்லையா?

"அந்த ஆள் புதுசா மெம்பராகிற தீவிர காங்கிரஸ்காரர்ன்னு எப்படி சொல்றே?"

"கட்சி ஆபீசுக்கு வரும்போது இத்தாலிய நாட்டுக் கொடியோட வாராரே!"

– ப. ரமேஷ்



அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பது, இன்னொரு வகையான கெடுதலுக்கும் வழிவகை செய்து தருகிறது என்பது கண்கூடு. அது என்ன? டியூஷன். ஆமாம்! சென்னையில் என்று இல்லை; பல ஊர்களிலும் உள்ள பள்ளிக் கூடங்களில் இதுதான் நடக்கிறது.

வகுப்பில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகம் என்பதால், ஆசிரியர்கள் ஒழுங்காகப் பாடம் சொல்லித்தர முடியாது. அதற்குப் பதிலாக வீட்டிற்கு மாணவர்களை வரவழைத்து, டியூஷன் சொல்லித் தருகிறார்கள். டியூஷன் கற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு, ஆசிரியர் சிறப்பான சில சலுகைகள் காட்டுவது என்பது கண்டிக்கப்பட வேண்டிய நடைமுறை!

இத்துடன் முடிந்ததா என்றால் இல்லை. இந்த தில்லுமுல்லுகள் பரீட்சையிலும் கூட தொடர்கின்றன என்று கேள்விப்படுகிறேன். என் சிநேகிதியான மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர் ஒருவர், இது பற்றியெல்லாம் கூறி என்னிடம் அண்மையில் வருத்தப்பட்டார்.

இந்த அதிக எண்ணிக்கையால் வகுப்புகளில் மாணவர்கள் மீது தனிக்கவனம் செலுத்த முடியாமல் போகிற பிரச்னைக்குக் கூட அமெரிக்காவுக்கு நான் சென்றிருந்த போது, ஒரு நல்ல தீர்வைப் பார்த்தேன். அறுபது மாணவர்கள் ஒரு வகுப்பில் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த வகுப்பை ஆறு, ஆறு மாணவர்கள் கொண்ட பத்து குழுக்களாகப் பிரித்துக் கொண்டு விடுகிறார்கள். கணக்குப் பாடம் என்றால், அடிப்படையான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்துவிட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் இரண்டு மூன்று கணக்குகளைக் கொடுத்து, போடச் சொல்லுகிறார்கள். கால் மணி நேரத்தில் எல்லாரும் போட்டு முடித்து விடுகிறார்கள்.

இப்போது, ஒவ்வொரு குழுவுக்கும், தமக்குக் கொடுக்கப்பட்ட கணக்கைப் போடும் வழிமுறை தெரிந்திருக்கும். அடுத்து, ஒவ்வொரு குழுவின் சார்பிலும் ஒருவர் வந்து, போர்டில் தமக்குக் கொடுத்த கணக்கை எப்படிப் போடுவது என்று விளக்குகிறார்கள். இந்தப் புதிய முறையில் மாணவர்களுக்குக் கணக்குப் போடுவது எப்படி என்று தெரிகிறது என்பது மட்டுமில்லை, அதைப் புரியும்படி, சகமாணவர்களுக்கு விளக்கிச் சொல்லவும் பயிற்சி கிடைக்கிறது. அதாவது கணக்குப் போட்ட மாணவனே, பிறகு, சக மாணவர்களுக்கு ஆசிரியர் ஆகிறான்.

இந்த முறையில், கணக்குதான் என்று இல்லை. எல்லா பாடங்களையுமே சொல்லித் தர முடியும். இதற்காகச் செய்ய வேண்டியது எல்லாம், ஆசிரியர் முதலில் பாடத்தை நன்கு படித்து, வகுப்பில் சுருக்கமாக விளக்க வேண்டும். பின் அந்தப் பாடத்தை பல்வேறு குழுக்களுக்குமாகப் பிரித்துக் கொடுத்து, படிக்கச் செய்து, பின்னர் பாடம் சொல்லித்தரவும் செய்ய வேண்டும்.

இதுபோன்ற கோணத்தில் சிந்தித்து நான் இன்னொரு புதுமையையும் முயற்சி செய்து பார்த்தேன். அதுதான் மாணவர்களையே பரீட்சைக்கு கேள்வித்தாள் தயாரிக்க வைப்பது. அந்த அனுபவமும் சுவாரசியமானது.

(அடுத்த வாரம் சொல்கிறேன்)

கார் வைத்திருப்போரின் மோசடி!

'என் காரை காணவில்லை' என்று புகார் கொடுப்பவர்களின் எண்ணிக்கை பாரீசில் அதிகம். போலீஸ் மண்டையைப் பிய்த்து கொண்டது. ஆனால் திருடர்கள் தான் கிடைக்கவில்லை. எலக்ட்ரிசிடி போர்டுக்கு சொந்தமான கால்வாயைச் சுத்தப்படுத்தும்போது, உள்ளே கிடந்த கார்களின் எண்ணிக்கை பன்னிரண்டாயிரம்! யோசித்ததில் காரின் சொந்தக்காரர்கள் காரை கால்வாயில், தூக்கி போட்டுவிட்டு 'இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் என் காரைக் காணவில்லை' என்று பணம் வாங்கிக் கொள்வார்கள்! பணத்துக்குப் பணம் ஓட்டைக் காரையும் தள்ளியாயிற்று. இன்சூரன்ஸ் நிறுவனம் இந்த மோசக்காரர்களுக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பி உள்ளது.



— பாரிஸ் விஷ்ணுப்ரியன்

நீங்கள் கேட்டவை – தராசு

● எஸ். சாந்தி, காட்பாடி.

? 'உங்களைப் பார்த்தும் ஒருநாள் நாடே சிரிக்கும்' என்று கூட 'ஜெ'யின் வழக்குரைஞர் தனி நீதிமன்ற நீதிபதியைப் பார்த்துக் கூறியுள்ளாரே?

! அது மட்டுமா? அவரைப் உடல்நிலை அரசு மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட வேண்டும் என நீதிபதி உத்தரவிட, 'அவரை இந்த நீதிமன்றம் கொடுமைப்படுத்துகிறது. அதனால் சிறுபான்மையினர் நலனுக்கே அபாயம்' என்று அவதூறு வேறு பேசியிருக்கிறார்கள் ஜெ தரப்பு வழக்குரைஞர்கள்! ஜெயலலிதாவின் தாமத நடவடிக்கைகளோடு போட்டி போடும் அக்கிரமம் இது! இம்மாதிரி நீதிபதிகளையும் நீதிமன்றங்களையும் அவமதிக்கும் போக்கு ஆபத்தானது. தேச நலனுக்கு எதிரானது. வழக்குரைஞர்கள் தங்கள் சாமர்த்தியத்தை 'ஜெ குற்றமற்றவர்' என்று நிரூபிப்பதில் காட்ட இயலாது என்று சந்தேகிப்பதால் இப்படி 'அரசியலில்' இறங்குகிறார்கள்.

● ஏ. அஷ்ரஃப் அலி, தக்கலை.

? 'தேர்தலில் வெற்றி பெறுவது முக்கியமல்ல; கொள்கையில் வெற்றி பெறுவதுதான் முக்கியம்' என மூப்பனார் கூறியிருக்கிறாரே?

! கொள்கை முக்கியம்தான். ஆனால் தேர்தலில் வெற்றி பெற்றால்தானே கொள்கைகளை அமுல்படுத்த முடியும்? எனவே அதுவும் அடுத்ததாக முக்கியத்துவம் வாய்ந்ததுதான்.

● என். பாலகிருஷ்ணன், மதுரை – 1.

? வோட்டுப் போட்டால்தான் ரேஷன் கார்டு வழங்கப்படும் என சட்டம் கொண்டு வர வேண்டும் என்று எஸ்.வி. சேகர் சொல்லியிருப்பதை வரவேற்கிறீர்களா?

! ரேஷன் கார்டு தேவைப்படுகிற நிலையிலுள்ளவர்களெல்லாம் தவறாமல் வோட்டுப் போட்டு விடுகிறார்கள். அது தேவையில்லை என்கிற நிலையில் உள்ளவர்கள்தான் வோட்டுப் போடுவதில்லை என்பதை எஸ்.வி. சேகர் புரிந்து கொள்ள வேண்டும்.

● செ. மலர்விழி, மதுரை – 10.

? தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி விடுதலைப் புலிகளின் ஏற்பாடு என்று சுப்ரமண்ய சுவாமி கூறுகிறாரே...?

! இந்த மாதிரி பேச்சையெல்லாம் அந்த நாளில் 'செவன்டி எம்.எம். ரீல்' என்பார்கள். இன்றைக்கு 'டுபாகூர்'!

● நா. பாலசுப்பிரமணியன், சென்னை – 101.

? எட்டயபுரத்தில் கல்கி பெயரில் சமுதாயக்கூடம் அமைக்க வைகோ ஆர்வம் காட்டுவது பற்றி...?

! அமரர் கல்கி எட்டையபுரத்தில் மகாகவிக்கு மணிமண்டபம் எழுப்பினார் என்பதால் வைகோ இந்தத் திட்டத்தை மாநில அரசுக்கு முன் வைத்துள்ளார்.



• உருப்படாத யோசனை!



• வளமான கற்பனை!

எம்.பி. தொகுதிக்குச் செலவிட வழங்கப்படும் தொகையை இதற்குத் தாம் ஒதுக்குவதாகவும் கூறியுள்ளார். இனி முதல்வரும் இதில் சற்று கவனம் செலுத்தினால் நடக்கும்.



• ஆதரவற்ற அணி!

● ஜி. நீலகண்டன், பெங்களூர் – 3.

? ஏன் சார், காப்பி கொட்டை கடையின் முன்னால் வரும் கிறங்க வைக்கும் காப்பி நறுமணம், வீட்டில் காப்பி போடும் பொழுது எங்கே 'மறைந்து' விடுகிறது?

! காற்றில்தான்! கடையில் வருகிற நறுமணமானது வறுபடும் கொட்டையின் சுகந்தம்; அரைபடும் நன்கு வறுத்த கொட்டையின் வாசனை. இதையெல்லாம் வீட்டிலேயே அவ்வப்போது செய்து டிகாக்ஷன் இறக்கினால் மணமும் காற்றில் ஓடி விடாமலிருக்கும். என்ன? இன்ஸ்டன்ட் காப்பியே போதும் என்கிறீர்களா?!

தராசே, நீர் தமிழர்தானா..?

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
பா. வடிவேல்,
தேவனாங்குறிச்சி - 637 209

• பா. வடிவேல், தேவனாங்குறிச்சி. ❑

? பிரதமராகி நாட்டை நிர்வாகம் பண்ணும் அளவுக்கு சரத்பவாருக்குத் திறமை இருப்பதாகக் கருதுகிறீர்களா...?

! 'எதிர்காலப் பிரதமர்' என முன்னாள் காங்கிரஸ் தலைவர்களால் வர்ணிக்கப்பட்டார். திறமையும் தகுதியும் நிறைந்த அனுபவமும் நிச்சயமாக இருக்கிறது. ஆனால், அவர் அமைக்கிற மூன்றாவது அணிக்கு மக்கள் ஆதரவு வேண்டுமே?

• பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'ஜெ. மன்னிப்புக் கேட்டால் அ.தி.மு.க.வுடன் பேச்சு நடத்தத் தயார்' என்று புதிய தமிழகம் கிருஷ்ணசாமி கூறியுள்ளது பற்றி...?


! ஹா ஹா ஹா! ஹீ ஹி ஹீ! ஹோ ஹோ ஹோ! ஹஹ் ஹஹ் ஹா! ஹி ஹி ஹி! ஹீ! ஹீ! ஹீ! ஹீ! ஹி ஹீ!

• ச. புகழேந்தி, சென்னை – 86.

? தமிழ் ஈழத்துக்குக் குரல்கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? தமிழகத்தில் இருந்து கொண்டு, தமிழில் பத்திரிகை வெளியிடும் நீங்கள் தமிழர்தானா என்பதை சந்தேகிக்க வேண்டியுள்ளது. தமிழ் ஈழத்துக்குத்தான் ஆதரவே தவிர தீவிர வாதத்துக்கு அல்ல. ஒருபுறம் சுபா சுந்தரத்துடன் பேட்டி, மறுபுறம் தமிழ் ஈழத்துக்கு எதிர்ப்பு! – ஏன் இந்த இரட்டை வேடம்?



• கொள்கையும் குழப்பமும்



• தயார்! தயார்!

! சாத்வீகமாக, சீக்கியர்கள் தனிநாடு கேட்டால் கொடுத்து விடுவோமா? காஷ்மீரம் பிரிந்து போக அனுமதிப்போமா? தனித் தமிழ் ஈழம் என்பதும் அப்படித்தான். ஸ்ரீலங்காவின் இறையாண்மைக்கு உட்பட்டு ஜனநாயகத்துக்கும் சுயாட்சிக்கும் முயற்சி செய்வதே நல்லது. கூடுதல் அதிகாரங்களைக் கோரலாம்; தனி நாட்டை அல்ல. தராசு ஒரு தமிழன் என்பதற்கு உங்களுடைய சான்றிதழ் தேவையில்லை. சுபா சுந்தரம் பேட்டிக்கும் தனித் தமிழ் ஈழம் கோரிக்கைக்கும் சம்பந்தமில்லை.

• ஆர். சாலமோன், ஆலங்குளம்.


? ஐயா, எனக்கு ஒரு சின்ன சந்தேகம். மூப்பனார் காங்கிரஸில் இருக்கிறாரா? இல்லை த.மா.காவில் இருக்கிறாரா...? அவர் பேட்டியைப் பார்க்கும்போது குழப்பம் வருகிறது.

! அவருக்கே குழப்பமாகத்தான் இருக்கிறது.

• மு. இரவிச்சந்திரன், சேலம் – 9.

? ஜெயலலிதாவுக்கு வைரஸ் காய்ச்சல், ரத்த அழுத்தம், அதோடு வாயுத் தொல்லை, அதனால்தான் தனி நீதிமன்றத்துக்கு வர முடியவில்லை என்ற ஜால்ஜாப்பு குறித்து...?

! ஒரு மாதிரி வந்து சேர்ந்து, பத்து நிமிடம் போல் பேசாமல் அமர்ந்திருந்தவர், நீதிபதி வந்து இருக்கையில் அமர்ந்ததுமே தும்மி, இருமி தமது உடல்நலக் குறைவுக்கு சாட்சியம் சமர்ப்பிப்பதை நாளிதழ்கள் நேர்முக வர்ணனை செய்துள்ளன!



• எட்டயபுர கனவு:

• து. சிவக்குமார், கபிஸ்தலம்.

? இக்கால சினிமா பற்றி உங்கள் கருத்து...?

! இவ்வார கல்கி கலெக்ஷனின் ஆரம்பத்தில், சினிமா எப்படி இருக்கக் கூடாது என அமரர் கல்கி குறிப்பிட்டுள்ளார் பாருங்கள்... இக்கால சினிமா சாக்ஷாத், அப்படித்தான் இருக்கிறது!

என்னுடைய கையை நீட்டினால், விரல்களுக்கிடையில் நிறைய இடைவெளி இருக்கும். இப்படி இடைவெளி இருக்கிறவர்கள் கையில் காசு தங்காது என்று சொல்லுவார்கள். அதனால், நான் பொதுவாகவே என் பர்சில் அதிக பணம் வைத்துக் கொள்ள மாட்டேன். கிரெடிட் கார்டு மட்டும் எப்போதும் என் பர்சில் இருக்கும். அதையும் கூட ஒரு எமர்ஜென்ஸி என்றால்தான் பயன்படுத்துவேன். என்ன செலவோ, அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமோ, அந்த அளவுக்குத்தான் நான் கையில் பணம் வைத்துக் கொள்வேன். இது என் நெடுநாளைய பழக்கம்.

சின்ன வயசில், வீட்டில் எல்லோரும் சினிமாவுக்குப் போகிறபோது, நான் சினிமாவுக்கு வரவில்லை என்று சொல்லி விடுவேன். அது மட்டுமில்லை, என் அம்மாவினுடைய புடைவைத் தலைப்பை மிக இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு, என் அம்மாவும் சினிமாவுக்குப் போகக் கூடாது என்று அடம்பிடிப்பேன். அப்படியே படுத்துத் தூங்கிப் போய் விடுவேன். தூக்கத்தில் கூட என் கை விரல்கள் அம்மாவின் புடைவைத் தலைப்பை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டுதான் இருக்கும். ஆனால், என் அம்மா நான் பிடித்திருக்கிற புடைவையை அப்படியே விட்டு விட்டு, வேறு புடைவை கட்டிக் கொண்டு, சினிமாவுக்குப் புறப்பட்டுப் போய் விட்டிருப்பார். நாளடைவில், அம்மா புடைவையைப் பிடித்துக் கொண்டு அழுது, அடம்பிடிக்கிற பழக்கம் போய், காலணா காசு வாங்கிக் கொண்டு, வீட்டிலேயே இருந்து விட ஆரம்பித்தேன். காசை எடுத்துக் கொண்டு நேரே அருகிலிருந்த கடைக்குப் போய் அப்போது மிகப் பிரபலமாக இருந்த ஆரஞ்சு மிட்டாய் வாங்கிச் சாப்பிடுவேன். அது எனக்கு மிகவும் பிடித்த மிட்டாய்.

ஏவி.எம். நிறுவனத்துக்காக ஒரு படம் இயக்கியிருந்தார் டைரக்டர் ஏ.சி. திருலோகசந்தர். அப்போது ஒருநாள் நான், என் அண்ணன் குமரன், டைரக்டர் திருலோகசந்தர், விஜயபுரி வீரன் முதலிய படங்களில் நடித்த நடிகர் ஆனந்தன் (பின்னாளில் நடிகை டிஸ்கோ சாந்தியின் அப்பா) ஆகியோர் பேசிக் கொண்டிருந்தோம். "வாருங்கள் ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிடலாம்" என்று நானும், குமரனும் அவர்களை அழைத்துக் கொண்டு ஓட்டலுக்குப் புறப்பட்டோம்.

ஓட்டலில் சாப்பிட்ட பின் பில் வந்தது. குமரனிடம் பணம் கொடுக்கும்படி சொன்னேன். அவர், "என்னிடம் பணம் இல்லையே!" என்றார். நான், "நாம் புறப்படுகிறபோது, நீ சட்டை மாற்றிக் கொள்ள வீட்டுக்குள் போன சமயம், நான் அம்மாவிடமிருந்து பணம் கேட்டு வாங்கிக் கொண்டு வரச் சொன்னேனே! நீ வாங்கிக் கொண்டு வரவில்லையா?" என்றேன்.

"அப்படியா? நீ சொன்னதே எனக்குத் தெரியாதே. நான் சட்டை மாற்றிக் கொண்டு வந்து விட்டேன்!" என்றார் குமரன்.



எங்கள் இரண்டு பேருக்கும் என்னடா, ஓட்டலுக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டோம்; பணம் கொண்டு வரவில்லையே என்று ரொம்ப தர்மசங்கடமாகிவிட்டது. கடைசியில், திருலோகசந்தரே பணம் கொடுக்கும்படி ஆகிவிட்டது. நானும், என் அண்ணனும், திருலோக்கிடம் வருத்தம் தெரிவித்தோம்.

ஏவி.எம்.மில் 'ராமு' படம் எடுத்தபோது, ஒரு குறிப்பிட்ட ரேட்டுக்கு நடிகர் எஸ்.வி. சுப்பையாவையும், வேறு ஒரு ரேட்டுக்கு இன்னொரு நடிகரையும் புக் பண்ணியிருந்தோம்.

ஒருநாள் ஷூட்டிங்கின் இடையில், உடனடியாக வந்து தம்மைச் சந்திக்கும்படி, சுப்பையா சொல்லியனுப்பினார். தகவல் சொன்னவர், சுப்பையா கடும் கோபத்தில் இருப்பதாகச் சொன்னபோது சிறிது குழம்பிப் போனேன்.

என்னைப் பார்த்தவுடன் இன்னொரு குறிப்பிட்ட நடிகரின் பெயரைச் சொல்லி, 'அவருக்குப் பேசிய ரேட் எழுபத்தைந்தாயிரம் ரூபாயாமே! அந்த ரேட்டை எனக்கும் தராவிட்டால், நான் உன் படத்தில் நடிக்க மாட்டேன்' என்று கோபமாகக் கூறியபடியே, தன் தலையிலிருந்து விக்கைக் கழற்றி விட்டார் சுப்பையா.

ஏவி. எம். சரவணன்

ரஜினி குறைத்த பணம்!

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சொன்னதையே திருப்பிச் சொன்னார். அவரைத் தனியே அழைத்துக் கொண்டு போய், "அவருக்கும், உங்களுக்கும் ஒரே ரேட் தரணும் அப்படித்தானே!" என்றேன்.

ஆம் என்றார். "அப்படியென்றால், உங்களுக்குக் கொடுத்திருக்கும் பணத்திலிருந்து ஒரு ஏழாயிரத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்" என்றேன். அவர் குழம்பிப் போய் விட்டார்.

நான் விளக்கினேன். "அவர் கேட்டது என்னவோ எழுபத்தையாயிரம் ரூபாய் தான்! ஆனால் அவரிடம் பேரம் பண்ணி, பேரம் பண்ணி, உங்களுக்குப் பேசிய ரேட்டை விட ஏழாயிரம் ரூபாய் குறைவான ரேட்டுக்கு புக் பண்ணினேன். இது தான் நடந்தது. ஆனால், வெளியில் தன் ரேட் எழுபத்தையாயிரம் ரூபாய் என்று பந்தா பண்ணிக் கொண்டிருக்கிறார்."

என் விளக்கத்தைக் கேட்டுச் சமாதானம் அடைந்தார் சுப்பையா. இந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் எனக்குச் சிரிப்பு வரும்.

நாங்கள் முரட்டுக் காளை படம் எடுத்துக் கொண்டிருந்தபோது, ஏறத்தாழ படம் முடிந்து விட்ட நேரம். அப்போது, படத்தின் இயக்குனர் எஸ். பி. முத்துராமன், "ஒரு சண்டைக் காட்சியை படத்தில் சேர்க்கலாம். அதுவும் ஓடும் ரயிலில் அந்தச் சண்டைக் காட்சியை எடுத்தால் வித்தியாசமாக இருக்கும். ஆனால் அதற்கு ஒண்ணே முக்கால் லட்சம் ரூபாய் செலவாகும்" என்றார். நான், "பரவாயில்லை. நாம் செலவு செய்வது பெரிதில்லை; ஆனால் அது திரையில் அதற்கேற்ற இம்பாக்ட்டை உருவாக்கும்படி இருக்க வேண்டும்" என்றேன்.

திருநெல்வேலியருகே மூன்று நாட்களில், ஸ்டண்ட் மாஸ்டர் ஜூடோ ராமு அமைத்த சண்டைக் காட்சியை எஸ்.பி.எம். படம்பிடித்துக் கொண்டு வந்தார். அந்த சண்டைக் காட்சியைப் பார்த்து விட்டு, நான் பிரமித்துப் போனேன். ஒண்ணே முக்கால் லட்சம் செலவழித்தது, பெரிதாகத் தெரியவில்லை. அதற்கேற்றபடி பிரும்மாண்டம் விறுவிறுப்பு எல்லாம் அந்தக் காட்சியில் இருந்தது.

அந்தப் படத்தின் பட்ஜெட்டில் ஒண்ணே முக்கால் லட்சம் ஒரு சண்டைக் காட்சிக்கு என்பது அதிகம்தான் என்றாலும், படத்தின் அமோக வெற்றிக்கு அதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

ராஜா சின்ன ரோஜா என்று ரஜினியை வைத்து ஒரு படம் எடுத்தோம். அந்தப் படத்தில் நடிக்க, ரஜினி கேட்ட தொகை, கொஞ்சம் அதிகம் என்று எனக்குத் தோன்றியது. ஆனாலும், அவர் கேட்ட தொகை தர ஒப்புக் கொண்டேன்.

சில நாட்கள் கழித்து ரஜினி என்னை வந்து சந்தித்தார். நான் தர ஒப்புக் கொண்ட தொகையை விட நாலு லட்சம் ரூபாய் அளவுக்குக் குறைவாகக் கொடுத்தால் போதும் என்றார். எனக்கு இனிய அதிர்ச்சி. அவரே காரணமும் சொன்னார். "இன்னும் இரண்டு பெரிய தயாரிப்பாளர்களின் படங்களையும் நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன். அவர்களிடமும் உங்களிடம் கேட்ட தொகையைத்தான் நான் கேட்டேன். ஆனால் அவர்கள், நான் கேட்டது அதிகம் என்று கருதியதால், நான்கு லட்சம் ரூபாய் அளவுக்குக் குறைத்து ஒப்புக் கொண்டேன். அப்படி இருக்கிறபோது, உங்களிடம் மட்டும் அதிகமாக வாங்கிக் கொள்ள என் மனம் ஒப்பவில்லை. எனவேதான், உங்களையும் அந்த அளவுக்குக் குறைத்தே தரும்படி சொல்லுகிறேன்" என்றார்.

எனக்குத் தெரிந்து, இந்தியாவிலேயே பேசிய பணத்தைத் தாமே குறைத்து வாங்கிக் கொண்ட நடிகர் ரஜினியைத் தவிர வேறு யாரும் கிடையாது. ரஜினி ரஜினிதான்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

KALKI SHOPPING PAGE

கல்கிக்கு நன்றி!

✉ "சோனியாவுக்கு எதிராகச் சதி" தலையங்கம் சூடுபறக்கும் கருத்துகளின் வெளிப்பாடு. மிகச் சரியான கால கட்டத்தில் மிக மிகப் பொருத்தமான தலையங்கம் இது. நன்றி!

விழுப்புரம், வை. வெங்கடேசன்.

✉ சோனியா பிரதமர் பதவிக்கு லாயக்கற்றவர். அவருக்கு அரசியல் சாதுர்யமும், அனுபவமும் இல்லை, அவரால் சிறிதளவு கூட சமாளிக்க முடியாது என்ற உண்மையை வெட்ட வெளிச்சமாக எழுதிய உமக்கு மக்கள் நன்றி சொல்ல வேண்டும்.

சென்னை - 17, யு.எஸ்.கே. மூர்த்தி.

✉ "என்னைப் பொறுத்தவரை, சாதனைகள் செய்வது கொஞ்சம் தள்ளிப் போயிருக்கிறது" என்று சுபா சுந்தரம் கூறுவது அவரது மன உறுதியையும் நம்பிக்கையையும் காட்டுகிறது. சிறையிலிருந்து உளச்சோர்வோடு வெளிவரும் கைதிகள் இந்த நம்பிக்கையோடு வாழ்க்கையை எதிர் கொண்டால் வெற்றி நிச்சயம்!

கல்பாக்கம், சி. இரவிச்செல்வன்.

✉ விடுதலைப் புலிகளுடன் தாம் தொடர்பு கொண்டதற்கான காரணத்தை சுபா சுந்தரம் கூறியிருந்தால், உண்மையிலேயே மனம் திறந்த பேட்டியாக இருந்திருக்கும்.

திருச்சி, என். சம்பத்.

✉ சாவி ஒரு பயணக் கட்டுரையாளர், பத்திரிகையாளர், பலரை வளர்த்த ஆசான் என்று தெரியும். ஆனால் முதலில் விளம்பர டிசைனர் என்பது அறியாத அபூர்வச் செய்தி!

பள்ளிபாளையம், ரஞ்சனிப்ரியன்.

✉ புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதை நிரூபித்து, சாதனை புரியும் 'ராஜ் டூன் ஹீரோ!' பாரியின் திறமை வியப்பால் விழிகளை விரியச் செய்து விட்டது!

பெத்தானியாபுரம், பி. காந்தி.

✉ டியர் சுமி, தள்ளுவண்டி பிழைப்பை நம்பி எத்தனை குடும்பங்கள் வாழ்கின்றன தெரியுமா? சிலர் மோசம் செய்கிறார்கள் என்பதற்காக ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்கலாமோ?

தேவனாங்குறிச்சி, பா. வடிவேல்.

✉ என்னதான் அம்மா, பொஞ்சாதி சண்டை, சச்சரவு, பிரிவு என்று இருந்தாலும், குடும்பத்தில் குழந்தை என்று ஒன்று பிறந்து விட்டால் அத்தனையும் பறந்து விடும் என்பதற்கு மும்தாஜ் யாசீன் எழுதிய 'கூடை நிறைய மனசு' சிறுகதை தக்கதொரு சான்றாகும்.

சாத்தூர், எம். செல்லையா.

வட்டமேஜை

✉ புதுமைப்பித்தனுக்குப் பிறகு, என்னை மிகவும் ஈர்த்த 'மணிக்கொடி' எழுத்தாளர்கள், கு.ப.ராவும் பிச்சமூர்த்தியும். இவர்களின் மரபைப் பேணி வளர்க்கும் படைப்பாளிகள் தமிழில் இருக்கவே செய்கிறார்கள் என்பதை பா. ராகவனின் 'கத்தி முனையில் துளி விஷம்' சிறுகதை எனக்கு உணர்த்துகிறது. கதாசிரியருக்கும், கலை நயமிக்க கதைகளை வெளியிடும் கல்கிக்கும் என் உளமார்ந்த பாராட்டுகள்.

நெல்லை - 7, ஓ.க.சி.

✉ எந்த நேரத்தில் 'வயித்தெரிச்சல் பாட்டை'ப் போட்டீரோ, பாரத அணி ஓட்டங்களை மலைபோல் குவிக்கத் தொடங்கி விட்டது! (சச்சின் இல்லையென்றால் ஒன்றுமில்லை என்று நமது அணி துவள்வதுதான் துரதிர்ஷ்டம்).

காரைக்குடி, பாலு.

✉ 23.5.99 இதழில், 'மாணவிகள் வளர்க்கும் மூலிகைச் செடிகள்' என்ற தலைப்பில் எமது பள்ளியைப் பற்றிய கட்டுரையை வெளியிட்டிருந்தீர்கள். கட்டுரையைப் படித்துவிட்டு, திண்டுக்கல் காந்திகிராமம் பல்கலைக் கழகத்தில் 27.5.99 அன்று மாநில அளவில் நடைபெற்ற மூலிகைக் கருத்தரங்கில் எங்கள் பள்ளி மாணவிகள் மூவரை சொற்பொழிவாற்றக் கூப்பிட்டனர். ஒரு புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தில் எமது மாணவிகள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வாங்கிக் கொடுத்த கல்கிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் - 1, ஆ. ஈஸ்வரன்,
செயலாளர்,
பெற்றோர் - ஆசிரியர் கழகம்,
ஜெ.எம்.ஜி. மேல்நிலைப் பள்ளி.



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

புதன், சுக்கிரன், கேது மூணும் உங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு அளிக்கறதால, இந்த வாரம் ரொம்ப சுகமாகவே கழியும். பேச்சாற்றல் பிரகாசமா இருக்கும்னாலும் லூஸ்-டாக் விட்டு ஆபீஸ்ல மாட்டிக்காதீங்க. பணவரவு திருப்தியாவே இருக்கும். உடன் பிறந்தவங்களால ஏதாவது சிறு பிரச்னை அல்லது கவலை ஏற்படலாம். பெண்களுக்கு இது ரொம்ப நல்ல வாரமா இருக்கும். எதிர்பாராத இடங்கள்லேருந்து ஆதாயம் கிடைக்கும்.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருக சிரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க தன்னம்பிக்கைதாங்க உங்க பலமே! எத்தனை தடைகள் வந்தாலும் சமாளிப்பீங்க. உங்களோட முக்கியமான பிரச்னை என்னன்னா, நீங்க வெச்சிருக்கற லட்சியத்துக்கும், இப்ப நின்னுட்டிருக்கற இடத்துக்கும் நடுவுல இருக்கற பெரிய இடைவெளி சொந்தக்காரங்க. நண்பர்கள் யாருமே உங்களுக்கு ஆதரவா இல்லை. அலுவலகத்திலும் பிரச்னைகள். ஆனாலும் சமாளிப்பீங்க! இந்த வாரம் பல சமயங்கள்ல - குறிப்பா கோபம் வரும்போது மௌனம் காக்கறது ரொம்ப நல்லது.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் கண்ட இடங்கள்ல சாப்பிட்டு உடம்புக்கு வரவழைச்சிக்கப் போறீங்க. வெளில நிறைய அலைய வேண்டி வரும். ஆனா, எதிர்பார்த்த பணவரவு வந்து சேராது! வீட்டுல ஒரு நல்ல காரியம் நடக்கப் போவுது. அநேகமா உங்க பூர்வீக சொத்து ஏதாவது கிடைக்கறதுக்கான அறிகுறி தெரியலாம். ஆபீஸ்ல மேலதிகாரிகளோட வாதம் பண்ணாதீங்க. வீட்டுல கூட பெரியவங்களை எடுத்தெறிஞ்சு பேசாதீங்க. இப்ப உங்க நண்பர்களால சில பிரச்னைகள் வரலாம். கொடுக்கல் வாங்கல் பிசினஸ் மட்டும் வெச்சிக்காதீங்க.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பிரச்னை அதிகமில்லை. திட்டப்படி உங்க காரியங்கள் நடக்கும். வெளி நாட்டுத் தொடர்புள்ளவங்களுக்கு, அங்கிருந்து ஒரு நல்ல சேதி வரும். பணப் பிரச்னை இருக்காது. பழைய பாக்கிகள் வசூலாகும். விருந்துகள்ல கலந்துக்கற வாய்ப்பு கூடி வரும். ஆபீஸ்ல புரமோஷனுக்கு வாய்ப்பு இருக்கு. அதிகாரிகள் கிட்ட அனுசரணையா நடந்துக்கறது அவசியம்.




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க எதிரிகள் ஓடி ஒளியறாப்பல இப்ப உங்க பராக்கிரமம் கூடப் போகுது. எதிலும் வெற்றிதான். கவலையே படாதீங்க. மனைவி மூலமா சில ஆதாயங்கள் கிடைக்கும். பூர்வீக சொத்து விஷயமா ஏதாவது வழக்கு இருந்ததுன்னா அது சுலபமா தீரும். வீட்டுல நல்ல காரியங்கள் நடக்கறதுக்கான ஏற்பாடுகள் நடக்கும். தாய் உடல் நலன்ல அக்கறை செலுத்துங்க. சிறு மருந்துச் செலவுகள் வரலாம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

கொஞ்சம் உஷாரா இல்லாட்டா, ரொம்ப நெருங்கினவங்களே கூட உங்களுக்கு எதிரா செயல்படக் கூடிய நேரம் இது. புது முயற்சிகள் எதுவும் இப்ப வேணாம். முக்கியமான விஷயங்களை பகிரங்கமா நாலு பேர் எதிரில் விவாதிக்காதீங்க. குறிப்பா, ஆபீஸ்ல யாரைப் பத்தியும் அபிப்ராயம் சொல்லாதீங்க. மன அமைதி குறையறாப்பல வீட்டுலயும் சில பிரச்னைகள் வரலாம். பணப் பிரச்னையும் இருக்கும். கடன் வாங்கிட்டுப் பின்னால கஷ்டப்படாதீங்க.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

உங்க புது முயற்சிகள் எதுவானாலும் பலனளிக்கற வாரம். தைரியமா செயல்படுங்க. வீடு, மனை வாங்கவும் ஏற்ற சூழ்நிலை. வெளிநாட்டு வேலை வாய்ப்பு சிலருக்கு அமையும். பெண்களுக்குத் திருமண யோகம் கூடி வரும். வயசானவங்களுக்கு ஆன்மீக டூர் அடிக்கற வாய்ப்பும்

ஜூன் 9 முதல் 15 வரை


நடக்குமென்பார் நடக்கும்!

இருக்கு. மருத்துவர்கள் செயற்கரிய சாதனை ஒன்னு செய்து பெரும் புகழடைவாங்க. ஆசிரியர்கள், எழுத்தாளர்களுக்கும் இது ஓஹோ வாரம்.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க திறமையும் ஆற்றலும் வெளிப்படற வாரம். தொட்டதெல்லாம் துலங்கும். வராத பணம் வந்து சேரும். வீட்டுல மகிழ்ச்சிக்கும் குறைவிருக்காதுன்னாலும், உங்க மகன் அல்லது மகளுக்கு லேசான உடல் நலக் குறைவு வரலாம். மனைவி உடல் நலத்துலேயும் அக்கறை செலுத்துங்க. கலைஞர்களுக்குப் புகழ் கூடும் வாரம் இது. புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். வர்த்தகத் துறையினருக்கு லாபகரமான நேரம். பார்ட்னர்ஸ் விஷயத்துல மட்டும் கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்க அந்தஸ்தும் கௌரவமும் உயரும் வாரம் இது. வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கித் தள்ளுவீங்க. பொருளாதார நிலைமை தாராளமாகவே இருக்கும். கொடுக்கல் வாங்கல் சீராவே இருக்கும். நண்பர்கள் சமயத்துல உதவுவாங்க. வீட்டுல மகிழ்ச்சிக்குக் குறையிருக்காதுன்னாலும் பெற்றோர் உடல் நலத்துல கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

விளையாட்டுத் துறையினருக்குப் பிரமாதமான வாரம் இது. பரிசும் பாராட்டும் குவியும். பொதுவாவே இந்த வாரம் உங்களுக்கு ஆதாயமாவே இருக்கும். பணப் பிரச்னையோ, வேறொரு பிரச்னையோ இருக்காது. மனைவி வழில சில ஆதாயங்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கு. சில புதிய பொருள்கள் வாங்குவீங்க. உபயோகமான பொருட்களோட கூட, சில ஆடம்பரமான பொருள்களும் வாங்குவீங்க. புதிய மனிதர்கள் விஷயத்துல எச்சரிக்கையா நடந்துக்க வேண்டியது அவசியம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க நல்ல எண்ணங்கள் கண்டிப்பா நிறைவேறும். வீட்டுல மகிழ்ச்சிக்களை கட்டும். கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடந்துக்கிட்டீங்கன்னா, முரண்டு பிடிக்கறவங்க கூட உங்க ஆதரவாளரா மாறிடுவாங்க. பெண்களுக்கு உடம்பு கொஞ்சம் படுத்தும். மருந்துச் செலவு கூட வரலாம்! ஆபீஸ் ரீதியா சிலர் வெளியூர் போய் வரவேண்டி இருக்கலாம். சிலருக்கு வீடு, மனை வாங்கற யோகம் இருக்கும். புண்ணியத் தலங்களுக்குப் போய் வரும் வாய்ப்பு சிலருக்குக் கிடைக்கும். மொத்தத்துல இது பிரச்னை இல்லாத வாரம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க நிர்வாகத் திறமை, சாமர்த்தியம் கொடி கட்டிப் பறக்கும். எதிரிங்க பணாலாயிடுவாங்க. பதவி உயர்வு காலதாமதமில்லாம கிடைக்கும். வீட்டுல கல்யாணப் பேச்சு வார்த்தை நடக்கும். எதிர்பாராத இன்ப அதிர்ச்சி ஒண்ணு கண்டிப்பா கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள் ஆதாயம் தரும். பணப் பிரச்னை இருக்காது. நாய், தேன் மாதிரியான ஜீவராசிகள் விஷயத்துல மட்டும் எச்சரிக்கையா இருக்கணும்.



விருச்சிகராசிக் காரரான ஷாலினிக்குப் புகழ் கூடும் வாரமாம்! புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுமாம்!

அக்னிசர்மா பக்கம்

20 குறையொ

மஹாபாரதம் ஒரு சாந்த கிரந்தம். பெரிதாக இருப்பதனாலேயும் பளுவாக இருப்பதனாலேயும் அதற்கு மஹாபாரதம் என்று பெயர். பெரிய கிரந்தம்! லட்சம் சுலோகம் அமைந்திருக்கிறது அதிலே. பளுவான விஷயங்கள் நிறைய இருக்கின்றன. மூளையை வருத்தி தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்! அதனால் அவற்றை ரொம்ப சிரமப்பட்டுத் தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

'மஹாபாரதம் கேட்டாயா?' என்று ஒருத்தரிடம் கேட்டபோது 'கேட்டேன்' என்றார்.

'விஷ்ணு சஹஸ்ரநாமம் கேட்டாயா?' என்றபோது, 'சஹஸ்ரநாமமா? கேட்கவில்லையே!' என்று பதில் சொன்னார்!

சரி, அது போனால் போகட்டும், 'பகவத் கீதை கேட்டாயா?' என்ற போது 'அதுவும் கேட்கவில்லை' என்றார்! இப்படியே, யக்ஷ பிரச்னம், சனத்சுஜாதீயம், விதுர நீதி... எதுவுமே கேட்கவில்லை என்று சொல்லி விட்டார்!

'பின்னே என்னதான் கேட்டீர்?'

'இவன் அவனை அடித்தான். ஒருத்தருக்கொருத்தர் சண்டை நடந்தது. இத்தனை பேர் மாண்டார்கள்...' என்றார்.

இதைச் சொல்வதற்கா மகாபாரதம்!? அதெல்லாம் கதை- உட்கார வைப்பதற்காக. கதை சொன்னால்தானே நாம் உட்காருகிறோம்! இல்லையானால் சிரமம். புத்தி ரொம்ப சிரமமான விஷயத்தை கிரஹிக்காது. ஒரு கதையைச் சொன்னால்தான் உட்கார வைக்கலாம். அதற்கப்புறம் நாம் கேட்க வேண்டிய விஷயங்கள்- சனத் சுஜாதீயம், விதுர நீதி, யக்ஷ பிரச்னம், பகவத் கீதை, சஹஸ்ரநாமம்...

இதைக் கேட்காமல் கதையை மட்டும் கேட்டோமானால் கரும்பைப் பிழிந்து சாறை தூரக் கொட்டிவிட்டு வெறும் சக்கையை மெல்லுகிற மாதிரிதான்!

சாரதமமான விஷயத்தைச் சொல்வதற்குத்தான் கதையே வந்தது. அப்படி உத்தமமாக இருக்கும்படியான கிரந்தம் மகாபாரதம். ஒரு கதைக்குள் பல கதைகள் அதிலே உண்டு. ஒன்றைக் கேட்டுக் கொண்டேயிருக்கையிலே இன்னொரு கதை வந்து விடும். அந்தக் கதைக்குள்ளே இன்னொரு கதை; அந்தக் கதைக்குள்ளே இன்னொன்று! சொல்கிறவர் பாடு திண்டாட்டம்! எதற்காக இதை ஆரம்பித்தோம் என்று புரியாது! அரண்யத்திலே (காட்டிலே) கொண்டு போய்க் கண்ணைக் கட்டி விட்டமாதிரி இருக்கும். பல தர்மங்கள், புத்திக்கு எட்டாத விஷயங்கள் எல்லாம் மகாபாரதத்திலே இருக்கின்றன.

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்- இதனுடைய சாரத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மகாபாரதத்தைத்தான் பார்க்க வேண்டும். இந்த நான்கு வித புருஷார்த்தங்களும் இவ்வளவு தெளிவாக வேறு எங்கேயும் காட்டப்படவில்லை.

இன்னொரு பிரமாணமானது- மஹாபாரதத்தில் எது இருக்கிறதோ அதுதான் மற்றெங்கிலும் இருக்கிறது. 'இதில் இல்லாதது மற்றெங்கிலும் இல்லை' என்ற பெருமை மகாபாரதத்துக்கு.

இந்த மஹாபாரதத்தினுடைய பூர்த்தி ஹரிவம்சத்திலே வந்து முடிகிறது.

எத்தனையோ தர்மங்கள், விஷ்ணுவினுடைய கீர்த்தி அந்த ஹரிவம்சத்திலே வருகிறது. அதிலே 159வது அத்தியாயத்திலே ஒரு கதை: விஷ்ணுவினுடைய பெருமையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது அந்தக் கதை.

ஹஸ்தினாபுரத்திலே துரியோதனன் விசேஷமாக இருந்து கொண்டிருக்கிறபோது ஒரு பெரிய யக்ஞம் பண்ணுகிறான்.

யக்ஞம் பண்ணினால் அந்தக் காலத்தில் தேவதைகளெல்லாம் இறங்கி வருவார்கள். அதுதான் பலன்! 'இந்திரனைப் பார்த்திருக்கிறாயா?' என்று கேட்டால், எல்லோரும் அந்தக் காலத்திலே பார்த்திருக்கிறார்கள்! யக்ஞத்திலே போய் உட்கார்ந்தவர்களெல்லாம் பார்த்திருக்கிறார்கள்.

'இந்திரா!' என்று கூப்பிட்டால் அவன் இறங்கி வருவான்.

வஜ்ரி என்று பெயர் அவனுக்கு.



ன்றுமில்லை

கையிலே வஜ்ராயுதத்தோடு அவன் இறங்கி வருகிறபோது யக்ஞத்தை சேவிப்பார்கள். எல்லோருக்கும் இது தெரிகிறது. இந்திரனை எல்லோரும் பார்க்கிறார்கள். அப்படி நேரே வருகிறான். ஏனென்றால் மகா சிஷ்டர்கள், மகான்கள், மஹரிஷிகள் யக்ஞம் பண்ணுகிறார்கள். அதனாலே அந்த யக்ஞத்துக்கு தேவதைகளால் வராமலே இருக்க முடியாது!

இப்போது நம்மாலே மந்திரம் சொன்னாலும் அந்த தேவதைகளைப் பார்க்க முடிகிறதா என்றால், இல்லை! அவர்களை மாதிரி, நம்மிடம் அனுஷ்டானம் இல்லை...

இந்த அனுஷ்டானம் எவ்வளவு முக்கியம் என்பதை உபநிஷத் சொல்கிறது. சாந்தோக்கியத்திலே ஒரு நிகழ்ச்சி – உஷஸ்தி என்று ஒரு மஹரிஷி. அவர் பல இடங்களில் தன் பத்னியோடு சஞ்சாரம் பண்ணிக் கொண்டேயிருக்கிறார். அவர் ஒரு வழியாக போய்க் கொண்டேயிருந்த போது ரொம்ப பசி எடுத்து விட்டது. ஏகமாக பசி! பிராணனே போய்விடும் போலிருக்கிறது.

அப்போது ஒரு குதிரையை வைத்துப்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பிழைக்கிறவன் - வண்டி ஓட்டுகிறவன் - அந்தக் குதிரைக்குக் கொள்ளு வறுத்து வைத்திருக்கிறான். வறுத்த கொள்ளை ஒரு பையிலே போட்டு - தோல் பையிலே போட்டு, எடுத்தெடுத்து இவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்!

எடுத்தெடுத்து எச்சில் பண்ணி சாப்பிடு கிறான்! கையை உள்ளே விடுகிறான்; எடுத்து வாயிலே போடுகிறான். திரும்ப கையை உள்ளே விடுகிறான்! இப்படி எச்சில் பண்ணிக் கொண்டிருக்கிறான்.

அவனிடம் போய் 'தேஹி' என்றார் மஹரிஷி! 'எனக்குக் கொடு' என்றார்!

'இது எச்சில் ஆயிற்றே. உங்களுக்குத் தரலாமா?' என்றான் அவன்.

'பரவாயில்லை! கொண்டு வா அதை!' என்றார்.

கொள்ளை அவன் கொடுத்தான். கொடுத்தவுடனே, உஷஸ்தியின் பத்னி பக்கத்திலே நிற்கிறாளே... அவளுக்கும் பசிக்கும் அல்லவா - இவருக்குப் பசிப்பது போல. அதனால் பாதி கொள்ளைத் தம் பத்னியிடம் கொடுத்துவிட்டார் மஹரிஷி.



அவள் எவ்வளவு பதிவிரதை பாருங்கள்!... இந்த மாதிரி பசி தன் பர்தாவுக்கு வந்து விட்டால் மறுபடியும் இந்த மாதிரி கொள்ளு கிடைக்குமா வேறு இடத்திலே...? 'என்ன கிடைக்குமோ கிடைக்காதோ' என்று யோசித்தவள், தனக்குக் கொடுத்த பங்கை முந்தானையிலே முடிச்சுப் போட்டு வைத்துக்கொண்டு விட்டாள்! மறுபடியும் தன் பர்தா கேட்டால் கொடுக்கலாம் என்று தான் சாப்பிடாமல் முடிந்து வைத்தாள்.

இவர் தம் பங்கைச் சாப்பிட்டு விட்டார். சாப்பிட்ட பிறகு மறுபடியும் சற்று தூரம் நடந்து போனார்கள். போனவுடனே அவரைப் பார்த்து, "சுவாமி! பசிக்கிறதா? பசித்தால் அந்தக் கொள்ளு வைத்திருக் கிறேன் - அதைத் தருகிறேன்" என்றாள்.

"சீ! அதை எதற்கு முடிச்சுப் போட்டு வைத்துக் கொண்டிருக்கிறாய்? தூரப் போடு! எச்சிலைப் போய் முடிச்சுப் போட்டு வைத் துக் கொண்டிருக்கிறாயே!" என்றார்.

எச்சில் பண்ணி சாப்பிட்டுக் கொண்டி ருந்த குதிரைக்காரனிடம் அதை வாங்கிச் சாப்பிட்டார்... இப்போது 'அதைத் தூரப் போடு என்கிறாரே!' அதுதான் தர்ம பத்னிக்குப் புரியவில்லை.

ஆனால் அதிலே ஒரு தர்ம சூட்சுமம் அடங்கியிருக்கிறது.

பிராணன் போய் விடுகிறது, அடுத்த க்ஷணம் நிற்காது, என்று ஒரு நிலைமை வந்து விட்டால் அதை, அந்தப் பிராணனை, ரக்ஷிக்கிற பொறுப்பு நமக்கு வந்து விடுகிறது. அதை மாய்த்துக் கொள்கிற உரிமை நமக்குக் கிடையாது. அப்போது எச்சிலைப் பார்க் காதே! பிராணனை ரக்ஷிக்க வேண்டிய சமயத்திலே எதையும் பார்க்காதே, சாப்பிடு என்கிற தர்மத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

கஷ்டங்களைச் சொல்லிக் கொள்ளாமல் யாராலும் இருக்க முடியாது. வெளிப்பட சொன்னாலே அதில் ஒரு நிம்மதி பிறக்கிறது. கண்ட இடத்தில் போய்ச் சொல் லிக் கொள்ளாமல்- கேட்பவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார் களோ என்றில்லாமல் - பக வானிடம் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்ளலாம். அவன் கிருபா சமுத்திரமாயிருந்து நாம் கேட் காமலே கஷ்ட நிவிருத்தி தந்தாலும் சரி, அல்லது பலனைத் தரும் பலதாதா என்கிற முறையில் நம் பாவத்துக்குத் தண்டித்தே தீருவான் என்றாலும் சரி, அல்லது கஷ்டத்தை மாற்றாமலே அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவத்தை நமக்குத் தந்தாலும் சரி, அவனிடம் முறையிட்டுக் கொள்வதே ஓரளவு சாந்தி.

நன்றாக உட்கார்ந்திருக்கிறபோது எச்சிலை சாப்பிடாதே; இந்த மாதிரி பிரா ணன் போகிற தருவாய் என்று ஒன்று ஏற் பட்டதானால் அந்தச் சமயத்திலே சாப் பிட்டு விடு.

சாமான்யமாக லோகத்திலே என்ன வாதம் வரும்...?

'உஷஸ்தியே எச்சிலைச் சாப்பிட்டார். நாம் சாப்பிட்டால் என்ன?' என்ற வாதம் எழும். ஆனால் அப்புறம் அவர் ஒரு காரி யம் பண்ணியிருக்கிறார். அதை நாம் பண்ண முடியுமா?

இந்த மாதிரி எச்சிலை வாங்கிச் சாப்பிட் டதற்காக அவர் பல காலம் உபவாசம் இருந்

தார். எத்தனையோ காலம் உபவாசம் இருந்து, உடம்பை வருத்தி சிரமப்பட்டார் - இப்படிச் சாப்பிட்டதற்குப் பிராயசித்த மாக!

அவர் பண்ணிய ஒன்றை மட்டும் நம்மால் பண்ண முடியும். இன்னொன்றையும் பண்ண முடியுமா? 'பல காலம் உபவாஸம் இருந்து சிரமப்படு' என்றால் யாரால் முடியும்!

அப்படிப்பட்ட தவ சிரேஷ்டர் உஷஸ்தி. அவர் அங்கேயிருந்து ஜனக மகாராஜாவின் ராஜ்யத்துக்குப் போனார். அங்கேயொரு பெரிய யக்ஞம் நடந்து கொண்டிருந்தது. போய் நின்று அவர் கேட்கிறார் - "இப்படி ஒரு மந்திரம் சொல்லி யக்ஞம் பண்ணுகிறீர்களே... இந்த மந்திரத்துக்கு அர்த்தம் தெரியாமல் சொன்னால் தலை வெடித்து விடுமே?"

எல்லோரும் நடுநடுங்கிப் போய் விட்டார்கள். எழுந்து ஓடி வந்து அவர் திருவடியிலே விழுந்து, "சுவாமி! உங்களைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். இத்தனை நாட்களாக நீங்கள் கிடைக்கவில்லை. அதனால் உங்களுக்குப் பதில் வேறு ஒருத்தரை வைத்து நடத்தினேன். தாங்கள் வாருங்கள்!" என்று அழைத்தான் ஜனகன்.

அவரும் வந்து உட்கார்ந்து கொண்டு யக்ஞத்தை நடத்தினார்.

அப்பேர்ப்பட்ட மஹரிஷி அவர் - உஷஸ்தி. பிராண தாரணத்துக்காக அவர் சாப்பிட்டதைப் போல் வேண்டுமானால் நாம் சாப்பிடலாம். அவர் செய்கிற மற்ற காரியங்களைச் செய்ய முடியாது.

மகான்களுடைய ஆசாரத்தை நாம் கவனிக்க வேண்டும். எதற்காக ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். ரொம்ப ஜாக்கிரதையாய் இருந்து பார்க்க வேண்டும்.

ஜனகர் உஷஸ்தியைக் கொண்டு யக்ஞம் செய்தது போல் துரியோதனாதிகள் எல்லோரும் ஒரு யக்ஞம் பண்ணினார்கள். வாசுதேவன் துவாரகா நகரில் இருக்கிறபோது அந்த பகவானை - விஷ்ணுவை உத்தேசித்து, ஹரியை உத்தேசித்துப் பண்ணினார்கள்.

ஹரிவம்சம் சொல்லும்படியான உயர்ந்த கதை இது.

யக்ஞம் பண்ணுகிற சமயத்தில் பல மகான்கள் அந்த யக்ஞ வாடிகைக்கு வந்திருந்தார்கள். யக்ஞம் பூர்த்தியாக முடிந்து விட்டது. ஆனால் கிருஷ்ணனை அந்த இடத்துக்குக் கூப்பிடவில்லை!

(தொடரும்)

அருள்வாக்கு

ஆனால் வாஸ்தவத்தில் நான் ஈசுவர பக்தி என்று சொல்வது நம் கஷ்ட நிவிருத்திக்காகப் பிரார்த்திப்பதை அல்ல. அல்லது நமக்கு சந்தோஷ வாழ்வைத் தந்தவனுக்கு நன்றியாக பக்தி செலுத்த வேண்டும் என்றும் சொல்லவில்லை. நான் அப்படிச் சொன்னால், "மரம் வைத்தவன் ஜலம் ஊற்றத்தான் வேண்டும். நம்மைப் படைத்தவன் நமக்கு நல்வாழ்வு தரத்தான் வேண்டும்! அது அவன் கடமை. இதற்கு என்ன நன்றி?" என்று யாராவது ஆட்சேபிக்கலாம்.

ஆகவே இதற்கெல்லாம் நான் பக்தியைச் சொல்லவில்லை. பின் எதற்குச் சொல்கிறேனென்றால் இப்போது கஷ்டம், சந்தோஷம் என்ற இரண்டு வார்த்தைகளைச் சொன்னேனே, இந்த இரண்டுமே மனசை ஆட்டுபவைதாம்.

நாம் கஷ்ட நிவிருத்திக்காக ஸ்வாமியிடம் போனாலும் சரி, அல்லது சௌகரியமாக இருக்கிறோம் என்று நன்றி காட்டப் போனாலும் சரி, அவரை நினைக்கிற பழக்கம் வலுக்க வலுக்கத் தானாகவே இந்தக் கஷ்டம்-சௌக்கியம் ஆகியவற்றைப் பற்றியே நினைப்பதிலிருந்து நம் மனம் விடுபடும். அவர் எப்படிநடத்துகிறாரோ எப்படி நடத்திவைக்கட்டும் என்று பாரத்தை அவரிடமே தள்ளிவிட்டு விச்ராந்தியாக இருக்கிற மனோபாவம் உண்டாகும். ஏதோ ஓர் ஆனந்தமும் சாந்தமும் மனசில் படரத் தொடங்கும். இதுவே நம்மை அமர நிலையில் சேர்ப்பது; ஓயாமல் குறையுள்ள நாம் மாறாத நிறைவாக நிறைவதற்கு வழி செய்வது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

எஸ். சங்கரநாராயணன்

தீயினாற் சுட்ட மண்

உலகநாதன் ரொம்ப நிதானமான மனுசன். வாலிப வயசில் எப்படி இருந்தாரோ தெரியாது. ஊரெல்லையில் இன்றைக்கும் அவர் வடித்த பொம்மை – ஐயனார் உருவச் சிலை இருக்கிறது. அடேடே அந்தக் கண்களின் உக்கிரம்... கையில் வீச்சரிவாள். ஒரே வீச்சு. எதிராளி தலை துண்டாத் தெறிச்சி விழும்... என்று பயமுறுத்துகிற அளவில் இருக்கும். இத்தனை நிதானமான மனுசன் வாலிபப் பிராயத்தில் வேகமும் பரபரப்புமாய் வளைய வந்திருப்பார் என்று தோன்றியது.

எல்லாம் அலையடங்கி, இப்போது நிதானப்பட்டிருந்தது. அவர் ஞாபகமாய் இன்னும் ஊரில் எத்தனையோ சுடுமண் சிற்பங்கள். குதிரைகள். மான்கள். ஆடுகள். மாடுகள். பசுவும் கன்றும்... அவற்றின் வண்ணக் குழைவுகளே ஆச்சரியப்படுத்தும். மேல் சட்டை போடாத, முண்டாசு கட்டாமல் வெளியிறங்காத கிராமத்து மனுசனுக்குள் ஒரு கலைஞன் இருந்து அவரை உசுப்பி ஆட்டுவித்துக் கொண்டிருந்தான் போலும். சிறு போகம் விளைய, சாப்பாட்டுக் கவலை எதுவும் கிடையாது. கோடையோவெனில், வாசல் வேப்ப மரத்தடிக் காற்றில் படுத்து என்னமாச்சும் பாட்டெடுப்பார். அந்தக் கால பாகவதர் பாட்டு. வெறும் கேள்வி ஞானம். சுருளி எப்பவாவது வந்தால் மரக்காலைத் தட்டித் தாளமும் சேர்ந்து கொள்ளும். தாளம் கொஞ்சம் முன்னப் பின்ன இருக்கும். அதைப் பத்தி என்ன? சந்தோசம் முக்கியம் இல்லையா?

மகனுக்குக் கல்யாணம் பண்ணி பேரனைப் பார்த்ததும் அவருக்கு சந்தோசம் தலைகால் புரியவில்லை. எப்பவும் பேரனைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு அலைந்தார். பேரனை யாரும் ஒரு வார்த்தை சொல்லிடப்படாது. கண்ட மேனிக்குக் கோவம் வந்துரும். அவர் பேரனிடம் உயிரையே வைத்திருந்தார். அவனது சிறு நடை, பேச்சு, சிரிப்பு எல்லாமே அவருக்கு கனவேடிக்கையாய் இருந்தது. 'பாட்டையாவுக்கு வாலிபம் திரும்பிட்டாப்பல இருக்குதே!' என்று ஊரில் கேலியடித்தார்கள்.

அதுவரை ஆலமரச் சருகுகளாய் உலர்ந்து உதிர்ந்த அவரது பொழுதுகள் அர்த்தமுள்ளதாக அலங்கரிக்கப்பட்டு விட்டாற்போலிருந்தது. உள்ளே சந்தோசம் நுரைத்துச் சுழித்தது. பேரன் முகத்தில் அவர் தன் முகத்தைக் கண்டாரோ என்னமோ? யாராவது வீட்டுக்கு வந்த விருந்தாளி அவரிடம், 'யோவ் பரவால்லியே. பயபுள்ள உம்ம மாதிரித்தாவே இருக்கான்...' என்றால் அவர் முகம்தான் எவ்வளவு மலர்ந்து விடும். வாயில் யாரோ சக்கரையைக் கொட்டினாற் போல இருக்கும். கண்ணில் வரிகள் விரிந்து சிரிக்கும். உலகம் மறந்து பேரனே உலகமாய்க் கழிந்தது காலம்.

பையன் வளர வளர, கதைகள் சொன்னார். அவரிடம் ஏராளமாய்க் கதைகள் இருந்தன. அவன் கண் விரியக் கேட்கக் கேட்க, அவரிடம் இன்னும் இன்னுமாய்க் கதைகள் பெருகின. கற்பனையின் கரைகள் விரிந்து கொடுத்தன. பழைய கதைகள். புதிய கதைகள். பழைய கதைகளை இட்டுக்கட்டிய புதிய கதைகள். பழைய கதைகளில் புதிய திருப்பங்கள். புதிய முடிவுகள். அந்த முடிவுகளை அவன் யூகிக்க முடியாதவையாக அமைத்துக் கொள்ள அவர் தனக்குள் சுவாரஸ்யமாய் முயன்றார்.

தாத்தாவின் உடல்சூடு அவனுக்கும் வேண்டியிருந்தது. வாய்விரிய ஆச்சரியமாய் விரலைச் சப்பியபடி மூக்கு ஒழுக அவன் கேட்டுக் கொண்டிருக்கிறபோது, அவருக்கு உலகம் மறந்திருந்தது. உலகம் துச்சமாய் இருந்தது.

அப்பா ஒருநாள் அவனைத் தூக்கிப்

போய் ஐயனாரைக் காண்பித்துத் தந்தார்.
"உங்க தாத்தா செஞ்ச சிலைடா இது!"
"ஹா...!" என்றான் உலகநாதன்.
"எத்தனாம் பெருசு இந்தச் சிலை. அந்தக் குதிரையே எத்தனை உயரம்? இதுல இந்த ஐய னாரு ஒரே தவ்வாத் தவ்வி எப்படி உக்காந்தாரு? ஐய னார் பெரிய ஆளாத்தான் இருக்க ணும்!"

"ஆமா பெரிய ஆள்தான்... அவர் ஊருக்கே காவல் தெய்வம்லா?" என்றார் அப்பா.

"இன்னிக்குங்கூட ராத்திரில மக்கா. எப்பவாச்சும் பத்துப் பன்னிரண்டு மணி வாக்குல ஒண்ணுக்கு நெருக்கிரிச்சின்னா என்னியவோ உங்க தாத்தாவையோ எழுப்பித்தான் வாசலுக்கு வரோணும். கேட்டியோடே?"

"ஏன் அப்பிடி?" என்றான் உலகநாதன்.

"ராத்திரி ஐயனாரு இந்தக் குதிரைல டக்டக் டக்டக்னு ஊருக்குள்ள உலா வரு வாராக்கும்... நானே வீட்டுக்குள்ள படுத்துக் கிடக்கறச்ச முழிப்பு வந்தா ஐயனாரு வர்றதைக் கேட்டிருக்கேன்."

பையனுக்கு உற்சாகமாகி விட்டது.

"ஏய்யா இன்னிக்கு நான் உறக்கம் முழிக்கப் போறன்... ஐயனார் வருவாரா பாக்கட்டும்" என் றான்.

"பாரு பாரு! அப்பா சிரிக்காரு. அவ ருக்குத் தெரியாதா? எந்த ராஜா எந்தப் பட்



டணம் போனாலும் நம்ப சாமி (உலகநாத னைத் தாத்தா பேர் சொல்லி வீட்டில் யாரும் அழைப்பதில்லை) ஒம்பது ஒம்பத ரைக்கெல்லாம் சாமியாடிறாதா?"

'பயபுள்ள பரவால்ல. தைரியமான ஆள் தான். ஐயனாரோட அந்தக் கண்ணைப் பாத்து பயந்தருவானோன்னுதான் காட்டிப் பாத்தது... யாரோட பேரன்..' என்றிருந்தது. தாத்தா இன்றைக்கும் காடு கழனிக்குப் போக நேர்ந்தால் ராத்திரி நேரம் தனியாய்த் தான் போவார் வருவார். கையில் டார்ச் எதுவும் வைத்துக் கொள்ள மாட்டார். இடுப்பின் பின்பகுதியில் ஒரு கத்தி எப்பவும் இருக்கும். இதுவரை அவர் அதைப் பயன் படுத்த நேர்ந்ததில்லை. நொங்கு வெட்டவும்,



"விஷய ஞானமும் இல்லாம, அனுபவ மும் இல்லாம திடுதிப்புனு பதவிக்கு வந் துட்டா இப்படித்தான்..."

"ஏன், என்ன ஆச்சு?"

"மண் அரிப்புக்கு என்ன செய்ய லாம்னு யோசிக்க மாநாடு நடத்தினா அதுல போய் 'அரிப்பு மருந்து வாங்கி இலவசமா விநியோகிச்சுட வேண்டியது தான்'னு நம்ம தலைவர் பேசித் தொலைச்சிருக்கார்!"

— சீர்காழி வி.ரேவதி

பதனிவெட்டவும் இலையைத் தோது பண்ணி தொன்னை தைக்கவும் அதை வெளியே எடுத்துப் பார்க்கலாம்.

தாத்தா சொன்ன கதைகளில் உலகநாத னுக்கு அலிபாபா கதை ரொம்பப் பிடிக்கும். 'டக்டக் டக்டக்' குதிரை போறதையும் வர்ற தையும் தாத்தா அருமையாச் சொல்லுவாரு. அவனுக்கு சுயமாய்க் கற்பனைகள் இருந் தன. அந்தக் குதிரை மீதேறி அலிபாபா பறக் கறது நம்ப ஐயனார் பறக்கறாப்ல இருக்கும் அவனுக்கு. ஐயனார்தான் அலிபாபா. யாருக்கும் தெரியாமல் அவன் ஐயனாருக்கு அலிபாபான்னே பட்டப் பேர் வெச்சிருக் கான். அப்பாவுடன் குளிக்க, வயல் வரப்புப் பாக்கன்னு அவன் வெளியே போவான். தாத்தா கூடப் போனால் தோளில் தூக்கி வைத்துப் போவார். வேடிக்கை பார்க்க ரொம்ப நல்லாருக்கும். உயரத்து மரக் கொப் புகளை ஒடித்துக் கொண்டே போகலாம். ஏ அப்பா நா எவ்ளோ ஒசரம்னிருக்கும். சந்தோசமா இருக்கும். அப்பாவைத் தூக்கச் சொன்னா. 'நடந்து வந்தா வா. இல்லாட்டி வீட்லயே கெட'ன்னுருவாரு.

ஊரை விட்டு எந்த எல்லை தாண்டிப் போனாலும் ஐயனாரைத் தாண்டித்தான் போகணும். பஸ் வரும் வழி அதுதான். எந்த தூரத்தில் இருந்தும் ஐயனாரைப் பார்த்த படியே அவன் போவான். அப்பாவோ தாத் தாவோ என்னவாச்சும் பேசிக் கொண்டே வருவார்கள். அவன் மனம் பாதி ஐயனா ரிடமே இருக்கும். 'அலிபாபா...' என்று கத் திக் கையாட்டத் தோணும். அதிலும் அந்த அலிபாபா காட்டுக்குள்ள வந்து குகை முன் னால நின்னுக்கிட்டு குகையைத் திறக்க ஒரு மந்திரம் சொல்வாம்பாரு. திறந்திடு சீசேம்... அதைக் கேட்கக் கேட்க அவனுக்கு அத் தனை பரபரப்பாய் இருக்கும்.

தாத்தா அந்தக் கட்டத்தை ரொம்ப நல் லாச் சொல்வாரு. "குகைக் கதவு திறந் திச்சா... மக்கா அந்தக் காடே ஒர்ரே வெளிச்சமாயிட்டு. உள்ள அவன் என் னென்ன வெச்சிருக்கான் – தங்கம் வைரம் மாணிக்கம் மரகதம்... அத்தனையும் ஒண்ணு சேந்தா மக்கா எத்தனை வெளிச்சம் இருக் கும். மனுசன் நொழைய முடியாது. கண்ணே கூசிரும். அவனுக்கு அப்பவே கண் கூசுறாப்ல இருக்கும்."

"தாத்தா நீ ஏன் இப்ப சிலையே செய்யற தில்ல?"

"கைல ஓட்டமில்லடா கண்ணா!" என்றார் தாத்தா.

இப்பவும் திருவிழாக் காலங்களில் வேண்டுதல் என்று தாத்தாவிடம் சுடுமண் சிற்பம் கேட்டு ஆள் வந்து போகிறது. உலக நாதன் மறுத்து விடுகிறார். 'முன்னப் போல முடியலய்யா' என்கிறார். 'கைல நடுக்கம் வந்திட்டில்லா. சரியா வராது' என்று விடு கிறார். அப்படிக் கேட்டு விட்டுப் போன நாட்களில் தாத்தா மனசில் தமது பழைய காலங்களை அசைபோடுவார். வெளியே சிறு வெளிச்சம் பூசிய முகம் அதைச் சொல்லும். ஆனாலும் பக்கத்தூர் அடுத்தூர் என்று எத்தனை சிற்பங்கள் பண்ணிய கை எப்படி ஓய்வெடுத்துக் கொண்டது என்று அவருக்கே ஆச்சரியம்.

ஆ! பேரனிடம் மனம் திரும்பி விட்டது.

என் கவன எல்லைகள் மாறி விட்டன... என் உலகமே இவன் காலடி நிழலில் அடங்கி விட்டது. பிள்ளையா இது. கடவுளய்யா கடவுள். அவர் கண்கள் பனித்தன. எப்படி இத்தனை பாசம் வைத்தோம் அவருக்கே ஆச்சரியம். கிழவி இறந்து போனதும் அவர் யாருடனும் மனம் ஒட்டாமல் இருந்தார். மகனிடம் கூட ஒட்டுதல் குறைந்து விட்டது. மருமகள் முகத்தை இன்று வரை நேராய் நிமிர்ந்து பார்த்ததில்லை. ஏனோ தயக்கமாய் இருந்தது. ஆனால் இந்தப் பயல் – பேரப் பிள்ளை பிறந்த அந்த நாள் ஆகாகாகா... அவர் வாழ்வின் பொன்னாள். மனம் மிதந்து கொக்கரித்தது. விடியலை அறிவிக்க கூரையேறி தொண்டை விரைக்கக் கூவும் சேவலாய்த் தன்னை உணர்ந்தார். அவர் முகத்தின் நெகிழ்ச்சி கண்டு மகனுக்கும் மருமகளுக்கும் சிரிப்பு.

பையனைப் பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிப் போய் அவரே கூட்டி வருவார். வெயில் கணக்கு உண்டு. சரியாய் ஒரு நிமிடம் இரண்டு நிமிடம் முன்னதாகவே பள்ளிக்கூட வாசலில் காத்திருப்பார். 'தாத்தோவ்' என்று ஓடிவரும் பயலிடம் கொடுக்காப்புளி என்று எதுனாச்சும் மடியிலிருந்து எடுத்துக் கொடுப்பார். உரிமையோடு யானை மேல அம்பாரி போல. அவன் தோளில் ஏறிக் கொள்வான். வயதாக ஆக அவன் உடம்பு அவரால் தூக்க முடியாத அளவு கனத்தது. அவருக்கும் வயதாகவில்லையா என்ன? ஆனாலும் இறங்கு என்று சொல்ல மனம் வராமல் தூக்கித் திரிவார். "பிள்ளையக் கெடுத்து வெச்சிட்டீரு!" என்று மகன் திட்டுவான்.

"இவன் கெடக்கான் வெறும்பய." என்று அலட்சித்து விடுவார்.

சாதாரணமாகவே உலகு அத்தனை ஆரோக்கியமாய் இல்லை. பூச்சியடித்த நெற்பயிர் மாதிரிதான் இருப்பான். தலை முடி அடர்த்தியாய் இல்லாமல் வழுக்கை வழுக்கையாய் இருக்கும். முடிகள் குச்சி குச்சியாய் நீட்டிக் கொண்டிருக்கும்.

ஊரெங்கும் காலரா இருந்தது. தாத்தா அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவே பயந்தார். பிள்ளைகள் வயிற்றுப்போக்கால் சுருண்டு சுருண்டு விழுந்தார்கள். நாலு நாள் அஞ்சு நாள் வயிற்றுநோவு. ஆறாவது நாள் பிள்ளை உசிரை விட்டது. அத்தனைக்கு வெயில் போட்டு மனுசனை வாட்டி வதைத்தது. இளநீரை விடாமல் குடிக்கச் செய்து மடி மீது உட்கார்த்தி வைத்துக் கொண்டார் தாத்தா. ஆனாலும் உலகநாதனுக்குக் காய்ச்சல் கண்டது ஒருநாள்.

இரவும் பகலுமாய்த் தாத்தா அவன் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டார். உள்ளூர் மருத்துவச்சி பத்தாது என்று, டவுனாஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு ஓடினார்கள். தாத்தாவின் முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை. ஐயோ இவன் இவருக்காகவாவது பிழைக்க வேண்டுமே என்றிருந்தது. எந்தச் சாப்பாடும் உடம்பில் ஏறவே இல்லை. வயிற்றுப்போக்கு கடுமையாய் இருந்தது. உடம்பே மெலிந்து சருகாய், கரும்புச் சக்கையாய் ஆகிப் போனான். அவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவனைப் பார்க்கவே நெஞ்சு விம்மி தாத்தா அழத் துவங்கினார். அவன் விழித்துக் கொண்டாலோ, அழுத சாயலே இல்லாமல், "எல்லாம் சரியாப் போகும்டா கண்ணு" என்று அவன் நெஞ்சை வருடிக் கொடுத்தார். எத்தனை எலும்புக்கூடாய்ப் போனான்.

"தாத்தா ஒரு கதை சொல்லு...!"

''என்ன கதை போ... கதைல்லாம் வேணா...''

"சொல்லு தாத்தா. திறந்திடு சீசேம்... அந்தக் கதை..."

"இப்பவா?"

"ஏன்?"

"சரி..." என்று தாத்தா அலிபாபாவின் திருடர்கள் அரண்மனையில் பிடிபட்ட பகுதியைச் சொன்னார். "ஒவ்வொரு பீப்பாய்க்குள்ளேயும் ஒரு திருடன் பாத்துக்க.

(தொடர்ச்சி 94-ம் பக்கம்)



''அந்தக் கட்சியில ரௌடிங்க துணையோடு தலைவருங்க கட்சி நடத்தறதா சொல்றீங்களே... உங்க கட்சியில எப்படி?'

''எங்க கட்சியில தலைவருங்க துணையோடு ரௌடிங்க கட்சியை நடத்துறாங்க!''

– கே. அனிதா

14 ஒரு காதல்

சரஸ்வதி தேவி குறுக்கிட்டாள்.

"அந்த இடங்கள் பூரா என்னை எல்லாருக்கும் தெரியும். இன்னிக்கு நாலரை மணிக்கு நான் காயல் ஓரத்துக்கு வர்றேன். அங்கே வந்து பாருங்க. இன்னிக்கு சௌமினியும் வேற என் சொந்தக்காரப் பெண்கள் சிலரும் கப்பல்களைப் பார்க்க வருவாங்க. நான் நேரத்துக்கு வந்துடுவேன். வருவீங்க இல்லே?"

இப்படிச் சொல்லி விட்டு புத்தகத்துக்குள் இருந்து அழகான ஒரு சிறிய வெள்ளைக் கவர் எடுத்துத் தந்தாள். தரும்போது தேவி அறிந்தோ அறியாமலோ கண்டு விரலால் என் விரலை மெதுவாய் ஒருமுறை தொட்டாள்.

யாருக்கும் தெரியக்கூடாது என்று சொல்லியவாறு மெதுவாக என் இதயத்தில் ஒரு முத்தம் தந்தது போல.

புன்முறுவலோடு நாங்கள் பிரிந்தோம்.

கடிதத்தை வழியில் ஒரு மர நிழலில் அமர்ந்து நடுங்குகின்ற கைகளினால் உடைத்தேன். திகிலோடு வாசித்தேன்.

தேவி எழுதியிருந்தாள்.

பிரியமுள்ள நண்பரே! நம்பிக்கை உண்டு. சிநேகம் உண்டு. தங்களை நம்பாமல் ஒன்றுமில்லை. மனிதனின் நிலையில்லா வாழ்வில் நம்பிக்கை இல்லாததால் தான் கதையைத் திருப்பிக் கேட்டேன்.

தங்கள் சகோதரிக்கு இதயபூர்வமான நல் வாழ்த்துக்கள். சகோதரிக்காவது வாழ்க்கையில் பிரவேசியுங்கள். சர்வ மங்களங்களையும் விழைகிறேன்.

அப்போது என்னை மறந்து விடாதீர்கள்.

வாழ்க்கைக் கடலில் நட்புறவின் பங்கை ஒன்றாய்க் காப்போம். அக்கரை எட்டுவோம் அந்த உதவிக்கு இதயம் நிறைந்த நன்றி.

என்னுடைய அன்றாட உணவு முறையைக் கேட்டுக் கொள்ளுங்கள். காலை எட்டு மணிக்குப் பால், 9 மணிக்கு வெண்ணெய் + மோர் + தயிர். ஒன்றரை மணிக்குச் சாப்பாடு.

இரவு எட்டு மணிக்கு ஆழாக்குப் பாலும் சியவனப் பிராசமும். இனி போதுமென்று சொல்வது மற்றொரு முட்டாள்தனம்.

என்னை மறந்து விடாதீர்கள். நான் வாழ்கையில் பிரவேசிக்க வேண்டும் என்று ஆசைப்படாதீர்கள். நான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று சொல்ல மாட்டேன். என்றால் ஒரேடியாக.

கடைசியாக ஓர் ஆசை.

ஆகாயத்தில் உல்லாசமாய்ப் பறக்கும் வானம் பாடிப் பறவையின் வாழ்க்கை. அதுவும் நஷ்டமாகலாம். அதற்குப் பிரார்த்திக்காதீர்கள். தங்கள் மீது நம்பிக்கை உண்டு.

சர்வ மங்களங்களையும் விழைந்தும் இடையிடையே நட்புக்கடிதங்களை வேண்டியும்!

பஷீரிக்கு உரிய
நல்லன்புடன்
தங்கம்.

பி.கு. பழைய பிரதி எனினும் எங்கிருந்தாவது "காதல் கடிதம்" என்ற புத்தகத்தை எனக்குப் படிக்கவாவது தர வேண்டும்.

கடிதங்களைத் திருப்பித் தர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கொளுத்தி விடுங்கள். அது போதும். அப்போது நம்பிக்கைக் குறைவின் கேள்வி வராது.

தேவி

வைக்கம் முகம்மது பஷீர்

தமிழில்: வையவன்

"காதல் கடிதம்" - வாசிக்கவாவது தர வேண்டும்...! எதற்காகவோ! கடிதங்களைத் திருப்பித் தர வேண்டாம்.

தேவியைப் பற்றிய திட்சண்யமான

சிந்தனை.

அப்படி நாலரை மணி ஆகும்வரை காத்திருந்தேன். வேறு எதுவும் செய்ய முடிய வில்லை. வேலை நெருக்கடி வேறு.

நிறையக் கடிதங்கள் பதில் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தன. இலக்கியவாதிகளின், ரசிகைகளின், ரசிகர்களின், போதாக்குறைக்கு வீட்டில் இருந்து அம்மாவின் கடிதமும்.

ஏற்கெனவே விளம்பரப்படுத்தி இருந்த புத்தகங்களை ஏன் வெளியிட வில்லை என்று கேட்கும் புத்தக வியாபாரிகளின் கடிதங்களும். எழுநூறு, எண்ணூறு ஆர்டர்கள் வந்து காத்திருக்கின்றன. இரண்டு பதிப்புகள் தீரும் காலமாய் விட்டது. ஏன் வெளியிடவில்லை!

யாருக்கும் சமாதானம் அனுப்பவில்லை. இடையில் என்னைக் காணப் பலர் வந்தனர். நான் ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமாம். ஒன்றும் இயலாது என்று சொல்லி அனுப்பினேன்.

மணி நாலரை ஆயிற்று. நான் புறப்பட்டுச் சென்றேன். சரியான நேரம். தேவி ஆஜராகி இருந்தாள்.

காயல் ஓரம் பூங்காவின் பக்கத்தில் உள்ள 'ரெப்ரெஷ்மெண்ட் ரூமி'ன் உள்ளே இருந்து தேவி இறங்கி வந்தாள். கறுத்த ஸில்க் ஸாரி. வெள்ளை ப்ளவுஸ். கையில் புத்தகங்கள்.


நான் கேட்டேன்.

"வந்து ரொம்ப நேரமாச்சா?"

"இல்லே. இப்போதான் வந்தேன்."

தேவிக்கு ஏதாவது கூல்டிரிங்க்ஸ் வாங்கிக் கொடுக்க வேண்டாமா? நான் பாக்கெட்டைத் தடவினேன். பர்ஸ் எடுத்து வர வில்லை.

"நான் இதோ வந்துடறேன்" என்று சொல்லியபடி குடையை தேவியின் பக்கத்தில் வைத்துவிட்டு திரும்ப ஓடி அறைக்குப் போய் பர்ஸும், கறுப்புத் துணியில் பைண்ட் செய்த "த நைட் ஈஸ் ஹெவி" என்ற இங்கிலீஷ் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு, கதவைப் பூட்டித் திரும்பவும் ஓடிச்சென்றபோது, தேவி ரெஃப்ரெஷ் மெண்ட் ரூமில் நுழைந்து கொண்டிருந்தாள்.



அங்கே 'கேபினி'ல் ஒரு நாற்காலி போட வைத்திருந்தாள். அவள் மடியில் என் குடை இருந்தது. நான் ஒரு நாற்காலியைப் போட வைத்து அவள் அருகில் உட்கார்ந்தேன்.

பையன் கதவருகே ஆஜரானான். இரண்டு 'உல்லாஸ்' சர்பத்துக்கு ஆர்டர் செய்தேன்.

"சௌமினியும் மத்தவங்களும் வந்துட்டிருப்பாங்களா?"

அவர்கள் முன்னரே வந்து விட்டார்கள். பார்க்கில் இருந்தார்கள். நாங்கள் அறியவில்லை. நான் சொன்னேன்.

"நாம வெளியிலே போவோம்."

"வேண்டாம்."

தேவிக்கு ஆகக் கூடி ஒரு சோம்பல். அடிக்கடி என்னைப் பார்ப்பதும், முடியாமல் மேஜை மேல் கவிழ்ந்திருப்பதுமாக இருந்தாள். என்னை வாரித் தழுவு என்று ஒரு பாவம்.

பையன் இரண்டு கிளாஸில் சர்பத் கொண்டு வந்தான்.

தேவி குடித்துவிட்டு கிளாஸை நீட்டினாள். அதில் கொஞ்சம் மிச்சம் இருந்தது.

எனக்கு அந்த மீதியை வாங்கிக் குடிக்க வேண்டும் என்றும், பிறகு அந்த கிளாஸை உடைக்க வேண்டும் என்றும் தோன்றியது.

ஆனால் ஒரு மாதிரி களித்த முகத்தோடு பையன் எங்களைப் பார்த்தபடி கதவருகிலேயே நின்றுகொண்டிருந்தான். அவன் கிளாஸை வாங்கினான். என்னுடையதையும்.

நான் பணம் கொடுக்கப் போனேன். தேவி ஒரு முறைப்பான பார்வையோடு,

"நான் கொடுத்தா ஏத்துக்க மாட்டீங்களா?"

"ஓ... கொடு."

தேவி ஐந்தணா கொடுத்தாள். சும்மா ஓரணா அவனுக்கு.

"நீ அங்கே போய் நில்லு. செவப்புப் பொடவையோட ஒரு பொண்ணும் வேற சில பொம்பளைங்களும் வந்தா சொல்லணும்."

அவன் நகர்ந்தான். இருந்தாலும் அவன் எங்களை இடையிடையே கவனித்துக் கொண்டிருந்தான்.

"நான் ஒங்களுக்கு ரொம்ப நம்பிக்கை ஊட்டிட்டேனா?" தேவி கேட்டாள்.

"என்ன நம்பிக்கை?" என்னை வாரித் தழுவு என்ற நம்பிக்கை மாத்திரம். நான் சொன்னேன்.

"ஒரு நம்பிக்கையும் ஊட்டலே. தேவி சுதந்திரமானவ."

நான் தேவியின் கால் விரலைத் தொட்டு, தொட்ட கையைத் தலையில் வைத்துக் கொண்டேன்.

"சே... என்னது இது?" அவள் சீறினாள்.

"மன்னிக்கணும்."

"இதெல்லாம் கூடாதுன்னு நான் சொல்லலே?"

"தண்டனை குடுத்துடு."

அப்போது தேவி ஒரு சிறிய சம்பவத்தைப் பற்றிச் சொன்னாள்.

பள்ளிக்கூடத்தில் இருந்து ராஜினாமா செய்த காரணம். முற்போக்கு இலக்கியவாதிகளை எதிர்த்துக் கட்டுரை வெளியிட்ட இளைஞனாகிய அந்த ஆசிரியன் காதல் பிரகடனங்களுடன் தேவியை நெருங்கி வந்தான்.

தொல்லை தாங்கமுடியாதபோது தேவி ஹெட்மாஸ்டரிடம் சொல்லி விட்டாள்.

"இங்கே பஷீரைப் பற்றிப் புகார் செய்ய ஹெட்மாஸ்டரும் இல்லை. யாருமில்லை" என்றான்.

"இருக்காரே! கலைஞனாகிய பஷீரிடம் சொல்லு. இல்லேன்னா அந்த செருப்பைக் கழட்டி என்னை அடி."

பின்னியிருந்த தலைமுடியைத் தூக்கி தோள் மேல் போட்டுக்கொண்டாள். அதையும் பிடித்தவாறு என்னைப் பார்த்தாள். அந்த அபாரமான கூந்தல் நுனி ஒரு குலை போல சற்று சிவந்திருந்தது. எனக்கு அதை முத்தமிடத் தோன்றியது. ஒரு கொதிப்பு.

நான் சொன்னேன்.

"நீ கூந்தலைக் கட்டி வைக்கக் கூடாது."

"கட்டி வைப்பேன்."

அப்போது ரிக்ஷாக்காரன் ஆஜரானான். நான் சொன்னேன்.

"லெட் ஹிம் கோ... வி வில் ஹயர் அனதர் ரிக்ஷா."

"நோ... ஐ வாண்ட் டு கோ."

"ப்ளீஸ் வெய்ட்... லெட் ஹிம் கோ."

தேவி அவனுக்குச் சொன்னதை விட அதிகப் பணம் கொடுத்து அனுப்பினாள்.

"என்னப்பா இது... உன் வயிற்றை ஆபரேஷன் பண்ணினதிலே ஆறு ஸ்பூன் இருந்தது! எப்படி?"

"நீங்கதானே டாக்டர், ஏதோ டானிக்கைக் கையிலே கொடுத்து, டெய்லி ஒரு ஸ்பூன் சாப்பிடுன்னீங்க?"

— சீத்தா தம்பி



பிறகு சட்டென்று இங்கிலீஷில் கேட்டான்.

"ஹாவ் ஐ கிவன் யூ எனி ஹோப்?"

தந்திருக்கிறாய் என்று சொல்ல வேண்டுமா? பெண்ணே! நான் சொன்னேன்.

"சரஸ்வதி தேவி ஒரு நம்பிக்கையும் தரல்லே. நான் காத்துட்டுக் கிடப்பேன்."

"என்றால் நிரந்தரமாகக் காத்திருங்க."

'எடர்னிடி.' இதுதான் அவன் உபயோகித்த சொல்.

"சரி... நித்தியத்துக்கும் காத்திருப்பேன்."

"சே... அப்படி எல்லாம் சொல்லாதீங்க."

அப்புறம் என்னதான் நான் சொல்லணும் பெண்ணே! நான் தொடர்ந்தேன்.

"நான் நேசிக்கிறேன். நீ என்னை நேசிக்க வேண்டாம்!"

தேவி சிரித்தாள்.

"பீபியைக் கட்டிக்க பாதி மனசு உண்டு. இல்லே?"

"ஆமாம். என் பாகத்தில் நின்று. நான் நேசித்துக் கொள்வேன்."

"எப்படிப்பட்ட குழப்பம்னு கொஞ்சம் யோசியுங்க."

"மொதல்லே அந்தக் கடிதத்தை நீ அனுப்பலேன்னா. நான் என்னோட ரகசியத்தை ஒருக்காலும் வெளியே சொல்லி இருக்க மாட்டேன்."

"நான் ஒரு மடச்சி!" மலர்ந்த முகத்தோடு மேஜை மேல் குனிந்தாள்.

"யெஸ். ப்ளடி ஃபூல்" என்றேன்.

"எனக்கு இனிமே பதில் போட வேண்டாம்னு கடிதம் போட்டேன் இல்லே? அன்னிக்கு நான் அழுதேன். யுகக் கணக்கா. ப்ளடி ஃபூல்!" என்றாள்.

"நான் கடிதம் போடக்கூடாதுன்னு எழுதினப்புறம் ஏன் அழணும்? தேவி உண்மையைச் சொல்லு."

தேவி தலை குனிந்து வெடித்துச் சிரித்தாள்.

"தேவி... நாம்ப என் வீட்டிற்குப் போகலாம்."

"ஐயோ... வேண்டாம். சொஸைட்டி?" என்றாள்.

"எந்த சொஸைட்டி?" கேட்டேன்.

"இந்த பரீட்சை முடிஞ்சதும் நான் மெட்ராஸ் போறேன்."

"நானும்கூட வருவேன்."

"வாங்க... அங்கே சொஸைட்டி அவ்வளவு பிரச்னை இல்லே. ஐ வில் எண்டெர்டெய்ன் யூ தேர்!"

நான் அந்தப் புத்தகத்தைக் கொடுத்தேன். தேவி மறுத்தாள்.

"வேண்டாம். எதுக்காக எனக்கு இந்தப் புத்தகங்களை எல்லாம் தரணும்?"

"சும்மா... வாசிக்கத்தான்."

"எங்கிட்டே பணம் இருக்கு. வாங்கி வாசிச்சுக்கறேன்."

"ஓ... இருந்தாலும் இது நான் கொண்டு வந்ததில்லியா?"

தேவி வாங்கினாள். அதில் ஒரு பக்கத்தில் என் பெயர் எழுதியிருந்தேன்.

"நான் என் பெயரை ஒரு காகிதத்தில் எழுதி ஒங்க பேருக்குப் பக்கத்திலே ஒட்டி வைக்கட்டுமா?"

சரஸ்வதி தேவி பஷீர்... ஆகப் போகிறேன் என்றா?

"ஓயெஸ்... இஷ்டம் போலச் செய்."

"ஐயோ... சௌமினியும் மத்தவங்களும்."

"நாம போய்ப் பார்ப்பமா?"

"வேண்டாம்... என்னிக்குப் போறாப் பிலே?"

"நாளைக்கு."

"ஆகட்டும்... அந்தக் கட்டுரையை கேஎஸ். பிரஸ்ஸிலே சேத்துட்டுப் பாத்தப்பறம் போனாப் போறும்."

"பரவால்லே."

"அப்போ ஒங்க தங்கையோட கல்யாணத்தோட சேத்து ஒங்க கல்யாணம் நடக்கும்... இல்லியா?"

"என்னோடதா...? அது முடிஞ்சப்பறம்..."

"ஓ" அவ்வளவுதான் சொன்னாள்.


கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று சொல்லாதது ஏனோ! பெண்ணே!

நான் சொன்னேன்.

"தேவி... நான் போய் எழுதறேன்... ரெண்டு அட்ரஸுக்கும்."

"வீட்டுக்கு இங்கிலீஷிலே எழுதினாப் போதும். முடிஞ்சா... இல்லேன்னா காலேஜுக்கு அனுப்புங்க. போய் சகோதரியை நான் விசாரிச்சதா சொல்லணும்."

(தொடரும்)



"நீங்க ரஜினி ரசிகரா இருக்கலாம். அதுக்காக 'ஒன் வே' டிராபிக்கில் வந்து விட்டு 'எப்போதுமே என் வழி தனி வழிதான்'னு சொல்றது நல்லா இல்லே."

— பிரியதர்சினி

போட்டியிடும்
பாட்ணாஜில் / மம்தா குல்கர்னி!

வாயால் கெடுபவர்கள்

சகன்புஜ்பலுக்கு ஓட்டை வாய்தான்! இல்லாவிட்டால் பால்தாக்கரேவைப் போய் சோனியா காந்தியுடன் ஒப்பிடுவாரா? இருவருமே ஆட்சி வெறி பிடித்த

• மம்தா குல்கர்னி



சர்வாதிகாரிகள் என்றிருக்கிறார். உடனே சிவசேனா எம்.எல்.சி ஷிஷிர் ஷிண்டே அவரைக் கடித்துக் குதறிவிட்டார். 'லட்சக் கணக்கான சைனிக்குகள் அவர் காலில் விழுந்து கதறியும் சி.எம். பதவியை ஏற்க மறுத்த அவரெங்கே? கட்சித் தலைவர் பதவியையே நாலு நாளைக்கு மேல் தியாகிக்க முடியாமல் நாடகமாடிய சோனியா எங்கே? நாங்கள் எங்கள் தலைவரை எதிர்த்துப் பேசியதேயில்லை; சோனியாவை எதிர்த்து காங்கிரஸில் ஒரு கோஷ்டியே கிளம்பியிருக்கிறதே?" என்றெல்லாம் சாடியிருக்கிறார். ஹூம்! தாக்கரே திடீரென்று அரசியல் சன்னியாசம் வாங்கிக் கொண்டதும், கணேஷ் நாயக் தலைமையில் ஒரு கோஷ்டி பிரிந்து சென்று புதுக் கட்சி ஆரம்பித்ததும் எப்படி இவரது நினைவிலிருந்து நழுவியது? இந்த அரசியல்வாதிகளுக்கே வாயும் அதிகம்; மறதியும் அதிகம்!

கீதை வேண்டாம் போதை வேண்டும்!

பத்தாயிரம் அடி நீளம், எழு நூறு கிலோ எடை கொண்ட கையெழுத்துக்களைப் பற்றித் தெரியுமா? Parle-G காரர்கள், ஒரு பூதாகர பேட், காகிதங்கள் சகிதம், நம் கிரிக்கெட் வீரர்களுக்கென்று ஊக்கக் கையெழுத்துக்களை தேடி அலைந்து கொண்டிருந்தனர். நல்ல ரெஸ்பான்ஸ்! இது BCCI வாயிலாக லண்டன் சென்று அஜாரை அடையும்! வி.ஐ.பி. 'கையெழுத்துக்களில் ஒன்று ஷபனாவினுடையது- இந்தியா தோற்றாலும் பரவாயில்லை; நன்றாக விளையாடினால் போதும் என எழுதிக் கையெழுத்திட்டிருக்கிறார். நன்றாயிருக்கிறதே? 'முடிவைப் பற்றிக் கவலைப்படாதே கடமையை ஒழுங்காகச் செய்' என்ற கீதோபதேசமெல்லாம் மற்றவர்களுக்காகத்தான்; நமக்கு 'வெற்றி' என்ற போதை தலைக்கேறியல்லவா கிடக்கிறது? விளையாட்டு முன்னே பின்னே இருந்தாலும் பரவாயில்லை; எப்படியாவது 'கப்'பை ஜெயித்துக் கொண்டு வந்தால்போதும் என்பதுதானே 100 கோடி இந்தியர்களின் ஜெபம்?

'வெயிட்'டானவர்களுக்கு வேலை வெயிட்டிங்

"ரொம்ப வெயிட் போட்டு விட்டோமே' என்று மும்பையில் இனி யாரும் கவலைப்பட வேண்டாம்;


ஜெஸிகா லால் புண்ணியத்தில், இவர்களுக்கு "பவுன்சர்" வேலை தயாராகக் காத்திருக்கிறது. 'பப்'ஸ், 'டிஸ்கொதே க்ளப்'ஸ், இதர "ஸ்பிரிடெட்" நடன அரங்கங்களில், குடித்துவிட்டு கலாட்டா செய்பவர்களை நாசூக்காக அப்புறப்படுத்துவதற் கென்றே பிரத்யேகமாக அமர்த்தப்பட்டவர்கள் இந்த பவுன்சர்கள். ஃபாஷன் பிஸ்ட்ரோவிலிருக்கும் 27 வயது டைசன் உண்மையிலேயே பாக்ஸிங் சாம்பியன்! அவர் பார்வைபட்டே பீர் உறைந்து விடுமாம்! சண்டை துவங்குமுன்னேயே இவர் மோப்பம் பிடித்து விடுவாராம்! தனியாக, துணையில்லாமல் வருபவர்கள்தான் டேஞ்சர் ரகமாம்; இவர்களை வாயிலிலேயே வடிகட்டி விடுகிறாராம்; சிலரை அரங்கிலே பிடிக்கிறார். "பவுன்சர் வேலை எளிதன்று; காலிகளை விரட்டும் வேலைதான்; ஆனால் ஜாலியாகப் பொழுதைக் கழிக்க வருபவர்கள் நம்மைப் பார்த்தே காலியாகிவிடக் கூடாது" என்கிறார். அதாவது, காலிகளை ஜாலியாகக் 'காலி' செய்ய வேண்டும்...ம்?

பாலிவுட் ப்ளாஸ்டர்ஸ்

காற்றோடு போய் விட்டது என நாம் நினைத்துக் கொண்டிருந்த சல்மான்கான் விவகாரம் மறுபடியும் தலைகாட்டியிருக்கிறது; வழக்கு கோர்ட்டுக்கு வந்திருக்கிறது. குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஏழு வருஷம் கடுங்காவல்! கம்பி எண்ணுவது அலுத்துப் போய் எங்கேயாவது சுயசரிதை எழுத ஆரம்பித்து விடுவாரோ என்று இப்போதே கவலையாயிருக்கிறதே?

அடுத்த கவலை ஆடைக் குறைப்பு ராணி மம்தா குல்கர்னியைப் பற்றியது. வருகின்ற தேர்தலில், பாட்னா லோக் சபை சீட்டுக்கு, RJD வேட்பாளராக லாலுபிரசாத், மம்தா குல்கர்னியை அறிவித்திருக்கிறார்! தம் மீதிருந்த மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் மம்தாவின் பெயரும் அனாவசியமாக அடிபட்டதால், லாலு மனம் நொந்து, அதற்கு ஈடு செய்யும் வகையில் இந்த அறிவிப்பு செய்திருக்கிறார். மனைவி ராப்ரி இதைக் கேட்டு சிரித்திருக்கிறார். இன்னும் யாரெல்லாம் சிரிப்பாய் சிரிக்கப் போகிறார்களோ?

மூழ்கும்போதும் பிசினஸ்!



• சல்மான்கான்

ரோம் பற்றி எரிந்தபோது நீரோ மன்னன் ஃபிடில் வாசித்த கதையாக, தாங்கள் பயணித்த 'சன்விஸ்டா' கப்பல் கடலில் மூழ்குகையில், கப்பலின் இசைக்குழு, 'டைடானிக்' டைட்டில் ஸாங்கை இசைக்க, பயணிகளெல்லாம் 'தீம் ஸாங்கை' பாடிக் கொண்டு நின்றிருக்கின்றனர். மும்பையிலிருந்து SOTC ஏற்பாடு செய்திருந்த இந்த உல்லாசக் கப்பலில் 10 'டெக்'குகள், 5 'வர்ல்பூல் பாத்'கள், ஒரு ஸ்விம்மிங் பூல், 'பார்'கள், 'காஸினோ'க்கள்! இதன் இன்ஜின் தீப்பிடித்தபோது கப்பல் மலாக்காவில், பினாங்கு துறைமுகத்தருகேயிருந்தது. ஆனால் போதுமான லைஃப் ஜாக்கெட்டுகள், லைஃப் போட்களிருந்ததால், டைடானிக்கில் இருந்த உயிர்ச்சேதமெதுவுமில்லை! 'நாங்கள் எல்லோரும் டைடானிக் படம் பார்த்திருந்ததால், கலவரப்படக் கூடாது என்பதில் உறுதியாயிருந்தோம்!' என்கின்றனர் செத்துப் பிழைத்தவர்கள். ஒருவர் எல்லாவற்றையும் வீடியோ எடுத்து வைத்துக் கொண்டு, டீ.வி.க்கு விற்று காசு பண்ணப் போகிறாராம்! மும்பைக்காரர்களுக்கே அலாதியான பிஸினஸ் மூளைதான்!

— ஜெயஸ்ரீ ராஜ்


(87-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லாச் சுடச்சுட எண்ணெயக் காச்சிக் காச்சி ஊத்துனானுவளா...?"

"இக்கிக்" என்று உலகு சிரித்தபோது இருமல் வந்தது. "வேணாண்டா கண்ணு" என்று தாத்தா நெஞ்சை உருவி விட்டார்.

மறுநாள் அவன் செத்துப் போனான்.

எத்தனை சோகமான நாட்கள் அவை. தாத்தாவின் உயிர் பிரிந்த நாள் அது. உலகமே இருண்ட நாள். தாத்தாவைச் சமாதானப்படுத்தவே முடியல்ல. தலைல தலைல அடிச்சிக்கிட்டு அழுதாரு. பிரமை பிடிச்சாப்ல கலங்கி நிக்காரு. அப்பிடி இடிஞ்சி போயி அவரு நின்னு ஊரே பாத்ததில்ல... கிழவி செத்தப்பக் கூட தாத்தா சமாளிச்சிட்டாரு. இது கண்ணு போயி கண்ணு வந்தாப்லயும், திரும்ப அந்தக் கண்ணப் பறிகொடுத்தாப்லயும்ல ஆயிட்டு.



"என் மருமக நான் எது சொன்னாலும் உடனே செய்திட்டுத்தான் மறுவேலை பார்ப்பா!"

"அப்படி என்ன நீ உன் மருமகள்ட்டே சொல்லுவே?"

"நீ சும்மா இரும்மா, வேலையெல்லாம் நான் பார்த்துக்கிடறேன்பேன். உடனே சும்மா இருந்துடுவா!"

– சித்தா தம்பி

சோறு தண்ணி எடுக்காமல் கொள்ளாமல் தாத்தா அப்படியே கிடந்தார். யார் சொல்லியும் கேக்கல. மனுசன் அடங்கறாப்ல இல்ல. மனுசன்னா கஷ்டம் வர்றது தான். "எய்யா, நாங்களே மவனைப் பறிகொடுத்திட்டு நிக்கம்யா.. நீரு வேறு இப்பிடிச் சோறெடுக்காம, உறங்காம கொள்ளாம உடம்பப் போட்டு வருத்திக்கிட்டா நாங்க என்னா செய்யிறது? நாம வாங்கி வந்த வரம் அப்டின்னுதான் நெனைச்சித் தேத்திக்கிறணும்... எழும்புங்கய்யா.. ஒரு வாய் தேத்தண்ணி குடிப்பீங்க" என்று மகன் ரொம்ப வற்புறுத்தினான்.

அவனைப் பாக்கவும் பாவமாத்தான் கெடக்கு. தாத்தாவை அவன் எத்தனை மட்டு மருவாதியா நடத்துறான். தினசரி அவர் செலவுக்காக – ஒரு பொடிமட்டை. டீக்காசு. கூட ரெண்டு பேரோட டீ சாப்பிடலாம். வெத்திலை வாய்க் கசப்புன்னாத் தேவைப்படலாம் – அவன் காசு கேட்டுத் தந்திட்டுத்தான் வெளியால போவாப்ல. மருமகளிடம் கேட்க அவர் சுணங்கினார் என்று தெரிந்து வைத்திருந்தான். சூட்சுமந் தெரிந்தவன்தான். பையன் சொன்னானேன்னு எழுந்து பல் விளக்கித் தேத்தண்ணி குடித்தார். மனசெல்லாம் பேரப் பிள்ளைதான். அவனை மாரோடு அள்ளி எடுத்து மண்ணுக்குள் வைத்ததை நினைக்க நினைக்க மனம் ஆறவில்லை. இதை எப்படி மறக்க என்று திகைப்பாய் இருந்தது.

அன்றிரவு அவர் ஒரு கனவு கண்டார். இக்கிக் என்று சிரிப்பு. தூக்கிவாரிப் போட்டது. உலகு உக்காந்து சிரிசிரியென்று சிரிக்கிறான். "ஏல என்னாச்சி இப்பிடிச் சிரிக்கே?"

"அந்த அலிபாபா கதை..." என்கிறான் உலகு.

அதற்குள் விழிப்பு வந்து விட்டது. கோட்டிக்காரப் பய, சாகுற வயசாடே இது உனக்கு... நினைக்கவே அழுகை வந்தது. எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தார். மகனும் மருமகளும் இன்னும் துட்டிக்கு வந்தவர்களும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். திடுதிப்புனு என்ன அலிபாபா கதை ஞாபகம். உலகு என்னவோ சொல்ல வந்தாப்ல இருந்தது. அதற்குள் முழிப்பு வந்திட்டது. கதையிலேயே அவனுக்குப் பிடித்தமான இடம் அந்தக் குகை திறப்பதுதான். 'திறந்திடு சிசேம்... குகை திறந்தால் என்ன வெளிச்சம். என்ன வெளிச்சம்....' என்பார். அத்தனை ரசிப்பான் அவன்.

மறுநாள் காலை வீட்டில் விழித்துக் கொண்டபோது எல்லாரும் ஆச்சரியமான ஒரு காட்சியைப் பார்த்தார்கள்.

சக்கரம் சுற்றிக் கொண்டிருந்தது. கிழவன் மண் குழைத்துக் கொண்டு வேலை செய்ய ஆரம்பித்திருந்தான். அவன் கையில் நடுக்கமே இல்லை. எப்படித்தான் அந்தப் பழைய வேகத்தை எட்டினானோ... என்ன பொம்மை வரப்போகிறதோ என்று எல்லாரும் பார்த்திருந்தார்கள். காத்திருந்தார்கள்.

கிழவனோ யாரையும் கவனிக்கவே இல்லை. ●





படங்களை மாட்டி வைத்திருக்கும் த.மா.கா. எம்.எல்.ஏ!

● சமீபத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தில்லியில் கூடியது அல்லவா! அதில் கலந்து கொள்ள தமிழ்நாட்டிலிருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட காங்கிரஸ்காரர்கள் சென்றிருந்தார்கள். கூட்டம் முடிந்த பிறகு எல்லோரும் சோனியா காந்தியைச் சந்திக்க அவரது இல்லத்துக்குச் சென்றிருந்தனர். அப்போது சென்னை புறநகரைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ் பிரமுகர் "ராஜீவ் கொலையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள நளினிக்கு தூக்கை ரத்து செய்ய மனிதாபிமான அடிப்படையில் சோனியா உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம். அவரது வேண்டுகோளைக் கேட்டதும் மற்றவர்களுக்கு ஒரே ஷாக். சோனியா வீட்டை விட்டு அனைவரும் வெளியே வந்ததும் வட சென்னையைச் சேர்ந்த பெண் கவுன்சிலர் ஒருவர் அந்தப் பிரமுகரின் கன்னத்தில் பளாரென்று விட்டாராம் ஓர் அறை. "ஏண்டா அம்மாகிட்ட என்னதான் கேக்கறதுன்னு விவஸ்தையே இல்லையா?" என்று துவங்கி 'தூய தாய் மொழியில்' பயங்கர அர்ச்சனையாம். "காங்கிரஸின் விஜயசாந்தி" என்று இப்போது அந்த பெண் கவுன்ஸிலருக்கு பெயர் வைத்து விட்டார்கள்.


● தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகள் நடத்தி அரசுப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது. கேள்வித் தாள்கள் அவுட் ஆவதிலிருந்து தேர்வு முடிவுகளை அறிவிக்கும் வரை கமிஷனின் செயல்பாடுகள் பற்றி அவ்வப்போது கிசுகிசுக்கள் வருவதுண்டு. சில காலம் முன்பு 3,000 குமாஸ்தாக்களுக்கான தேர்வுகளை நடத்தியது கமிஷன். மூன்று லட்சத்திற்கு மேற்பட்டோர் எழுதினார்கள். இந்தத் தேர்வு முடிவுகளைப் பற்றிய கிசுகிசுக்கள் உலா வரத் துவங்கிவிட்டன. தேர்வு எழுதியவர் என்ன மார்க் வாங்கியிருந்தாலும், கம்ப்யூட்டரில் அவற்றை ஏற்றும் போது நல்ல மெரிட்டில் பாஸ் செய்தது போல் மார்க்கை உயர்த்திப் பதிவு செய்ய ஐம்பதாயிரம் வசூல் செய்கிறார்களாம்! தேர்வு எழுதியவர்களின் தந்தைக் குலங்கள் புரோக்கர்களைத் தேடி கமிஷன் அலுவலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள்.

● வட சென்னையைச் சேர்ந்த த.மா.கா. எம்.எல்.ஏவாக இருந்தாலும் வீட்டில் கலைஞர், ஸ்டாலின் படங்களை மாட்டி வைத்திருப்பவர் அவர். சமீபத்தில் தமது ஆதரவாளர்களுடன் முட்டுக்காட்டில் ஆலோசனை நடத்தினாராம். "தலைவர் என்ன லைன் எடுக்கப் போறார்னு தெரியலை. தேர்தல் தேதி அறிவிச்சதும் நான் ஒரு முடிவு எடுக்கலாம்னு இருக்கேன். வட சென்னை பாராளுமன்றத் தொகுதியில் பா.ஜ.க.-தி.மு.க. அணிக்கு ஆதரவாக வேலை செய்யப் போறேன்!" என்று சொல்லி ஆதரவு கேட்டாராம். "நீ சொன்னதைக் கேக்கறோம் தலைவா" என்று சொல்லி விட்டார்களாம் ஆதரவாளர்கள். "மூன்று வருட தி.மு.க. ஆட்சியில் இவரைவிட பயன் பெற்றவர்கள் யாருமில்லை. எனவே, இது எதிர்பார்த்த ஒன்றுதான்" என்கிறார் த.மா.கா. பிரமுகர் ஒருவர்.

● தி.மு.க.-பா.ஜ.க. உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியில், தொகுதிகளைப் பகிர்ந்து கொள்வதில் கொஞ்சம் சிக்கல் வரலாம். இதனால் நேரடியாக கூட்டணிக் கட்சிகளுடன் பேசி தொகுதிப் பங்கீடு செய்து கொள்ளாமல் பா.ஜ.க.விடம் இருபது தொகுதிகளைக் கொடுத்துவிட்டு, ம.தி.மு.க.-பா.ம.க.வுடன் அவர்களே பேசி முடிவு செய்து கொள்ளச் சொல்லலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறதாம் தி.மு.க. இதற்கிடையில் தென் சென்னைத் தொகுதியில் காங்கிரஸ்-அ.தி.மு.க கூட்டணியின் சார்பாக பிரபல ஆங்கில தினசரியைச் சேர்ந்த ஒரு பெண்மணியை நிறுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம். பண்ருட்டியார் ஜெ.வை ஆதரிக்க முடிவு செய்திருப்பதால் தமிழ் பா.ம.க. தீரன் தமது முக்கியத்துவம் குறைந்து விடுமே என்று குழம்பியிருக்கிறாராம்.

— சஞ்சயன்

காதில் விழுந்தவை



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 950/- (Air Mail)


வழங்குகிறோம்
அஸ்வினி
ஹோமியோ ஹேர் ஆயில்
புதுப்பொலிவுடன்
நிரூபணமான
தனித்தன்மையுடன்
ASWINI
HOMEO
HAIR OIL
புதிய, மேம்படுத்தப்பட்ட அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில்-கேசத்தின் நலன்காக்கும் தன்மை கொண்டது. இதனை அனுதினமும் பயன் படுத்துங்கள். இதன்மூலம் முழுக்குடும்பத்திற்கும் ஆரோக்கியமான மற்றும் அழகான கேசத்திற்கான உத்திரவாதத்தைப் பெறுங்கள்.
அஸ்வினி ஹோமியோ & ஆயுர்வேதிக் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
5-283/1, "வஜ்ரா ஹௌஸ்", மூசாபேட், ஹைதராபாத் 500 018.
Website : www.aswini.com E-mail : info@aswini.com
அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில்- குடும்பத்தின் கேச பராமரிப்பு.
MAC/AHAP/109/TM

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57
* Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161
* Registered as a Newspaper in Srilanka

